# இலக்கணம் இனிக்கிறது



முனைவர் இரா. திருமுருகன்

# இலக்கணம் இனிக்கிறது

முனைவர் இரா. திருமுருகன்

'எழிசைச் சூழல்'
62, மறைமலை அடிகள் சாலை,
புதுச்சேரி–605001.

முதற்பதிப்பு : தி. ஆ. ௨0௩௭, மேழம், (ஏப்பிரல், 2006)

உரிமை : ஆசிரியர்க்கு

பக்கம் : 160

விலை : உருபா 55.00

வடிவமைப்பு : பாவலர் பண்ணை
62, மறைமலை அடிகள் சாலை
புதுச்சேரி–605001

அச்சிட்டோர் : நண்பர்கள் தோட்டம் மறுதோன்றி அச்சகம்
C/o. மைக்ரோ செகண்ட்,
1–B, அண்ணா சாலை, ( முதல் மாடி )
புதுச்சேரி – 605 001.

நூற்கடல் **தி. வே. கோபாலையர்**
பிரஞ்சு ஆய்வுக் கழகம்
புதுச்சேரி

## அணிந்துரை

அன்பர் திருமுருகனார் வரைந்துள்ள கட்டுரைத் தொகுப்பு நூலை முழுதும் வாசித்துச் சுவைக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். பண்டையோர் உரைத்த தண்டமிழ் யாப்பில் கொண்டிலாத குறியினோரைக் குறிக்கொளுவதற்கும் தொல் லைப்பனுவல் துணி பொருள் உணர்ந்த நன்மக்களை நகுவிப் பதற்கும் வரையப்பட்ட இவ்விலக்கண நூல் புலத்துறை முற்றிய இவ்வாசிரியரின் புலம் பயில் தெளிவினையும் புகலுதல் வன்மை யையும் நன்கு புலப்படுத்துகிறது.

சொல்லிலக்கணம் ஒன்றினையே இலக்கணமாகக் கொள்ளும் ஏனைய மொழிகள் போலாது, எழுத்திலக் கணத்தையும், அகம் புறம் என்ற இரு பாலதாகிய பொருளிலக் கணத்தையும், பொருள் புலப்பாட்டிற்கு மிகுதியும் உதவும் உவமம் முதலிய அணியிலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தோடு சேர்த்துக்கொள்ளுவது நம் தமிழ்மொழி.

ஆதலின், தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழை ஆயும் புலமக்கள் இலக்கணச்செய்தியும் பாடல்களும் இணைந்து வழங்கும் பொருட் பகுதியில் பழகிய பட்டறிவானே எழுத்துச் சொல் என்பனவற்றை விளக்குவதற்குத் தாம் வரைந்த நூற்பாக்களையும் தொடை நயமும் ஓசை நயமும் அமையப் பயில்வார்க்கு மிகு சுவை பயக்கும் வகையில் அமைத்துள்ளனர்.

*அந்தரத்து எழுதிய எழுத்தின் மான*
*வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்'*

என்ற தொல்காப்பிய நூற்பா அடிகளில் எதுகைத் தொடை, மோனைத் தொடை, ஒழுகு வண்ணம், உவம அணி என்பன அமைந்துள்ளமை காண்க.

இங்ஙனமே தொல்காப்பியம் நன்னூல் முதலியவற்றின் நூற்பாக்களில் தொடை நயங்களும், அணி நலங்களும், ஓசை நயங்களும் அமைந்திருக்குமாற்றை ஆசிரியர் பல எடுத்துக் காட்டுக்களான் விளக்கியுள்ளார்.தொல்காப்பியத்தின் மாட் டேறுகளின் வனப்பையும் குறிப்பிட்டுள்ளார். 'சாவ என் மொழியீற்று உயிர்மெய் சாதலும் விதி', 'தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும் காய் வரின்' முதலிய தூற்பாக்களின் சொல்லழகினைத் திறம்பட விளக்கியுள்ளார். பருத்திக் குண்டிகையை விளக்கியுள்ள திறம் நன்று.

இலக்கண நூல் உரைகளில் மேற்கோளாகக் காணப் படும் பாடல்களில் மிகு சுவை பயப்பன பல உள என்பதனைச் சில எடுத்துக் காட்டுகளால் நிறுவியுள்ளார். சுருங்கச் சொல்லின் இனிக்கும் இலக்கணம் என்ற முதற் கட்டுரையைக் கூர்ந்து நோக்குவார், அதற்கு முன் தமக்கு இலக்கணத்தில் சுவை காணும் நோக்கு இல்லாதிருப்பினும் அக்கருத்தை மாற்றி இலக்கணச் சுவைஞராவர் என்பது ஒருதலை.

மரபு பிறழ்வுகள் என்ற தலைப்பில், வளரும் மொழியில் கொள்ளத்தக்க பிறழ்வுகள், தள்ளத்தக்க பிறழ்வுகள் ஆகியவை விரிவாக ஆய்ந்து விளக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரை மரபு பிறழ்வுகள் பற்றி இவ்வாசிரியர் கருத்தை அறியப் பயன்படும் என்று கொள்ளற்பாலதே அன்றி இவ்வாசிரியர் இவை பற்றிக் கூறுவனதாம் முடிந்த முடிவுகள் என்று கூறுவதாகக் கொள்ளக் கூடாது. மொழியின் தூய்மை இயன்ற அளவு பாதுகாக் கப்படல் வேண்டும் என்ற தமிழ்ச் சான்றோர் கருத்தை விளக்க எழுந்ததாகவே இக்கட்டுரை கொள்ளத் தக்கது.

எழுத்தறியார் தமிழில் யாப்பிலக்கண அமைப்புகள் பற்றி எழுதப்பட்ட மூன்றாம் கட்டுரை யாப்பு விதிகள் புலவரால் செயற்கையாக வலிந்து அமைக்கப்பெறவில்லை என்பத னையும், பொதுமக்களின் பேச்சு வழக்கில் பல வகைப்பட்ட



செய்யுள்களே யாப்பிலக்கண நூலாரால் முறைப்படுத்தி அசை, சீர், அடி, தளை, தொடை, பா, இனம் என வரையறுத்து உரைக்கப் பட்டன என்பதனையும், இயற்கையோடு இணைந்து அமைந்த இவ் யாப்பு விதிகள் புலவரால் புறக்கணிக்கத் தக்கன அல்ல என்பதனையும் எடுத்துக்காட்டுக்கள் பலவற்றான் விளக்குகிறது.

பொதுவாக இலக்கணம் பற்றிய செய்திகளை மற்றவர் சுவைக்கும்படி விளக்கி எழுதியுள்ள இவ்வாசியரின் இத்தமிழ்ப் பணி காலத்துக்குத் தேவையான பணியாகும். இந்நூலைத் தமிழ் மக்கள் பயின்று பயன் பெறுவாராக.

**தி. வே. கோபாலையர்**
புதுச்சேரி

# முன்னுரை

இலக்கணம் இனியது. இன்றைய மாணாக்கர் பலருக்கு அது கசப்பாகத் தோன்றுகிறது. காரணம், இன்றுள்ள பாடத் திட்டம், பாடநூல், கற்பிக்கும் முறை ஆகியனவே.

இலக்கண இனிமை இருவகையது. ஒன்று : இலக்கணச் செய்திகளின் இனிமை. மற்றொன்று: இலக்கணத்திற் காணப் படும் 'இலக்கிய' இனிமை. பண்டையோர் உரைத்த தண்டமிழ் இலக்கண நூற்பாக்களிலும் உரைகளிலும் ஆங்காங்கே காணப்படும் இலக்கண நுட்ப இனிமைகள் முதல் வகை. அந்நூற் பாக்களிலும் மேற்கோட் செய்யுள்களிலும் அமைந்து கிடக்கும் இலக்கிய இனிமைகள் இரண்டாம் வகை.

'கடுத்தின்னுதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றியவாறு போல' இலக்கணச் செய்திகளின் இனிமையில் ஈடுபாடு இல்லாதவர்க்கு ஈடுபாட்டினை ஏற்படுத்தலாம் என்பது என் நம்பிக்கை. இதன் விளைவாகக் 'கேழ்வரகில் நெய் ஒழுகுகிறது' என்ற தலைப்பில் சில ஆண்டுகட்கு முன் யான் பேசிய பேச்சினை '**இலக்கணம் இனிக்கிறது**' என்ற தலைப்பில் எழுதி இதில் முதற் கட்டுரையாகச் சேர்த்திருக்கிறேன். அதுவே நூற்பெயராகவும் அமைந்தது.

'தமிழ் நடையில் சில மரபு பிறழ்வுகள்' என்ற தலைப்பில் சில ஆண்டுகட்கு முன் புதுவை வானொலியில் யான் பேசிய பேச்சு இதில் '**மரபு பிறழ்வுகள்**' என்ற தலைப்பைப் பெற்றுள்ளது.

'இலக்கியமும் இலக்கணமும் – வினாவிடைகள்' என்ற தலைப்பில் புதுவை வானொலியில் தொடர்ச்சியாக ஒலிபரப்பப் பட்ட இரு கட்டுரைகள், இதில் '**நடைமுறைத்தமிழும் இலக்கணமும் –சில சிக்கல்கள்**', '**நடைமுறைத் தமிழும் இலக்கணமும்– சில வினாவிடைகள்**' என்ற தலைப்புகளில் இடம் பெற்றுள்ளன. இவற்றை வெளியிட இசைவளித்த புதுவை வானொலி நிலையத்தார்க்கு என் நன்றி.

'**எழுத்தறியார் தமிழில் யாப்பிலக்கண அமைப்புகள்**' என்பது, அண்மையில் மதுரையில் நடந்த ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில், புதுவை அரசின் சார்பில் கலந்து கொண்ட பேராளன் என்ற முறையில் என்னாற் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை. இன்றைக்கு அறுபதாண்டுகட்கு முன்னர் எனக்கு ஏற்பட்ட தனித்தமிழ் வேட்கையின் விளைவாகச் சுப்பிரமணியன் என்ற என் பெயரைத் திருமுருகன் என்று ஆக்கிக் கொண்டேன். அன்று முதல் இன்று வரையில் என்னாலும் என் நண்பர் களாலும் யான் சேர்ந்த இயக்கங்களாலும் மேற்கொள்ளப் பெற்ற தனித்தமிழ் வளர்ச்சிப் பணியின் வெற்றி தோல்விகளை மதிப்பிட்டதன் விளைவாக, அப்பணியின் பயன் மிக்கதொரு செயல் முறையினை மேற்கொள்ள வேண்டும் என்று கருதி னேன். அதனை இன்னதென்று உணர்த்துகின்றது. '**தனித்தமிழ்**' என்ற கட்டுரை. குயில் இதழ் 1971 ஆம் ஆண்டு மலரில் வெளியானது. இக்கட்டுரையை இதில் சேர்த்துக்கொள்ள இசைவளித்த அதன் ஆசிரியர்க்கு நன்றி.

'**இனிய சொல் விளையாட்டுகள்**' என்ற இறுதிக் கட்டுரை, தெளிதமிழ்த் திங்களிதழில் மாணாக்கர் பக்கத்தில் வெளிவந்த சில இலக்கண வியைாட்டுகளின் வினாக்களும் அவற்றின் விடைகளுமாகும்.

இலக்கணக்கடலாக விளங்கும் முதுபெரும் புலவர் தி. வே. கோபாலய்யர் அவர்கள் இந்நூலுக்கு அரியதோர் அணிந் துரை நல்கி என்னை மிகவும் பெருமைப்படுத்தி விட்டார்கள். அவர்கட்கு என் உள்ளங் கனிந்த நன்றியும் கைகூப்பும் உரிய.

இதன் மெய்ப்புகளைத் திருத்தியுதவிய பைந்தமிழ்ப் பாவலர் இரா. இளமுருகன் க.மு. அவர்களுக்கும், இதனை அழகியதாக அச்சிட்டு நூலாக்கிய மைக்ரோ செகண்டு மறுதோன்றி அச்சகத்தாருக்கும் நன்றி. இதிற் காணும் என் எண்ணங்களைப் பற்றிய அறிஞர்தம் கருத்துகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.


'ஏழிசைச்சூழல்'
62, மறைமலை அடிகள் சாலை
**புதுச்சேரி**–605001
பேசி: 0413–2201191

இங்கனம்,
**இரா. திருமுருகன்**
14–4–2006

## ஆசிரியரின் பிற படைப்புகள்:

1. என் தமிழ் இயக்கம் – 1
2. என் தமிழ் இயக்கம் – 2
3. என் தமிழ் இயக்கம் – 3
4. என் தமிழ் இயக்கம் – 4
5. என் தமிழ் இயக்கம் – 5
6. என் தமிழ் இயக்கம் – 6
7. என் தமிழ் இயக்கம் – 7
8. தாய்க் கொலை
9. எருமைத் தமிழர்கள்
10. இலக்கண எண்ணங்கள்
11. சிந்துப்பாவியல்
12. மொழிப்பார்வைகள்
13. பாவலர் பண்ணை
14. மொழிப்புலங்கள்
15. கம்பன் பாடிய வண்ணங்கள்
16. சிந்து இலக்கியம்
17. இனிக்கும் இலக்கணம்
18. பாவேந்தர் வழி பாரதி வழியா?
19. சிந்துப்பாடல்களின் யாப்பிலக்கணம்
20. இனிய தமிழைப் பிழையின்றி எழுத எளிய வழிகள்
21. மொழிப்பற்று இல்லாத கழிசடைகள்
22. புகார் முத்தம்
23. கற்பு வழிபாடு
24. இலக்கிய எண்ணங்கள்
25. ஓட்டைப் புல்லாங்குழல்
26. பன்னீர் மழை
27. வள்ளுவர் மிகுதியும் வற்புறுத்துவது அருளையா? பொருளையா?
28. கம்பனுக்குப் பாட்டோலை
29. இசுலாம் வளர்த்த இசைத்தமிழ்
30. சிலப்பதிகாரம்–தமிழன் படைத்த கலைக்கருவூலம்
31. பாவேந்தரின் இசைத்தமிழ்
32. ஏழிசை எண்ணங்கள்
33. புதுச்சேரி பாண்டிச்சேரியுடன் போராடுகிறது
34. பாவாணர் கண்ட இன்றைய தமிழின் இலக்கணங்கள்
35. மணமகளுக்கு – உரை



## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அணிந்துரை | 3 |
| முன்னுரை | 6 |
| 1. இலக்கணம் இனிக்கிறது | 10 |
| 2. மரபு பிறழ்வுகள் | 38 |
| 3. நடைமுறைத் தமிழும் இலக்கணமும் – சில சிக்கல்கள் | 54 |
| 4. நடைமுறைத் தமிழும் இலக்கணமும் – சில வினா விடைகள் | 67 |
| 5. எழுத்தறியார் தமிழில் யாப்பிலக்கண அமைப்புகள் | 112 |
| 6. தனித்தமிழ் | 130 |
| 7. இனிய சொல் விளையாட்டுகள்–வினாக்கள் | 135 |
| 8. இனிய சொல் விளையாட்டுகள்–விடைகள் | 148 |

# இலக்கணம் இனிக்கிறது

'கேழ்வரகிலே நெய் ஒழுகுகிறது என்றால் கேட்பவனுக் குமா மதியில்லை?' என்பது ஒரு பழமொழி. நெய், எள்ளிலே ஒழுகும்; நிலக்கடலையிலே ஒழுகும்; கேழ்வரகிலே ஒழுகுமா?

'இலக்கியங்கள் எள், நிலக்கடலை முதலிய நெய் வித்துக்களைப் போன்றவை. அவற்றில் சுவை எனும் நெய்யைக் காணலாம். ஆனால் இலக்கணங்கள் கேழ்வரகு போன்று வறண்டவை; அவற்றில் எப்படிச் சுவையை எதிர்பார்க்க முடியும்? என்று பலர் எண்ணுகிறார்கள். 'இலக்கியங்கள் கலைத்தன்மை வாய்ந்தவை. அவற்றில் சுவைப்பதற்குத் தொடை நயம் உண்டு; சந்தநயம் உண்டு; சொல் நயம் உண்டு; பொருள் நயம் உண்டு; அணி நயம் உண்டு. ஆனால் இலக்கணங்கள் அறிவியல் தன்மை வாய்ந்தவை. அவை வெறும் சட்டங்கள். அவற்றில் இலக்கிய நயங்களை எதிர்பார்க்க இயலாது' என்பது பொதுவாக உள்ள கருத்து. இக்கருத்துப் பிறமொழி இலக்கணங்களுக்குப் பொருந்துமோ என்னவோ, தமிழ் இலக்கணத்தைப் பொறுத்த வரையில் பொருந்தாது என்பது என் உள்ளக் கிடக்கை.

நம் பழந்தமிழ் இலக்கணங்கள் அனைத்தும் செய்யுள் நடையில் அமைந்தவை. ஒலிநயமும் ஆற்றலும் வாய்ந்த செஞ்சொற்களால் நுண்ணிய பொருளுக்கு இடமாக உணர் வினில் வல்ல புலவர்கள் சந்தமும் அணியும் தழுவிச் செய்த செய்யுட்கள் அவை. செய்யுள் வடிவம் பெற்றுள்ள இலக்கண விதிகள் பாட்டுக்குரிய பல்வகைக் கோலமும் பாங்குறப்புனைந்து இருப்பதனால் கற்போரை மகிழ்விக்கின்றன. மகிழ்வுறுத்துவதில் வியப்பென்ன இருக்க முடியும்?



**தொடை நயம்**

நம் இலக்கண நூற்பாக்கள் மோனை எதுகை முதலிய தொடைகள் கொஞ்ச அமைத்துள்ளமையால் அவற்றில் ஒலி நயத்துக்குப் பஞ்சமில்லை. சிறந்த ஒலியமைப்பே பாட்டின் சிறந்த வடிவம். ஆதலின் ஓதிச் சுவைக்கும் பாடல்களாக அவை திகழ்கின்றன.

உயிர் அளபெடையைக் கூறும்போது,

***குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்***
***நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே***

— *தொல்.எழுத்து. 41*

என்கிறார் தொல்காப்பியர். முதலடியில் குன்றிசை—நின்றிசை என்ற பொழிப்பெதுகை தலையாகு எதுகையாக அமைந்து சிறந்த ஒலிநயத்தை உண்டாக்குகிறது.

***இசையிற் குறையும் இடத்தை நிறைக்கும்***

என்று முதலடியின் கருத்தைச் சொல்லியிருக்கலாம். ஆனால் அந்த ஒலியின்பம் கிடைக்குமா?

***அத்தே வற்றை ஆயிரு மொழிமேல்***
***ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே***

—*தொல். எழுத்து. 134.*

இதில்முதலடியில்இணைபெதுகையும் இரண்டா மடியில் மேற்கதுவாய் எதுகையும், அடுத்தடுத்து ஐந்து இடங்களில்வரும் ஒத்த வல்லொலிகளும் ஒலிநயம்பட அமைந்துள்ளன.

நெடிற்றொடர்க் குற்றுகரங்களின் முன் உருபு புணர்ந் தால் இன்சாரியை தோன்றாது. இயற்கையாக உரு போடு சேர்ந்து நாடு+ஐ= நாட்டை, நாடு+ஓடு= நாட்டோடு என்று புணரும். இந்தக் கருத்தை எவ்வளவு ஒலிநயத்தோடு கூறுகிறார் பாருங்கள்:

***அவைதாம்,***
***இயற்கைய வாகும் செயற்கைய வென்ப***

- *தொல். எழுத்து. 198.*

சாரியை பெறாமல் [இயற்கையாகப்] புணரும் என்று கூற வந்தவர், இயற்கையையே அதற்கு நேர்மாறான செயற்கை

என்று கூறுவது ஒரு விந்தை! இங்கே செயற்கை என்பதற்குப் புணர்ச்சி என்று பொருள் கொள்ள வேண்டும். புணர்ச்சியினைச் செய்கை என்னும் வழக்கும் உண்டு. அதன்படி,

*இயற்கைய வாகும் செய்கைய வென்ப*

என்னுது செயற்கைய என்ப என்றதனால், இயற்கை செயற்கை என்ற தலையாகு எதுகையில் கிடைக்கும் ஒலி இன்பத்தில் தொல்காப்பியர் தம் உள்ளத்தைப் பறிகொடுத்திருக்கிறார் என்பது ஒளிவு மறைவு இன்றித் தெரிகிறது.

*ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த*
*குன்றிய லுகரத் திறுதி யாகும்* — தொல். சொல். 8

இதில் குற்றியலுகரத்தைக் குன்றியலுகரம் என்று மெலித்திருக்கிறார். ஒலிநயத்தில் தோய்ந்த கலையுள்ளமே அதற்குக் காரணம்.

**நன்னூலில் வரும்,**

*மன்னுடை மன்றத்து ஓலைத்தூக்கினும்*
*தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்*
*மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்*
*தன்னை மறுதலை பழித்த காலையும்*
*தன்னைப் புகழ்தலும் தகும்புல வோர்க்கே* - நன். 53.

இதில் ஐந்து அடிகளிலும் ஒரே எதுகை உள்ளது. ஒரு விகற்பமாக அமைந்துள்ள இதனை இலக்கண நூற்பா என்பதா? இசைப்பாடல் என்பதா?

*சொற்றொறும் இற்றிதன் பெற்றியென் றனைத்தும்*
*முற்ற மொழிகுறின் முடிவில ஆதலின்*
*சொற்றவற் றியலான் மற்றைய பிறவும்*
*தெற்றென உணர்தல் தெள்ளியோர் திறனே.* - நன். 462.

இது எத்தனைத் தொடைநயம் ததும்ப அமைத் திருக்கிறது பாருங்கள்! பாடல் முழுவதிலும் ஒரு விகற்ப எதுகை அமைந்துள்ளது. சொற்றொறும் என்று எடுத்த ஒலி இதன்கண் ஏழு



இடங்களில் மீண்டும் மீண்டும் வருகின்றது. முதலடியில் கூழை எதுகையும் மூன்றாமடி யில் கூழை மோனை யும் நான்கா மடியில் மேற்கதுவாய் மோனையும் அமைந்துள்ளன. இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன?

வறண்ட இலக்கண விதிகளைக் கூறும் ஆணையா ளர்களாகத் தமிழிலக்கண ஆசிரியர்கள் எப்போதும் இருந்ததில்லை. ஒலிநயத்தில் உளந்தோய்ந்து பாடு கின்ற பாவலர்களாகவே உள்ளனர்.

கோ+இல், மா+இரு ஞாலம் என்பன விதிப்படி இடையில் வகர உடம்படு மெய் பெற்று முறையே கோவில், மாவிரு ஞாலம் என்று தான் புணரவேண்டும். அவை யகர உடம்படுமெய் பெற்றுக் கோயில், மாயிரு ஞாலம் என்றும் புணரும். இதனை முத்துவீரிய ஆசிரியர், எப்படிச் சொல்லுகின்றார் பாருங்கள்.

*கோமா முன்வரின் யகரமும் குதிக்கும்* - மு.வீ– 184

'கோமா முன்வரின் யகரமும் தோன்றும்' என்றும் கூறலாம். **குதிக்கும்** என்ற சொல்லைப் பெய்தமைக்குக் காரணம், அது கோமா என்பதற்கு ஏற்ற மோனை என்பதைத் தவிர வேறு என்னவாயிருக்க முடியும்?

**சந்த நயம்**

'புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதவுநவும்' என்று சொல்வதில் பிழை ஒன்றும் இல்லை. இதில் முதல் மூன்று சீர்களும் கருவிளமாக அமைந்து,

**தனதக தனதனத் தனதன**

என்ற சந்த இன்பம் தருகின்றன. எனவே தனதனன என்று சற்று வேறுபட வரும் நான்காம் சீரையும் அவற்றிற்கேற்றபடி, அதிலுள்ள 'வு' என்ற எழுத்தைத் தொகுத்து,

*புணரியல் நிலையிடைப் கொருணிலைக் குதநவும்*
- *தொல்.* இடை. 2

என்று ஆக்கிக் கொள்ளுகின்றார் தொல்காப்பியர். இப்போது,

எல்லாம் கருவிளமாய்த்
தனதன தனதன தனதன தனதன
என்ற சந்தம் ஒலிக்கிறது.

*அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின்*
*வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப*
*-தொல். பொருள். 218*

இதனைத் தாளம் போட்டுக் கொண்டு பாடலாம். இதில்,

தனத்தன தனதன தனத்தனந் தனதன
தனத்தன தனந்தன தனத்தந் தந்த

என்ற சந்த அமைப்பு உள்ளமை விளங்கும். இலக்கண விதியா இது? திருப்புகழ் போல் அல்லவா தித்திக்கின்றது!

இதே ஓசையமைப்பினை வைத்துக் கொண்டு பவணந்தியார் விளையாடுவதைப் பாருங்கள்.

*உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்*
*இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே* —*நன்.379*

*முன்னோர் மொழியொருளே அன்றி அவர் மொழியும்*
*பொன்னே போற் போற்றுவம்* —*நன். 9*

என்பார் பவணந்தியார். 'உவப்பினும் உயர்வினும்' என்ற நூற்பாவின் வழி இவர் முன்னோர் தம் பொருள் களையும் மொழிகளையும் மட்டுமன்றிச் சந்த அமைப்பு களையும் பொன்னேபோற் போற்றுகின்றவர் என்பதைக் காட்டி விடுகின்றார்.

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாக்களில் அராகம் என்று ஓர் உறுப்பு வரும். காட்டாக ஒன்று காண்க.

*தாதுறு முறிசெறி கடமல நிடையிடை*
*தழலென விரவின பொழில்*
*போதுறு நரைவிரை புதுமலர் தெரிதரு*
*கருநெய்தல் விரிவன கழி*



*தீதுறு திறமறு கெனநனி முனமுனந்*
*துணையோடு பிணைவன துறை*
*மூதுறு மொலிகலி நுரைதரு நிரையொடு*
*கழிதொடர் புடையது கடல்*
- யாப்பருங்கலம், 84 உரை

கடகட கடகட என முடுகிய ஓசை உடைமையால் இதனை முடுகியல் என்பார்கள். இலக்கண நூற்பாக்கூட இத்தகைய ஓசை அமையப் பாடப் பெறும் என்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள்.

## சொல் நயம்

இனி, நம் தமிழிலக்கண ஆசிரியர்கள் ஆளும் சொல்லின் நயங்களையும் அவர்கள் கருத்துகளைச் சொல்லும் நயங்களயைும் சிறிது நோக்குவோம்.

பனிக்காலம் என்று பொருள்படும் பனி என்ற சொல் வினையோடு புணரும் போது அத்துச்சாரியையோ இன்சாரியை யோ பெற்றப் பனியத்துக் கொண்டான் என்றும் பனியிற் கொண்டான் என்றும் வரும். இதனைப்

*பனியென வருஉம் பூதக் கிளவியும்*
*அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப*
- *தொல். எழுத்து—243*

என்றார். மழை என்ற சொல்லுக்கும் இதே இலக்கணம் தான். இதனை,

*மழையென் கிளவி வளியியல் நிலையும்*
*-தொல். எழுத்து. 288*

என்றார். வெயில் எப்படி வரும் என்று கேட்டால், 'வெயில் மழை போலத் தான் வரும்!' என்கிறார்.

*வெயிலென் கிளவி மழையியல் நிலையும்*
*—தொல்.எழுத்து. 378*

இருள் எப்படி என்றால் 'இருள் வெயில் போன்றது தான்!' என்று வேடிக்கை செய்கின்றார்.

*இருளென் கிளவி வெயிலியல் நிலையும்*
-தொல். எழுத்து—403

பனி,காற்று, மழை வெயில் இருள் ஆகிய எல்லாமே ஒருவகையில்ஒன்று தான் என்று கூறுவது போல் அவற்றின் இலக்கணங்களை வேடிக்கையாகக் கூறி மாணாக்கர்க்கு விளையாட்டு முறையில் இலக்கணம் கற்பிக்கிறார்.

**'ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன் நால்வாய்ஐங்**
**கரத்தன் ஆறு**
**தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையன்'**

—சிவஞான சித்தியார், பரபக்கம், கடவுள் வணக்கம்

என்ற பாடற்பகுதியில் 1, 2, 3, 4, 5, 6 என்ற எண்ணுப் பெயர்கள் வரிசையாக அமைந்துள்ள அழகைப் பாருங்கள். இங்ஙனம் எண்ணுப்பெயர்களை அடுக்கி விளை யாடுவது இலக்கியப் புலவர்கட்கு மட்டும் உரியதா? இல்லை; இதோ இலக்கணப் புலவரும் அதைச் செய்கின்றார்.

**ஒன்றில் இரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்**
**வென்று களம்கொண்ட வேல்வேந்தே-சென்றுலாம்**
**ஆழ்கடல்சூழ் வையத்துள் ஐந்துவென் றாறகற்றி**
**ஏழ்கடிந் தின்புற் றிரு.**

*- புறப்பொருள் வெண்பாமாலை 225*

இதில் 1 முதல் 7 வரையில் எண்கள் முறையே நடை போடுகின்றன. இலக்கண நூலின் பாவாயினும் இதனை இலக்கண நூற்பா என்று கொள்ள முடியாது. இதுவும் இலக் கியமே. இனி, இலக்கணச் செய்தியைக் கூறும் இத்தகைய நூற்பா ஒன்றினைப் பார்ப்போம்.

**நூலின் இயல்பே நுவலின் ஓரிரு**
**பாயிரம் தோற்றி மும்மையின் ஒன்றாய்**
**நாற்பொருட் பயத்தோ டெழுமதம் தழுவி**
**ஐயிரு குற்றமும் அகற்றியம் மாட்சியோடு**
**எண்ணான் குத்தியின் ஓத்துப் படலம்**
**விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.** *நன். 4.*

இதில் 1, 2, 3, 4,7, 5 X 2(=10), 8 X 4(=32) என எண்கள் வளர் வரிசையில் செல்லும் அழகைப் பாருங்கள். இதிலே, ஒன்று என்று வரவேண்டிய தேவை இல்லை. இருவகைப் பாயிரம்; மூவகை நூல்; நால் வகைப் பொருள் என்றுதான் சொல்லிச் செல்கின்றார். என்றாலும் ஒன்று என்ற எண்ணில் தொடங்கினால் அழகாயிருக்கும் என்று எண்ணுகின்றார். இரு என்பதற்கு அடைமொழியாக ஓர் என்பதைக் கொடுத்து அக்குறையையும் நிறைவு செய்துவிடுகின்றார்!



தெங்கு + காய் = தேங்காய் என்று புணரும். காய் என்ற சொல் வருமாயின் தெங்கு என்ற சொல்லின் முதலெழுத்து தே என நீண்டு இறுதியில் உள்ள 'கு' கெடும் என்பது விதி. இதனைப் பவணந்தியார் ஒரே அடியில் அழகாகவும் பாத்திறன் விளங்கவும்,

***தெங்கு நீண்டு ஈற்றுயிர் மெய்கெடும் காய்வரின்***

*- நன். 187*

என்று கூறுகின்றார். தெங்கு நீண்டு என்று அவர் தொடங்கும் போது தென்னை மரம் மிகவும் நீண்டு வளர்வது போல் ஒரு தோற்றத்தை நம் மனத்தில் உண்டாக்கிவிடுகின்றார்! தெ என்ற முதலெழுத்துத் தான் நீளும் என்றாலும் தெங்கு என்ற சொல் முழுவதுமே நீளும் என்பது போல் அவர் சொல்ல வந்தது, மரம் நீளுவது போல் கூறும் ஒரு நயம் குறித்துத் தான்! அப்படியானால் அச்சொல்லே நீளும் என்று வேறு பொருள் தாராதா? என்று வினவலாம். தாராது; ஈற்றுயிர் மெய் கெடும் என்று பேசுவதால், ஈற்று உயிர் மெய் போக எஞ்சியிருப்பது தெங் என்னும் இரண்டெழுத்துக்களே. இவற்றில் நீளக்கூடிய எழுத்து தெ என்ற முதல் உயிர்மெய்யில் உள்ள உயிரே. ('ஈறு கெடும் என்றமை யால் முதல் நீளும் என்பது பெற்றாம்' என்பது சங்கர நமச்சிவாயர் உரை) எனவே, தெங்கு நீண்டு என்று சொன்னாலும் தெ நீண்டு என்றே பொருள் படும். இச்செய்தியை எவ்வளவு கவர்ச்சியாகக் கூற விழைகின்றது புலவர் உள்ளம்!

இந்நூற்பாவின் அழகினாற் கவரப்பட்ட முத்துவீரிய ஆசிரியர்,இதனைப் பொன்னேபோற் போற்றித் 'தானெடுத்து மொழிதலா'கத் தம் நூலில் எடுத்தமைத்துக் கொண்டமையை இங்குக் குறிப்பிடல் தகும்.

இந்நூற்பாச் சுவையினை நண்பர் ஒருவரிடம் சொல்லிக் கொண்டிருந்த போது, ஒரு நூற்பாவில் தமக்கும் இது போல் வேறு ஒரு பொருள் புலப்படுவதாகக் கூறினார்.

செல் என்ற ஏவல் வினை த் + ஈ என்னும் எழுத்துகளைப் பெற்றுச் சென்றீ என்றும் வரும். நில் என்பது ம் + ஏ என்னும் எழுத்துகளைப் பெற்று நின்மே என்றும் வரும். இவற்றைப்போல் ஏவல் வினையின் முன் ஈ,ஏ என்னும் எழுத்துகள், வேண்டிய எழுத்துகளை ஊர்ந்து வரும் என்பது ஒரு விதி. இதனை

*முன்னிலை முன்னர் ஈயு மேயும்*
*அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே* — *நன். 336*

என்று விளக்குகிறார் பவணந்தியார். என் நண்பர்க்கு இதில் புலப்பட்ட வேறு பொருள் இது தான்:

நம் முன்னே உண்பதற்காகப் போடப்பட்டிருக்கும் இலையில் ஈயும் மேயும்! [கவனியாது விட்டால்] அது உணவோடு உடம்பினுள்ளும் புகுந்து விடுமாம்!

*முன்இலை முன்னர் ஈயும் மேயும்*
*அந்நிலை மரபின் மெய்ஊர்ந்து வருமே*

என்பது போல் அவர்க்குப் படுகின்றதாம்! வேடிக்கை யாகத் தான் இப்படிக் குறிப்பிட்டார்.

நாகு +அரிது என்பன புணரும் போது குவ்வில் உள்ள உ [குற்றியல் உகரம்] கெட்டு நாக் + அரிது என நின்று நாகரிது என்று புணரும். வருமொழி முதலில் உயிர் வந்தால் இப்படி; யகரம் வந்தால் அந்த உ கெடாது; யகரத்திற்கேற்றபடி குற்றுகரம் தன் உருவை இ என மாற்றிக் கொண்டு அங்கேயே இருக்கும். அதாவது நாகு + யாது = நாகியாது எனப் புணரும். இதனைப் பவணத்தியார் மிகவும் பொருத்த மான சொற்களைப் பெய்து கூறுகின்றார்.

*உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்*
*யவ்வரின் இய்யாம்* —*நன். 164*

சொல்லும் முறையைப் பாருங்கள். உயிர் வந்தால் அஞ்சி ஓடும்; யகரம் வந்தால் 'இ' என்று பல்லைக் காட்டிக் கொண்டு நிற்கும் என்பது போலவும் இருக்கிறது! உயிர் வந்தால் உகரம் ஏன் ஓடுகிறது? வரும் உயிர், மாத்திரையில் குறையாத முழு



மதிப்புடைய எழுத்து. இதுவோ அரை மாத்திரை யளவாய்க் குறைந்து போன குற்றியல் உகரம். வலியாரைக் கண்டால் மெலியார் இருக்கும் இடத்தை விட்டு அஞ்சி ஓடுவது இயல்பு தானே?

யகரம் வந்தால் மட்டும் அது ஏன் ஓடாமல் நின்று இ ஆகிறது? வரும் யகரம் தன்னைப் போலவே அரை மாத்திரையுடைய எழுத்து. தன்னை ஒத்த மதிப்புடை யார் வந்தால் எழுந்து இடம் விடவேண்டியதில்லை. அவருக் கேற்றபடி இணக்கமாகப் பேசி நடந்துகொண்டால் போது மல்லவா? சூழ்நிலைக்கு ஏற்றபடி ஒத்துப் போவது [to adjust to the environment] தானே ஊருடன் கூடி வாழும் உளவியல் நெறி?

ஓடும், ஆகும் என்ற சொற்களை எவ்வளவு விழிப்பாகத் தெரிந்தெடுத்துப் பெய்திருக்கிறார் பாருங்கள்,

*செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளின்*
*சீரிய கூரிய தீஞ்சொல்*
*வவ்விய கவிஞர்* — கம்ப. 94

என்று கம்பன் பாராட்டுவது பவணந்தியாரைப் போன்ற பாவலரைத் தானோ?

**பொருள் நயம்**

'உயிரும் மெய்யும் கூடுகின்ற கூட்டம்' என்பதை விட 'உயிரானது மெய்யொடு கூடும் கூட்டம்' என்பதே சரியான கூற்று என்பது என் கருத்து. எங்ஙனமெனில், மெய் இயங்காப் பொருள். உயிர் இயங்கு பொருள். இரண்டும் கூடும் எனின் இயங்காப்பொருளும் ஒன்றையொன்று நெருங்கி வந்து கூடும் என்று பொருள்பட்டுவிடும். எனவே தொல்காப்பியர் மிகவும் விழிப்பாக '*மெய்யோ டியையினும் உயிர்இயல் திரியா* -*தொல். எழுத்து. 10.* என்று கூறினார். உயிர்க்கு இயக்கம் உண்டு; மெய்க்கு அஃது இல்லை. அங்ஙனம் இயக்கத்தை உடைய உயிர் ஓர் உடலை அடைந்த பின்னும் தன் இயங்கும் தன்மையினின்று சிறிதும் வேறுபடாது. இந்த மெய்ப்பொருள்

நுட்பத்தையும் இந்நூற்பாவின் பொருளாக விரித்துரைக்கலாம். நன்னூலாரும், உயிரின் இயங்கும் இயல்பினை விளக்குவது போல்

*உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே* - நன் . 20

என்றார். இதிலே வந்து என்னும் வினையினை இயங்கு பொருளாகிய உயிர்க்கும் கொடுத்துக் கூறியது எத்தனைப் பொருத்தம்!

*என்பி லதனை வெயில்போலக் காயுமே*
*அன்பி லதனை அறம்* — திருக்குறள் 77

என்ற குறளில் புழுவினை வெயில் காய்ந்து அழிப்பது போல என்று வள்ளுவர் கூறி யிருப்பினும், பரிமேலழகர், நிழலில் உள்ள புழுவை வெயில் தானாக வந்து அழித்தல் முடியாதே என்று எண்ணிப்பார்த்திருக்கின்றார். அதனால்தான் புழுவானது வெயி லில் தானே சென்று அழிந்துவிடுதல் போல என்னும் கருத்தில், 'வெயில் முன் என்பில்லது தன்னியல்பாற் சென்று கெடுமாறு போல' என்று மிகவும் நுட்பமாக விளக்குகின்றார். உடல் மேல் உயிர் வந்து என்பதைக் காணும் போது இச்செய்தி நினைவுக்கு வருகின்றது.

1. ன் முன் வரும் த–ற ஆகும். பொன் + தீது = பொன்றீது.
2. ன் முன் வரும் ந–ன ஆகும். பொன் + நன்று = பொன்னன்று.
3. ல் முன் வரும் த–ற ஆகும். கல் + தூண் = கற்றூண்
4. ல் முன் வரும் ந–ன ஆகும். கல் + நன்று = கன்னன்று
5. ண் முன் வரும் த–ட ஆகும். மண் + தீது = மண்டீது
6. ண் முன் வரும் ந–ண ஆகும். மண் + நன்று = மண்ணன்று
7. ள் முன் த–ட ஆகும்; எள் + துணை = எட்டுணை
8. ள் முன் வரும் ந–ண ஆகும். முள் + நெறி = முண்ணெறி

மேலே எட்டு விதிகள் உள்ளன. இவற்றைச் சுருக்கி இரண்டு நூற்பாவில் அடக்குகின்றார் தொல்காப்பியர். அவையாவன :



*லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்*
*தநவெ னவரிற் றனவா கும்மே* - தொல். எழுத்து .150
*ணனவென் புள்ளிமுன் டணவெனத் தோன்றும்*
—தொல். எழுத்து . 151

இவற்றை இன்னும் சுருக்கலாம் என்று பட்டது பவணந்தியாருக்கு. தொல்காப்பியர் மூன்று அடிகளிற் கூறிய செய்திகளை ஒன்றும் விடாமல் இரண்டே அடிகளில் ஒழுகிய ஓசை அமையக் கூறிவிடுகின்றார்.

*னலமுன் றனவும் ணளமுன் டணவும்*
*ஆகும் நதக்கள் ஆயுங் காலே* — நன் . 237

அவர்க்குப் பின்வந்த முத்து வீரிய ஆசிரியர்க்கு இதை இன்னும் சுருக்கலாம் போல் தோன்றியது. சுருக்கிக் கூறி வெற்றியும் பெற்றார். ஓரே அடியில் அத்தனைச் செய்திகளையும் எஞ்சாமல் அடக்கி விடுகின்றார்.

*ணளடண வாம்னல றனவாம் தநவரின்*
- முத்துவீரியம் 191

எடுத்து மொழிய வேண்டிய ண ள டண ன ல ற ன த ந என்னும் எழுத்துக்களைத் தவிர இந்நூற்பாவில் ஆம், வரின் எனும் இரண்டு வினைகள் – மிகவும் சுருங்கிய ஈரெழுத்து, மூவெழுத்து வினைகள்– மட்டுமே இடம் பெற்றுள்ளன. சுருக்குவதில் நன்னூலாரையும் விஞ்சி விட்டார் இவர். முன்னே முளைத்த காதைக் காட்டிலும் பின்னே முளைத்த கொம்பு வலியதன்றோ? இத்தனைப் பெரிய பொருளை இத்தனைச் சிறிய வடிவத்தில் அடக் கிய நூற்பா ஒன்றினை வேறு எங்கும் காண முடியாது.

இந்த விடத்தில் நூற்பா என்னும் பாவகையைப் பற்றி ஒன்று சொல்ல வேண்டும். நூற்பாக்கள் ஆசிரிய அடிகளைப் பெற்றிருந்தாலும் ஆசிரியம் போல் இதற்கு அடிவரையறை இல்லை; சீர் வரையறையும் இல்லை. எத்தனை அடிகளிலும் வரலாம். ஓரடியிலும், ஒரு நூற்பா அமையலாம். அந்த ஓரடியிலும் நான்கு சீர் இருத்தல் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

அம்பலும் அலரும்களவு -இறையனார் களவியல் 22

என்பது ஒரு நூற்பா. இதில் மூன்று சீர்களே உள்ளன. சொல்ல வேண்டிய கருத்தினை எவ்வளவு சுருக்கமாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு சுருக்கமாகச் சொல்லி நிறுத்திக் கொள்ள இந்தப் பாவகை வாய்ப்பானது. இந்த நெகிழ் தன்மையால் வெற்றுச் சொற்களைப் போட்டு அடிகளை நிரப்பியாக வேண்டிய நிலை இதில் இல்லை. தொல்காப்பியத்தில் 59 அடிகளை உடைய மிகப் பெரிய நூற்பாவும் உண்டு. [தொல். பொருள். 146]; ஐந்தே எழுத்தை உடைய மிகச் சிறிய நூற்பாவும் உண்டு.

'வையே கூர்மை' – *தொல். சொல் . 387*

இங்ஙனம் பொருளின் அளவுக்கேற்றபடி இவை வடி வால் விரிந்தும் சுருங்கியும் அமைந்தாலும் எல்லாவற் றிலும் ஊடாக நிற்கும் ஒரு பண்பு சொற்சுருக்கம் என்பதே.

கட்டளைக் கலித் துறையினைச் சில இலக்கண நூல்கள் பயன்படுத்துகின்றன. அவை இத்தகையன அல்ல. அடிதோறும் வெண்டளை கொண்ட ஐந்து சீர் பெற்று, இறுதிச்சீர் விளங்கா யாய், நான்கடியாய், ஏகாரத்தால் இறுதல், எழுத்தெண் ணிக்கை ஆகிய கட்டுப்பாடுகள் உண்டு. அதனால் இப்பாவகையால் இலக்கணத்தைக் கூறிய யாப்பருங்கலக் காரிகையாசிரி யர் முதலானோர் மகடூஉ முன்னிலைகளை வைத்துக்கொண்டு மகளிரைப் புனைந்து பாடுவதில் சீர்கள் பலவற்றையும், அடிகள் சிலவற்றையும் செலவழித்துள்ளனர். இவ்வகைப் பாடல் இலக் கியச் சுவையமையப் பாட இடந்தந்ததில் வியப்பேதும் இல்லை. தொல்காப் பியர், நன்னூலார் முதலானோர் கட்டுப்பாடு மிகவும் குறைந்த நூற்பா வகையில் இலக்கணச் செய்திகளை மட்டுமே சுருங்கக் கூறி அதிலும், 'அரைப் பணத்திலே திருமணம், அதிலே கொஞ்சம் வாணவேடிக்கை' என்பது போல் இலக்கிய நயமும் பெற வைத்தமைதான் வியப்புக் கும் நயப்புக்கும் உரியது.

பொருளை உணர்த்துவது பெயர்; பொருளின் தொழிலை உணர்த்துவது வினை. எனவே, சொற்கள் பெயர், வினை என இரண்டு வகைப்படும்.



**சொல்லெனப் படுப பெயரே வினையென்**
**றாயிரண் டென்ப அறிந்திசி னோரே** - *தொல். சொல் . 158*

இடைச்சொல் உரிச்சொல் என்பன அப்பெயர் வினை களைச் சார்ந்து வருவன.

**இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்**
**அற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப** - *தொல். சொல் . 159*

இக்கருத்துகளைக் கூற வந்த நன்னூலாரும் இதே முறையில் கூறித் தொல்காப்பியர் வேறு இடத்தில் கூறிய திசைச் சொல் வடசொற்களையும் சேர்த்து ஆறும் ஆகும் என்கிறார்.

**அதுவே ............................... பெயர்வினை**
**எனஇரண் டாகும்; இடைஉரி அடுத்து**
**நான்கமாம் திசைவட சொல்அணு காவழி** -*நன் . 270*

இன்றியமையாத சொற்பாகுபாடு இரண்டு தான். திசைச் சொல்லும் வடசொல்லும் வேண்டா விருந்தினராக வருபவை. அவற்றைச் சேர்க்காவிட்டால் சொல்வகை நான்கு தான். சேர்த்துக் கொண்டால் ஆறும் ஆகும் என்கிறார். இங்ஙனம் 2, 4, 6 என்ற பாகுபாடுகளுக்கு, உரிய சிறப்புத் தரும் முறையில் விழிப்பாகச் சொற்களைப் பெய்து செல்வது எண்ணிச் சுவைத்தற்குரியது. உங்கள் வீட்டில் எத்தனை பேர்? என்ற கேட்பார்க்கு, 'நானும் என் மனைவியும் ஆக இரண்டு பேர் தான்; குழந்தைகளைச் சேர்த்தால் நான்கு பேர் என்றும் சொல்லலாம், வந்திருக் கிற விருந்தினர் இருவரைச் சேர்க்காவிட்டால்! என்று விடை சொல்வது போன்ற போக்கில் இச்செய்தி சுவை ததும்பச் சொல் லப்படுகிறது.

புகாரை விட்டுப் புறப்பட்டபின் சிறிது தொலைவு கடந்ததும்,கண்ணகி 'மதுரை மூதூர் யாது?' என்று கேட்டாளாம். 'இதோ அருகில் தான் -- இன்னும் ஆறைங் காதம்' என்றா னாம் கோவலன். 300 கல் தொலைவினை 30 காதம் என்று கூடக் கூறாமல் ஆறைந்து காதங்கள் என்று கண்ணகிக்கு வழிநடை வருத்தம் தோன்றாதவாறு கூறினான் கோவலன். அவன் கண்ணகிபால் காட்டிய பரிவினைத் தொன்னூற்கு

அஞ்சித் தடுமாறும் உளத்தவராகிய மாணாக்கர் மாட்டும் காட்டுகின்றார் போலும் பவணந்தியார்!

சாவ + குத்தினான் = சாக்குத்தினான் என்று வரும். சாகும் படி குத்தினான் என்பது இதன் பொருள். சாவ என்ற எச்சம் வினையொடு புணரும் போது இறுதி வகரம் கெடுதலும் உண்டு என்பது விதி. இதனைச்

*சாவ என்னும் செயவென் எச்சத்து*
*இறுதி வகரம் கெடுதலும் உரித்தே* -தொல். எழுத்து . 210.

என்று உணர்த்தினார் தொல்காப்பியர். இதைப் பார்த்தார் பவணத்தியார். அந்தோ! சாவு பற்றிய சொல்லிலே கூட வா சாவு! என்று அவர் உள்ளத்தில் தோன்றியது. யாரை விட்டது விதி? யாருக்குத்தான் அழிவில்லை? என்ற எண்ணங்கள் அவர் நெஞ்சில் ஓடியிருக்க வேண்டும். சாவுக்கும் சாவு உண்டு என்று சொல்லும் போது,

*விதிக்கும் விதியா கும்என்றன்*
*விற்றொழில் காண்டி யென்றான்* - கம்ப .1735

*சூழ்வினை நான்முகத் தொருவன் சூழினும்*
*ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ?* - கம்ப.1764

என்னும் கம்பன் கூற்றுகள் நம் நினைவுக்கு வருகின்றன.

இரண்டடியில் தொல்காப்பியர் சொன்ன இக்கருத் தை ஓரடியிற் சுருக்கியதோடு மட்டுமின்றிச் சாவுக்கும் சாவு உண்டு. அது அதன் விதி என்ற கருத்தும்தோன்றுமாறு நயம்படச்

*சாவஎன் மொழியீற் றுயிர்மெய்சா தலும்விதி* –நன் .169

என்று கூறுகின்றார். தொல்காப்பியர் கெடுதல் என்றதை இவர் சாதல் என்றமையும், விதி என்ற சொல்லை இங்கே ஆண்டமையும் நமக்கு மேற்கண்ட கருத்துகளைத் தோற்று விக்கின்றன.

எனது சொந்த ஊராகிய கூனிச்சம்பட்டு என்பது புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர். அதைச் சுற்றியுள்ள சிற்றூர்



களுக்கு உரிய அரசு அலுவலகங்கள் அங்கே உள்ளன. 'எத்தாசிவில் என்பது பிறப்பு, இறப்பு, திருமணம் ஆகியவற்றைப் பதிவு செய்யும் அலுவலகத் தைக் குறிக்கும் பிரஞ்சுப் பெயர். என் இல்லத்தை அடுத்துள்ள அந்த அலுவலகத்திற்கு நான் அடிக்கடி போவதுண்டு. ஒருநாள் பக்கத்தில் உள்ள மண்ணாடிப் பட்டு என்னும் சிற்றூரிலிருந்து இறப்பு ஒன்றினைப் பதிவு செய்ய அந்த ஊர்க்குரிய தோட்டி அங்கே வந்திருந்தான். அப்போது அவ்வூரில் வயிற்றுப் போக்கு [பேதி] என்னும் கொள்ளை நோய் பரவியிருந்தது. நாற்பது அகவை மதிக்கத்தக்க அந்த ஊர்த் தோட்டி கட்டுடல் கொண்ட வன்; அடர்ந்த மீசையன்; அஞ்சா நெஞ்சினன்.

"என்னங்க, ஒரு நாளைக்கு ரண்டு மூணு போவுது; எல்லாத்தையும் நான் தான் இழுத்துப் போடறேன்; எவன் கிட்ட வரேன்றான்? பயப்படறானுவ" என்று பெருமை யாகச் சொல்லிக் கொண்டான்.

"எதற்கும் நீயும் எச்சரிக்கையாய் இரு" என்றேன் நான்.

'நானா? எங்கிட்ட நாடுமா அது? இந்தக் கையால எத்தனை பொணத்தை இழுத்துப் போட்டிருக்கிறேன் தெரியுமா?' என்றான். இதற்கு மேல் நான் வாயை மூடிக்கொண்டேன். இப்படிப்பட்ட வலிய உடலும் வயிர நெஞ்சமும் உடையவர்களை எந்த நோய்தான் என்ன செய்யும்? என்று நினைத்துக் கொண்டேன்.

அடுத்த நாள் மண்ணாடிப்பட்டில் நேர்ந்த இறப்புகளைப் பதிவு செய்ய வேறு ஆள் வந்திருந்தான்!

"வழக்கமாக வருவானே ஊர்த்தோட்டி, அவன் எங்கே?" என்று கேட்டேன்.

"ராத்திரி வேதி கண்டு பூட்டானுங்க. அதையும் தாங்க பதிய வந்தேன்" என்று விடை வந்தது.

அடடா! கூற்றுவன் என்று சொல்வார்களே அப்படி யல்லவா இருந்தான் அவன்! கூற்றுக்குக் கூடவா கூற்று வரும்? என்று எனக்குள் வியந்து கொண்டேன். சாவுக்கும் சாவு உண்டு என்ற பவணந்தியார் கூற்று எனக்கு இந்நிகழ்ச்சி நினைவு படுத்துகிறது.

மிகமிகச் சுருங்கிய வடிவில் அமையும் நூற்பாக்களிலும்

இது போன்ற வேறு கருத்துக்களைப் பெறவைக்கும் திறம் வியந்து பாராட்டுதற்குரியது. நூற்பாக்களின் இலக்கணத்தை,

*அவற்றுட் சூத்திரந்தானே,*
*ஆடி நிழலின் அறியத் தோன்றி*
*நாடுத லின்றிப் பொருள்நனி விளங்க*
*யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே*
*— தொல். பொருள் . 481*

என்றும்,

*மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு*
*சில்வகை எழுத்தின் செய்யுட் டாகிச்*
*சொல்லுங் காலை உரையகத் தடக்கி*
*நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்*
*துளக்கல் ஆகாத் துணைமை எய்தி*
*அளக்கல் ஆகா அரும்பொருட் டாகிப்*
*பல்வகை யானும் பயன்தெரி புடையது*
*சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்*
*- தொல். பொருள் . 655*

என்றும் விரித்துரைத்தார் தொல்காப்பியர். இதில்,

*அளக்க லாகா அரும் பொருட் டாகிப்*
*பலவகை யானும் பயன்தெரி புடையது*

என்ற அடிகளுக் கேற்பத் தமிழ் நூற்பாக்கள், அரும் பொருள் பலவற்றையும் அடக்கி, இலக்கியச்சுவை காண்டல் முதலிய பலவகையானும் பயன்படுகின்றன. இவ்விலக்கணங்களை நன்னூலார் மேலும் சுருக்கிச்

*சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்*
*செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித்*
*திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்.* -நன் . 18

என்று கூறினார். நூற்பா என்றால் அதில் ஒவ்வோ ரெழுத்திற்கும் பயன்பாடு இருத்தல் வேண்டும் என்ற திட்ப நிலையை நன்னூல் நூற்பாக்களில் முழுமையாகக் காண்கிறோம். இலக்கண நயங்களோடு இலக்கிய நயத்தையும் மிகுதியும் தரவல்ல இலக்கணங்களில் நன்னூல் தலை சிறந்து நிற்கிறது.



"எழுத்தையும் சொல்லையும் இரு சக்கரமாகக் கொண்டு யாக்கப்பட்ட அணிதிகழ் பொருட்புரவியால் ஈர்க்கப்பட்டினிது செல்லும் செந்தமிழ் இலக்கிய இரதம், சென்ற எழுநூறு வருட காலமாக இந்நன்னூலையே அச்சும் அச்சாணியுமாகக் கொண்டு இயங்கி வருகிறது." —ச. பவானந்தம் பிள்ளை.

"உலகிலேயே மிகவும் அறிவியல் முறையில் எழுதப்பட்ட இலக்கண நூல்களில் ஒன்று என்ற புகழ் நன்னூலுக்கு மிகவும் தகும்." — சி. சேசுதாசன்

(Nannul rightly deserves the praise that it is one of the most scientifically wirtten grammars of the world. -C.. Jesudasan)

*முன்னோர் ஒழியப் பின்னோர் தம்முன்*
*நன்னூ லார்தமக் கெந்நூ லாகும்*
*இணையோ என்னும் துணிவே மன்னுக*
*- இலக்கணக்கொத்து 8*

*நடவா மடிசீ விடுகூ வேவை*
*நொப்போ வெளவுரிஞ் உண்பொருந் திரும்தின்*
*தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகென்*
*றெய்திய இருபான் மூன்றாம் ஈற்றவும்*
*செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.* —நன் . 137

என்று நூற்பாவைப் பற்றிச் சங்கரநமச்சிவாயர், "கையறியா மாக்கட்கன்றி நூலியற்றும் அறிவினை யுடைய மக்கட்குப் பல்கலைக் குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான் புகழ்போல விளங்கி நிற்றலான், உலக மலையாமை உள்ளிட்ட பத்து அழகொடும் பிறந்து நின்றது இச்சூத்திரம் என்று உணர்க" என்று பாராட்டு கின்றார். —நன். 137 உரை

"ஒருவன் ஊசி முனையில் நின்றுகொண்டு பன்னூறாண்டுகள் தவம் செய்யினும் இத்தகையதொரு சூத்திரத்தை இயற்றுதலரிது" என்று மற்றொரு பெரியாரும் இயம்பியிருக்கின்றார்.

உலகில் வேறு எந்த இலக்கண நூலுக்காவது இவை போன்ற புகழ் மொழிகள் கிடைத்ததுண்டோ? இத்தகு சிறப்புடைய நன்னூல் இன்று தமிழ் கற்கும் மாணாக் கராலும்

விரும்பிக் கற்கப்படுவதில்லை. நன்னூலா அது?ஐயோ, பொல்லாத நூல். பொல்லாத பாம்பை நல்ல பாம்பு என்று சொல்வதுபோல இந்தப் பொல்லாத நூலை நன் னூல் என்று மங்கலமாகச் சொல்லு கிறார்கள் என்கிறார் அரை குறையாக இலக்கணம் படித்த அன்பர் ஒருவர்!

நன்னூல் என்பது தன்மையால் பெற்ற பெயர் என்பர் சங்கர நமச்சிவாயர். நிற்க.

இலக்கிய நுட்பங்களே சுவைத்தற்குரியனதாம். இதனை, "பழைய சான்றோர் அரிதிற் கண்டுரைத்த இலக்கண நுணுக்கங் களைக் கற்றுச் சுவைத்தல் வேண்டும் என்ற வேணவாவுடைய சான்றோர் இன்றும் உளர்" என்று முதுபெரும் புலவர் தி.வே. கோபாலய்யர் தமது இலக்கண விளக்கப் பதிப்பின் முன்னுரை யில் உரைப்பதால் உணரலாம். எனினும் நூற்பாக் களிலும் உரைகளிலும் காணப்பெறும் இலக்கண நுட்பங்கள் அனைத் தையும் சுவைக்கும் பணியை யான் இங்கு மேற் கொள்ளவில்லை. அவற்றிற் காணப்படும் இலக்கிய நயங்களிற் சிலவற்றையே எடுத்துக் காட்டினேன்.

### பொருள் நயம்

செய்யுளின் இலக்கணங் கூறும் போது பவணந்தியார் 'அணிபெறச் செய்வன செய்யுள்' என்றார். அணிபெற வேண் டியன இலக்கியச் செய்யுட்கள் மட்டுமல்ல, நூற்பாக்களும் தான். இந்த உண்மையை நூற்பாக்கள் பல கூறாமற் கூறுகின்றன. உவமை, இரட்டுற மொழிதல் முதலிய அணிகள் பயின்ற நூற்பாக்கள் பல உண்டு. இங்குச் சில காண்போம்.

### உவமை

நன்னூலில் ஆசிரியர் ஆகாதவர்க்கு உவமையாகக் கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை, முடத் தெங்கு ஆகியன கூறப்படுகின்றன. இந்த உவமைகள் பவணந்தி யாருடையன அல்ல. தொல்காப்பியம் எழுத்ததிகார உரையில் நச்சினார்க்கினியர் காட்டும்,



**கழற்பெய் குடமே மடற்பனை முடத்தெங்கு**
**குண்டிகைப் பருத்தியோ டிவைஎன மொழிப**

என்ற பழைய நூற்பாச்செய்தியையே பவணந்தியார் எடுத்தாளு கின்றார். என்றாலும் இவை எப்படி ஆசிரியர் ஆகாதவர்க்கு உவமையாகின்றன என்பதை நன்னூலார் மிக அழகாகத் தனித்தனி நூற்பாக்களில் [தாம் மேற் கொண்ட தொகுத்தல் நெறியையும் விடுத்து] விரிவாக விளக்கியிருக்கிறார். இது அந்த உவமைகளின் அருமை பெருமைகளை அனைவரும் அறிய வேண்டும் என்ற அவர்தம் கலையுள்ளத்தைக் காட்டுகின்றது.

**கழற்குடம் :** கழற்சிக்காய்களை மகளிர் விளையாட் டுக்குப் பயன்படுத்துவதுண்டு. இக்காலத்தில் வட்டு [கேரம்], நாற்படை; [சதுரங்கம்] முதலியன விளையா டிய பின் அவற்றின் காய்களை ஒரு பெட்டியில் இட்டு வைப்பது போல்,அக்காலத்தில் ஆட்டம் முடிந்தபின் இக்காய்களை அதற்கென்று உள்ள ஒரு சிறு குடத்தில் இட்டு வைப்பார்கள். அக்குடம் கழுத்துக் குறுகியதாய் இருக்கும். அதிலே போட்ட காய்களை கவிழ்த்துக் கொட்டும் போது இறுதியில் போட்ட காய் முதலிலும் முதலிலே போட்ட காய் இடையிலும் அல்லது இறுதியிலு மாக முறை தடுமாறித்தான் வெளியே வந்து விழும். இது எப்படி ஆசிரியர் ஆகாதவர்க்கு உவமை?

ஆசிரியர் சிலர், தாம் கற்றுக் கொண்ட முறைப்படி அன்றி, முறை தடுமாறி முன் பின்னாகத் தான் மாணாக்கருக்குச் செய்தி களைக் கற்பிப்பார்கள். அன்மையில் தாம் அறிந்து கொண்ட அரிய பொருளை – மாணவர்க்கு வேண்டாததும் உணர்தற்குஅரியதுமாக இருந்தாலும் – தம் அறிவின் பெருமை விளங்க வேண்டும் என்பதற்காக ஆர்வத்துடன் கற்பிப்பார்கள். இது கற்பிக்கும் முறைக்கு முரணானது. இப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு இதை விடப் பொருத்த மான உவமை இருக்க முடியாது.

**பருத்திக் குண்டிகை :** பனை நுங்கு முற்றினால் பனங் கொட்டையாகும். முற்றிக் காய்ந்த கொட்டை தேங்காய் போன்றது. அதன் மூக்குப் பகுதியில் சிறிதளவு துளையிட்டு அதன் வழியாக உள்ளிருக்கும் பருப்பினைச் சிதைத்து எடுத்து

விடுவார்கள். இப்போது அதற்கு பனங்குடுக்கை என்று பெயர். தீப்பெட்டி இல்லாத பண்டைக்காலத்தில் நெருப்பை உண்டாக்கு வதற்குரிய கையடக்கமான கருவியாக இது பயன்படுத்தப் பட்டது. இதனுடன் 'சக்கி முக்கி' எனப்படும். [கல்லான மரத்தின் [Fossil tree] சிதைவு] சிறு துண்டுக் கல்லும், சிறிய எஃகுத் தகடும் இருக்கும்.

40 ஆண்டுக்கு முன் ஒரு பெரியவர் சுருட்டுப் பிடிப்பதற் காக மடியில் இத்தகைய கருவியை வைத்திருந் ததை நான் பார்த்திருக்கிறேன். பஞ்சினைச் சட்டியில் இட்டுக் கருக்கி இதனுள் போட்டுத் திணித்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பஞ்சில் சிறிதளவு எடுத்து அக்கல்லின் விளிம்பில் வைத்து அருகில் எஃகுத் துண் டால் தட்டினால் எழும் தீப்பொறி பஞ்சிலே எளிதில் பற்றிக் கொள்ளும். பஞ்சைச் செவ்வி செய்து ஈரம் படாமல் காப்பாகப் போட்டு வைக்கும் இந்தக் குடுக்கைக் குத் தான் பருத்திக் குண்டிகை என்று பெயர். இது எப்படி ஆசிரியர் ஆகாதவர்க்கு உவமை?

மடற்பனை முடத்தெங்குகளின் உவமைப் பொருத் தம் பலர்க்கும் தெரிந்திருக்குமாதலின் அவற்றை விரிவஞ்சி விடுக்கின்றேன்.

கழற்குடம், பருத்திக் குண்டிகை ஆகியவை பற்றிய நன்னூலார் விளக்கங்களைக் காணுங்கள்.

*பெய்த முறை யன்றிப் பிறழ உடன்தரும்*
*செய்தி கழற்பெய் குடத்தின் சீரே* – நன் . 32
*அரிதிற் பெயக்கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு*
*எளிதீ வில்லது பருத்திக் குண்டிகை* – நன் . 34

மாணாக்கர் ஆகாதவர்க்கு இல்லிக்குடம் [பொத்தற் குடம்], ஆடு, எருமை, நெய்யரி [பன்னாடை] என நான்கு உவமை களை நன்னூலார் கூறுகின்றார். இவை பற்றிப் பலரும் அறிந்திருக்கலாம். தொல்காப்பியம் எழுத்ததிகார உரையில் நச்சினார்க்கினியர், மாணாக்கர் ஆகாதவர் இயல்பைக் கூறுவதாகக் காட்டும் நூற்பா,



*குரங்கெறி விளங்காய் எருமை ஆடே*
*தோணி என்றாங்கு இவையென மொழிப*

என்பது. இவற்றுள் மற்றவை பெரும்பாலோர் அறிந்தவை யாதலின் குரங்கெறி விளங்காய் என்ற உவமையை மட்டும் இங்கே பொருளொடு பொருத்திப் பார்ப்போம்.

**குரங்கெறி விளங்காய்** : நீர் வளமிக்க சோழ நாட்டின் கழனிகளில் உழவர்கள் சேடை ஓட்டிக் கொண் டிருக்கிறார்கள். அடுத்துள்ள பலாமரத்தில் ஒரு குரங்கு பலாப்பழத்தைப் பறிக்கின்றது. அதைக் கண்ட உழவர்கள் படைச்சாலில் கிடக்கும் சங்கை எடுத்து அந்தக் குரங்கை அடிக்கின்றார்கள். ஆனால் குரங்கோ அருகிலிருந்த தென்னை மரத்தில் தாவி இளநீரைப் பறித்துத் திருப்பி யடிக்கின்றது. எத்தனை அழகான காட்சி. நமக்கு இளநீர் தேவையென்றால் கூடத் தென்னை மரத்தில் உள்ள குரங்கைக் கல்லால் அடிக்கலாம் போல் தோன்றுகின் றது! இக்காட்சியைக் கூறும் தனிப்பாடல் ஒன்றின் பகுதி வருமாறு :

***பங்கப் பழனத் துழும் உழவர்***
***பலவின் கனியைப் பறித்ததென்ற***
***சங்குஇட் டெறியக் குரங்கிளநீர்***
***தனைக்கொண் டெறியும் தமிழ்நாடா!***
*- புகழேந்திப் புலவர், தனிப்பாடல்*

குரங்கின் இயல்பைக் குறிக்கவே இதனைக் குறிப்பிட் டேன். விளா மரத்தில் காய்கள் இருக்கின்றன. ஏறிப் பறிக்க இயலாத இடத்தில் மரம் இருக்கிறது. எளிதான வழி ஒன்று உண்டு. அம்மரத்தில் இருக்கும் குரங்கு களை நோக்கிக் கல்லை விட்டெறிந்தால் போதும். அவை விளங்காய்களைப் பறித்து நம்மை அடிக்கும். இப்படிப் பெறுவதுதான் குரங்கெறி விளங் காய். இது எப்படி மாணாக்கர் ஆகாதவர்க்கு உவமை?

ஆசிரியர்பால் அச்சமும் அன்பும் கொண்டு, அவர் மகிழும் வகையில் வழிபாடு செய்து, அவர் குறிப்பின் வழி ஒழுகி, இரு என இருந்து, ஆசிரியர் சொல்வதை ஓவியப் பாவை போல் அடங்கியிருந்து கேட்டு மனத்தில் அமைத்தல் நல்ல மாணாக்கர் ஒழுக்கமாக நன்னூல் கூறுகின்றது.

*கோடன் மரபே கூறும் காலைப்*
*பொழுதொடு சென்று வழிபடல் முனியான்*
*குணத்தொடு பழகி அவன்குறிப் பிற் சார்ந்து*
*இருஎன இருந்து சொல் எனச் சொல்லிப்*
*பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்*
*சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்*
*செவிவா யாக நெஞ்சுகளன் ஆகக்*
*கேட்டவை கேட்டவை விடாதுஉளத் தமைத்துப்*
*போஎனப் போதல் என்மனார் புலவர்* —நன் . 40

இப்படியெல்லாம் நடந்து துன்பப் படாமல் ஆசிரியரிடம்எளிதில் கல்வி கற்கும் மாணாக்கரும் உண்டு. இவர்கள் நல்லாசிரியரை அடுத்து அவர்களை எவ்வகையாலேனும் வருத்தித் தாம் கருதிய பொருள்களை எளிதில் அறிந்து கொள்வார்கள். இத்தகைய மாணாக்கருக்குத் தான் குரங்கெறி விளங்காய் உவமை. இதற்குரிய நூற்பா வருமாறு :

*கல்லால் எறிந்து கருதுபயன் கொள்வோன்*
*குரங்கெறி விளங்காய் ஆமெனக் கூறுப*
—தொல்.எழுத்து. நச்சர் சிறப்புப்பாயிர உரை

*உவமை என்னும் தவலரும் கூத்தி*
*பல்வகைக் கோலமும் பாங்குறப் புனைந்து*
*காப்பிய அரங்கினுள் யாப்புற நடிக்குமே*

என்பார் பரிதிமாற்கலைஞர். நம் தமிழில் காப்பியங் களைப் போல் இலக்கணங்களும் உவமைக் கூத்தியின் நடிப்புக்கேற்ற நல்லரங்குகளாய் அமைந்துள்ளன.

**இரட்டுற மொழிதல்**

இலக்கணங்களில் இவ்வணிக்கு இடம் மிகுதியும் உண்டு. காட்டாக ஒன்று மட்டும் காண்போம். எல்லாம் என்ற சொல் அஃறிணையில் வரும் போது, அதன் முன் வேற்றுமை உருபு புணர்ந்தால், இடையில் அற்றுச் சாரியையும் உம்மையும் பெற்று,

**எல்லாம்** + அற்று + ஐ + உம் = எல்லாவற்றையும் என்று புணரும். இதனை நன்னூலார்,



*எல்லாம் என்பது இழிதிணை யாயின்*
*அற்றோ டுருபின் மேல்உம் உறுமே*

என்று கூறுகின்றார்.

மேற்கண்ட புணர்ச்சி வேறு வகையாகவும் வருவதுண்டு. எல்லாம் + அற்று + இன் + ஐ + உம் = எல்லாவற் றினையும் என்று முன் சொன்னவற்றோடு இடையில் ஓர் இன்சாரியை வருதலும் உண்டு. இந்த இரண்டாம் இலக்கணத்தை இந்த நூற்பாச் சொல்லவில்லையே; குன்றக்கூறல் என்று குற்றம் தங்கி விட்டதே என்று திகைக்கிறோம். நூற்பாவை மீண்டும் படிக்கி றோம். இந்தப் பொருள்கூட அதில் இருப்பது புலப் படுகிறது.

*எல்லாம் என்பது இழிதிணை யாயின்*

என்று முதலிற் படித்தோம். இப்போது,

*எல்லாம் என்பது இழிதிணையாய் இன்*
*அற்றோடு உருபின்மேல் உம் உறுமே*

என்று வேறு வகையாகப் பிரித்துப் படிக்கிறோம். இரண் டாவது புணர்ச்சிக்குரிய இலக்கணவிதி கிடைத்து விடுகிறது. இலக்கண நூற்பாக்களிலே இரட்டுற மொழிந்து விளையாடத் தமிழிலன்றி வேறு எம்மொழியில் இயலும்?

**எடுத்துக் காட்டுச் செய்யுட்களின் இலக்கிய நயம்**

இனி, இலக்கண உரைகளில் காணப்படும் எடுத்துக் காட்டுச் செய்யுட்களின் இலக்கிய நயங்களைச் சிறிது காண்போம். இத்தகைய செய்யுட்களில் இருவகை உண்டு.

1. பிற இலக்கியங்களினின்று மேற்கோளாக எடுத்துக் காட்டப் பெற்றவை.

2. குறிப்பிட்ட இலக்கணத்தை விளக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டவை.

முதல் வகையைச் சேர்ந்த செய்யுட்களை அவ்வவ் விலக்கியங்களை நுகரும் போது சுவைக்கும் வாய்ப் புண்டு. இரண்டாம் வகைச் செய்யுட்களே பலராலும் புறக்கணிக்கப்

படுகின்றன. இலக்கண உரைகாரரும் அவற்றின் நயங்களை எடுத்துக்காட்டுவதில்லை; அஃது அவர் தம் பணியும் அன்று. காட்டாக, நன்னூலில் ஒற்றளபெடை பற்றிய 92 ஆம் நூற்பாவின் உரையில்,

*எங்ங் கிறைவன்உளன் என்பாய் மனனே!யான்*
*எங்ங் கெனத்திரிவா ரின்*

என்ற குறட்பா ஒன்று குறிற்கீழ் ஒற்றளபெழுந்தமைக்குக் காட்டாக உள்ளது. இதனைக் காண்போர் எங்ங் என்ப தில் ஏ என்ற தனிக்குறிலை அடுத்து ஒற்றளபெழுந் தது என்ற அளவில் அறிந்து மேற்செல்வரே யொழிய, அச் செய்யுளின் பொருளைச் சற்றும் நோக்குவதில்லை. அது அவ்விலக்கணத்தை அறிதற்கு இன்றியமையாததும் அன்று. எனினும் இத்தகைய பாக்களின் பொருட்களை நுனித்தாய்ந்தால் ஈடிணையற்ற இலக்கியச் சுவை நலம் கிடைக்கும்.

இறைவன் உண்மையை மறுக்கும் இறைமறுப் பாளன் ஒருவன் அடிக்கடி 'எங்கே இருக்கிறான் இறைவன்?' என்று கேட்டு வருகிறான். ஒரு நாள் அவனுக்கு, 'எல்லாம் இறைவன் வடிவமே' என்ற கருத்தில் நம்பிக்கை பிறக்கிறது. அவன் தன் மனத்தை நோக்கிப் பின்வருமாறு கூறுகின்றான். "யான் எங்கே? யான் எங்கே என்று தன்னைத்தானே கேட்டுத்திரியும் பித்தனைப் போல, மனமே! நீயும் இதுவரையில் எங்கே இறைவன் உளன்? எங்கே இறைவன் உளன்? என்று கேட்டுக் கொண்டிருந்தாயே, நீயே இறைவன் தானே! இதென்ன வேடிக்கை!" ஒரு கருத்தை ஏழு சீர்களில் அமைத்துச் சுவை யொழுகக் கூறிய இப்பாவலர் யார் என்பது இன்னும் அறியப்படவில்லை.

யாப்பருங்கல விருத்தியுரையில் அறுசீர்ச் சிறப்புடைக்கழி நெடிலடியாசிரியவிருத்தத்திற்கு இலக்கியமாகப் பின் வரும் பாடல் காணப்படுகின்றது.

*விடஞ்சூழ் அரவின் இடைநுடங்க*
*மின்வாள் வீசி விரையார் வேங்*
*கடஞ்சூழ் நாடன் காளிங்கன்*
*கதிர்வேல் பாடும் மாதங்கி*



*வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம்*
*வடிக்கண் நீல மலர்தாந்தாம்*
*தடந்தோள் இரண்டும் வேய்தாந்தாம்*
*என்னும் தன்கைத் தண்ணுமையே.*

ஆடற்கலைக் கழகு தேடப் பிறந்தவள் ஒருத்தி ஆடுகின்றாள். தாம் தாம் என்று ஒலிக்கிறது தண்ணுமை. அதற்கேற்ப அடி மிதித்து ஆடுகின்றாள். மத்தளத்தில் வாசிக்கும் சதிகளைச் சொற்கட்டு என்றும் சொல்வதுண்டு. சில சமயம் மத்தளம், தவில் போன்ற கருவிகளை வாசிக்கும் கலைஞர்கள் சில செய்திகளைக் படைத் தம் வாசிப்பினால் பிறருக்கு உணர்த்தி விடுவார்கள்.

ஒரு திருமண ஊர்வலத்தில் மேளக்காரர்கள் வாசித்துக் கொண்டு வந்தார்கள். ஒரு கோயிலுக் கெதிரில் யாரோ ஒருவர் நாதசுரக் கலைஞரிடம் சிறிதளவு பஞ்சாமிர்தத்தைக் கொடுத் தார். அவரும் எதிர்பாராமல் கொடுக்கப்படும் திருவமுதினை மறுக்காமல் தன் உள்ளங்கையில் வாங்கிக்கொண்டார். ஒரு கையில் பஞ்சாமிர்தம்; மறுகையில் நாதசுரம். "இதை எல்லோர் முன்னிலையிலும் எப்படி நக்கி உண்பது? விரலால் எடுத்துத் தின்னலாம் என்றால் வாசிப்புக்கு இடையில் அதற்கு நேரமில் லையே. நக்குவதா? தின்பதா? என்பது அவரது திண்டாட்ட மாய் விட்டது. இதை நொடியில் உணர்ந்த தவில்காரர், "நக்கறதா திங்கறதா", "நக்கறதா திங்கறதா" என்று வாசித்துப் புன்முறுவல் பூத்தார்.

புரிந்து கொண்டவர்கள் இதைச்சுவைத்து நகைத்தனர். தாளக் கருவிக் கலைஞர்கள் வாசிக்கும் சதிகளுக்குரிய சொல் என்ற பெயரின் பொருத்தத்தைக் காட்டவும் தாளக் கருவிகள் கருத்தை வெளியிட வல்லன என்பதைக் காட்டவும் இதனை இங்குக் குறிப்பிட்டேன்.

மேற்கண்ட பாடலில் வரும் தண்ணுமையும் பேசுகிறது. அது என்ன தான் சொல்லுகிறது? இந்தத் தண்ணுமை தாம் தாம் என்று தான் சொல்லுகிறது. அது என்ன தாம் தாம்? நமக்குப் புரியவில்லை. பாவலர் அதை விளக்குகிறார் : 'அவள் கொங்கை கள் மலை தாம்! மலை தாம்!' என்கிறதாம். 'அவள் கண்கள்

நீலமலர் தாம்! நீலமலர் தாம்! என்கிறதாம். அவள் தோள்கள் மூங்கில் தாம்! மூங்கில் தாம்! என்கிறதாம்!

இப்போது மீண்டும் ஒரு முறை பாட்டைப் பாடுவோம். ஆமாம் அது அப்படிச் சொல்வது போலத் தான் நமக்கும் கேட்கிறது. அது சொல்லும் செய்திகள் அவைதாம்! அவை தாம்! என்ற நாமும் புரிந்து கொள்ளுகிறோம்! மேலும்,

**விடஞ்சூழ், இடைநுடங்க,**
**வேங்கடஞ்சூழ் நாடன் காளிங்கன்,**
**மாதங்கி,**
**வடஞ்சேர் கொங்கை,**
**தடந்தோள் இரண்டும்**

ஆகிய இடங்களில் தம் தம் என்று மத்தள ஓசை இப்போது நன்றாக நமக்குக் கேட்கிறது. எத்துணை நயம் பயக்கின்றது இந்தத் தனிப்பாடல்! இதை இயற்றிய பாவலர் பற்றியும் ஏதும் அறியக்கூடவில்லை.

தொல்காப்பியச் செய்யுளியல், அறுசீரடியே என்ற நூற்பாவின் பேராசிரியர் உரையில், முன்னும் பின்னும் அறுசீரான் வந்து மூன்றாமடி நேரடியாய் வந்த கொச்சகக் கலிப்பாவுக்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் சுவையான பாடல் காணப் படுகிறது. இத்தகைய பாடல்களைப் பின்வந்தோர் ஆசியத் துறையில் அடக்கினர்.

**முன்னைத்தம் சிற்றில் முழங்கு**
**கடலோதம் மூழ்கிப் பேர**
**அன்னைக் குரைப்பன் அறிவாய்**
**கடலேஎன் றலறிப் பேரும்**
**தன்மை மடவார் தளர்ந்துகுத்த**
**வெண்முத்தம்**
**புன்னை அரும்பேய்ப்பப் போவாரைப்**
**பேதுறுக்கும் புகாரே எம்மூர்!**
(தொல். செய். 94, பேரா. உரை மேற்கோள்)

காவரிப்பூம்பட்டினத்துக் கடற்கரை. புன்னைமர நிழல். சிறுமியர் சிலர் மனல்வீடு கட்டிக்கொண்டிருந்தனர். திடீரென்று ஒரு பெரிய அலை! மனல்வீடு இருந்த இடம் தெரியாமல் கரைந்து போய்விட்டது. கடலே! இரு, உன்னை அம்மா கிடடேயே



சொல்லி என்ன செய்கிறேன் பார்! என்று அலறிக்கொண்டே, தங்கள் முத்துமாலைகளைச் சினத்தால் அறுத்துச்சிதறிக் கொண்டே ஓடினர். அப்போது அங்கே சிந்திய முத்துகள், புன்னை மரத்தடியில் உதிர்ந்து கிடந்த புன்னை யரும்புகளுடன் கலந்து கிடந்தன. அவை அவ்வழியே போவோர் வருவோரை, எடுக்கலாமா வேண்டாமா என்று தடுமாறச்செய்தனவாம்! எத்தனை இனிய காட்சி!

இது போன்ற, இயற்றியவர் பெயர் தெரியாத இனிய பாடல்கள் பண்டை இலக்கண உரைகளில் ஏராளமாகக் காணப் படுகின்றன. இலக்கணம் கற்போர் அவற்றில் குறிப்பிட்ட இலக்கணம் எவ்வாறு அமைந்துள்ளது என்று காண்பதோடு நின்றுவிடுவர். அவற்றில் அமைந்துள்ள இலக்கிய நயத்தைச் சுவைப்பதில்லை.

இத்தகைய இனிய பாடல்கள் இலக்கண உரைகளில் ஆங்கு ஈங்கு ஊங்காக இலைமறை காய்போற் காணப் படுகின்றன. அவற்றை இலக்கிய நயங்காணும் நோக்கில் ஒரு முறை படிக்க வேண்டும்.

இக்கட்டுரையில் யான் வற்புறுத்தும் கருத்து, இலக்கணச் சுவைக்காகமட்டுமன்றி, இலக்கியச் சுவைக்காகவும் தமிழிலக் கணம் ஓதலாம் என்பதே.

இப்போது சொல்லுங்கள், கேழ்வரகில் நெய் ஒழுகுகிறதா இல்லையா? அறிவியல்கூட இன்றைக்குக் கேழ்வரகிலும் நெய் எடுக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளது.

கேழ்வரகில் நெய் எடுக்க முடியும் என்பது அண்மைக் கண்டுபிடிப்பு. ஆனால் நம் தமிழ் இலக்கணமோ என்றைக்குமே இலக்கிய நயம் பயந்து கற்பாரை இன்புறுத்தி வருகின்றது.



# மரபு பிறழ்வுகள்

தமிழ் நாட்டுக்கு வந்து தமிழைக் கற்றுக்கொண்டு பேசிய மேனாட்டுப் பெரியார் ஒருவர், கோழிக் குஞ்சினைக் 'கோழிக் குட்டி' என்று குறிப்பிட்டார். கேட்டவர்கள் நகைத்தனர். அவருக்கோ ஒன்றும் விளங்கவில்லை; அது தமிழ் மரபு அன்று என்று பின்னர் அவருக்கு விளக்கப்பட்டது.

குஞ்சு, குட்டி, கன்று என்பன இளமைப் பெயர்கள் தாம். ஆனால் கோழிக் குட்டி, பசுவின் குஞ்சு, நாய்க் கன்று என்று யாரும் சொல்வதில்லை. ஆடு மேய்ப்பவனைப் பாகன் என்றோ, யானை மேய்ப்பவனை இடையன் என்றோ சொல்வதில்லை. காரணம் என்ன?

அது தான் தமிழ் மரபு. எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினரோ அப்படிச் செப்புவது தான் மரபு.

*எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்*
*செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.* — நன்னூல் 388

இதில் தவறு செய்தால் அது மரபு வழு எனப்படும். தொல்காப்பியர் காலத்தில் இருந்த மரபுகள் அனைத்தும் இப்போதும் உள்ளன என்ற சொல்ல முடியாது. பல மரபுகள் உள்ளன; சில மரபுகள் மாறிவிட்டன. தொல்காப்பியத்தின்படிப் பனைமரத்தைப் பனம்புல் என்றும், தென்னை மரத்தைத் தெங்கம்புல் என்றும் சொல்ல வேண்டும்.

*புறக்கா ழனவே புல்லென மொழிப* -தொல்.பொருள் . 640

என்பது மரபு இலக்கணம்.



*இரும்பனம் புல்லின் பசுந்தோட்டுக் குடம்பை*

என்று பழம்பாடலில் வருகிறது.

பசுவின் இளமையைக் கன்று என்று தான் சொல்ல வேண்டும். இன்று அதனை இரண்டு இளமைப் பெயர்களை இணைத்துக் 'கன்றுக் குட்டி' என்று சொல்லுகிறோம். சிறுமியைக் 'குட்டி' என்ற சிலர் அழைக்கின்றனர். குட்டி என்பது நாய், பன்றி, புலி, முயல், குரங்கு ஆகியவற்றின் இளமைப் பெயராக வரும் என்பதே தொல்காப்பியம் கூறும் மரபு.

ஒரு மொழியில் காலப்போக்கில் இப்படிப் பழைய மரபுகள் உயர்ந்தோராலும் மீறப்படுகின்றன. மரபு பிறழ்வுகள் எல்லா மொழிகளிலும் காணப்படுவனவே. இவற்றுள் உயர்ந்தோர் தொடர்ந்து மேற்கொள்ளும் மரபு பிறழ்வுகளில் சில நிலையான வாழ்வு பெற்றுவிடுகின்றன.

*வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே*
*நிகழ்ச்சி அவர்கட் டாக லான* — தொல். பொருள். 647

வழக்கு என்றசொல்லின் வழக்கே ஆராய்ச்சிக்குரி யது. வழக்கத்தில் உள்ளது என்ற பொருள் வழக்கு என்பதற்கு உண்டு. "வழக்காவது உலகத்தார் அடிப்படச் செய்து போந்த செயல்' என்பது பழைய விளக்கம். இந்தப் பொருளில் இப்போதும் இச்சொல் வழங்கப்படுகிறது. பிற்காலத்தில் இதற்கு 'முறை யிடுதல்' என்ற வேறு ஒரு பொருளும் ஏற்பட்டது.

'வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனது எனது என்று இருப்பார், அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள் மேல் செல்வது' —திருக்குறள் உரைப்பாயிரம்

என்றுவிளக்குகிறார் பரிமேலழகர். சிலப்பதிகாரத்திலும் வழக் குரைகாதை இப்பொருளில்தான் வருகிறது.

ஓர் ஆசிரியர் யானை என்ற சொல்லை ஆனை என்று கரும்பலகையில் எழுதினார். அதைக் கண்ட தலைமை யாசிரியர், "யானை' என்பது தானே சரி; நீங்கள் 'ஆனை' என்று எழுதியிருக்கிறீர்களே'' என்று கேட்டார். "ஆனை' என்ற

சொல்லும் வழக்கில் இருக்கிறது'' என்றார் ஆசிரியர். "அப்படியா? இருந்தாலும் வழக்கு முடிவில் என்ன தீர்மானம் ஆகிறதோ யார் கண்டார்கள்? வழக்கில் இருப்பதையெல்லாம் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்காதீர்கள்'' என்றாராம் தலைமையாசிரியர்! வழக்கு என்ற சொல் தன் பழைய வழக்கை இழந்து வருகிறது என்பதற்கு இது எடுத்துக் காட்டு.

மரபு பிறழ்வை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. ஒரு மொழிக்குள்ளேயே ஏற்படுவன.
2. பிறமொழித் தொடர்பால் ஏற்படுவன.

வரலாற்றுக்கு எட்டாத காலம் முதல் நமக்குக் கல்வி, வாணிகம், ஆட்சி, மதம் முதலிய பல காரணங்களால் பிறமொழித் தொடர்பு இருந்து வருகிறது. எப்படியோ புகுந்துவிட்ட – மரபுக்கு மாறான அல்லது புதிய – சில வழக்குகளுக்கு நெகிழ்ந்து கொடுக்கும் இயல்பு தமிழ் இலக்கணத்துக்கு இருக்கிறது.

***கடிசொல் இல்லைக் காலத்துப் படினே*** – தொல். சொல் . 4552 என்ற நூற்பாவின் உரையில் சேனாவரையர், 'இன்ன அனுமதிக்கும் காலமாம் அக்காலத்து, அவை வழுவன் மை எல்லா ஆசிரியர்க்கும் உடம்பாடாகலின் அதனைத் தழுவிக் கொண்டவாறு என்க' என்று விளக்கம் தருகிறார்.

பண்டைக் காலத்தில் இடம் பெற்று விட்ட மரபு பிறழ்வுகளை விடுத்து, இக்காலத்தில் ஏற்பட்டுள்ள சிலவற்றை மட்டும் இனி ஆராய்வோம். இன்றைய பிறழ்வுகளில் கொள்ளத் தக்கனவும் உண்டு; தள்ளத்தக் கனவும் உண்டு; கருதத்தக்கனவும் உண்டு; கண்டிக்கத் தக்கனவும் உண்டு.

## 1. கொள்ளத் தக்கன சில :

வம்பு என்ற சொல் பழந்தமிழில் நிலையின்மை என்ற பொருளை உடையது.

***வம்பு நிலையின்மை*** —தொல். சொல் . 327

'வம்பமாக்கள்' என்பது ஓர் ஊருக்குள் புதிதாக வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருக்கும் மக்கள் (Floating



population) என்ற பொருளில் மணிமேகலையில் வருகிறது. இன்று அது பொல்லாங்கு, அடாவடி என்ற பொருள்களில் வழங்கிவருகிறது.

பழமை என்ற பொருளுடைய தொல்லை என்ற சொல் இன்று தொந்தரவு என்ற பொருளைப் பெற்றுவிட்டது.

கேள்வி என்பது காதால் கேட்பதையே குறிக்கும். இன்றோ அது வினாவையும் குறிக்கிறது. இப்படிப் பல உள.

## நடை மாற்றம்

இன்று தொல்காப்பியர் நம்மிடையே வந்தால், 'நான் நேற்று இந்தப் புத்தகத்தைக் கடையில் வாங்கினேன்' என்று அவரிடம் நாம் சொன்னால் அவருக்கு ஒன்றுமே புரியாது. ஏனெனில் இத்தொடரனில் உள்ள எல்லாச் சொற்களும் அவர் காலத்துக்குப்பின் மருவியும் புதியவாய்ப் புகுந்தும் வழங்குவன. 'யான் நெருநல் இந்நூலை அங்காடியிற் கொண்டேன்' என்ற பழைய முறையிற் கூறினால் தான் அவருக்குப் புரியும்.

இல்லை என்பது முன்னிலைக்குரிய வினை. யான் இல்லேன், நீ இல்லை, அவன் இல்லன் என்பது தான் இலக்கண முறை. ஆனால் இந்த 'இல்லை', தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே யான் இல்லை, நீ இல்லை, அவன் இல்லை என எல்லா இடத்துக்கும் பாலுக்கும் பொதுவாய் வழக்குப் பெற்றுவிட்டது. தொல்காப்பியரும் இதனை ஏற்று இலக்கணம் வகுத்தார்.

உண்டு என்பது 'அது உண்டு' என ஒன்றன்பாலுக்கு மட்டுமே தொல்காப்பியர் காலத்தில் வழங்கியது. நன்னூலார் காலத்தில் எல்லாப் பால் இடங்களுக்கும் பொதுவாகி,

நான் உண்டு
நாங்கள் உண்டு
நீ உண்டு
நீங்கள் உண்டு
அவன் உண்டு
அவள் உண்டு
அவர்கள் உண்டு

அது உண்டு
அவை உண்டு

என வழங்கியது. நன்னூல் இதனை ஏற்று இலக்கணம் வகுத்தது.

இது போலவே பலவின் பாலுக்கு உரிய அல்ல என்னும் வினை, பால் இடங்கள் அனைத்திற்கும் பொதுவாய்,

நான் அல்ல
நாங்கள் அல்ல
நீ அல்ல
நீங்கள் அல்ல
அவன் அல்ல
அவள் அல்ல
அவர் அல்ல
அது அல்ல
அவை அல்ல

என இன்று மரபு பிறழ்ந்து வழங்கி வருகிறது. இதனை வருங்காலத் தமிழிலக்கணம் ஏற்றுக் கொள்ளக்கூடும்.

ஆங்கிலத்தில் book என்ற பெயரிலிருந்து to book என்ற வினை பிறக்கும். Water என்ற பெயரிலிருந்து to water என்ற வினை பிறக்கும். இதுபோல், பெயரிலிருந்து தெரிநிலை வினை பிறத்தல் தமிழின் இயல்பன்று. ஆயினும்பெயரடியாகவும் தெரி நிலை வினை பிறக்கும் என்பதற்குச் சித்திரித்தான், கடைக்கணித்தான் என்ற சொற்களைக் காட்டுவார்கள். இவற்றில் சித்திரம் வட சொல். கடைக்கண் என்பதும் கடாட்சம் என்ற வட சொல்லின் மொழி பெயர்ப்பு. அதனால் வடமொழியின் இயல்பை இவை பெற்று வந்தன போலும்.

பெரியாழ்வார், தேன் என்ற பெயரிலிருந்து 'தேனித்தல்' என்ற வினையை ஆக்கி ஆளுகின்றார். இது புதியன புகுதலைச் சாரும். இதுபோல் இன்றும்,

கொலை பண்ணினான்
தீர்மானம் செய்தான்
கதை விடுகிறான்
தடை போட்டார்



எனப் பெயர்களுடன் பண்ணு, செய், விடு,போடு முதலிய துணை வினைகளை இணைத்து வினைச் சொற்களை உருவாக்குகின்றோம். இவை விலக்கத்தக்கன அல்ல.

## பொருள் மாற்றம்

சில சொற்கள் இன்று தம் பொருளுக்குத் தொடர்பில்லாத வேறு பொருளைக் குறிக்கின்றன.

கண்ணோட்டம் என்பது கண்ணால் காணப்பட்டாரை அருள் செய்தல் என்பது மணக்குடவர் விளக்கம். இன்று, 'செய்தித்தாளை எடுத்து ஒரு கண்ணோட்டம் விட்டேன்!' என்று எழுதுகின்றார்கள். இங்கு, மேற்போக்கான பார்வை என்பது பொருளாகிறது.

துப்புரவு என்பது வலிமை என்று பொருள்படும். இன்று இது தூய்மைக்குப் பெயராகி விட்டது. 'வீட்டை நன்றாகத் துப்புரவு செய்!' என்கிறார்கள்.

இன்றைய பேச்சு வழக்கில் பெண் பிள்ளைகளைப் 'பொம்பிளைப் பசங்க' என்கிறார்கள். இதனைப் 'பெண் பிள்ளைப் பையன்கள்' என்று தெளிவாய்ச் சொல்லிப் பார்த்தால், இதில், பெண், பையன் என்ற இருபால் சொற்களும் கலந்துநிற்கும் 'மங்கைபங்கன்' காட்சியைக் காணலாம்! இந்நிலை பண்டைக் காலத்திலும் இருந் திருக்கிறது.

*பெண்மை யடுத்த மகனெண் கிளவியும்*
—தொல். சொல் . 164

என்ற நூற்பா அடிக்குப் 'புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை மாறோக்கத்தார் இக்காலத்துப் பெண் மகன் என்று வழங்குப' என்று விளக்கம் தருகின்றார் சேனாவரையர். எனவே, மேற்காட்டிய மரபு பிறழ்வுகள் கொள்ளத் தக்கனவே.

## 2. தள்ளத்தக்கன சில :

கல்லா மாக்களால் ஏற்படும் இழிவழக்குகளை மொழியில் வாழ்வு பெறாதவாறு விலக்குதல் அறிஞர் கடனாகும்.

காரன், காரி என்பன 'க்ரு' என்ற வடமொழியின் மரூஉ என்பர். அவை தமிழ்ச் சொற்களின் பின் ஒட்டுகளாக வேலைக்காரன், வீட்டுக்காரர் என வருவ தோடு நிற்கவில்லை. அப்பங்காரன், ஆத்தாக்காரி, அண்ணங் காரன், அக்காக்காரி என்ற வேண்டாத இடங்களி லெல்லாம் புகுந்துவிட்டன.

மாங்காப்பழம்! மாங்காப்பழம்! என்று சிலர் கூவி விற்பதை நீங்கள் கேட்டிருக்கலாம். அவர்கள் விற்பது காயா? பழமா? வாழைக்காய்ப்பழம், பலாக்காய்ப்பழம் என்று யாரும் சொல்லு வதில்லை.

### தமிழன்னையில் மேனியில் வடுக்கள்

இனித் தமிழன்னையின் மேனியில் வடுக்களாக அமைந்து கிடக்கும் பிறமொழிச் சொற்களின் நிலையைச் சிறிது காண்போம். மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் இயக்கத்தின் விளைவாகத் தனித்தமிழுக்குப் பகைவர்களும் இன்று 'நமஸ்காரத்தை' மறந்து வணக்கம் செய்கிறார்கள்; க்ஷேமம் நலம் ஆயிற்று; பஸ் பேருந்து ஆயிற்று; ஜவுளிக் கடை துணிக்கடை ஆயிற்று; கக்கூஸ், லெட்ரின் ஆகியன கழிவறைகள் ஆயின. என்றாலும் இம்மாற்றம் சிறிதளவே; மாற வேண்டியன மிகுதி என்பதை மறந்துவிடக்கூடாது. பிறமொழியாரோடு தொடர்பு மிகுந்த நகர்ப்புறத்தாரை விட நாட்டுப்புறத்து மக்களே தனித்தமிழ் மரபை நன்கு காத்து வருகின்றனர்.

அவர்கள் 'பரவாயில்லை' என்று சொல்ல மாட்டார்கள்; 'தகாதில்லை' என்று சொல்லுவார்கள்.

'உடம்பு சௌக்யமாயில்லை' என்று சொல்ல மாட்டார்கள்; 'உடம்பு செம்மையாயில்லை' என்பார்கள்.

'ஜுரம்' என்பதைக் 'காய்ச்சல்' என்பார்கள்.

'சாதம்' என்பதைச் 'சோறு' என்பார்கள்.

'சாம்பார்' என்பதைப் 'பயறு குழம்பு' என்பார்கள்.



எப்படி எப்படியோ தமிழில் கலந்துவிட்ட பிறமொழிச் சொற்களில் வெளிப்படையாகத் தெரிவன ஒழிய, தனித் தமிழ்ப் பற்றாளரும் இனம் கண்டு கொள்ள இயலாதபடி, சில சொற்கள் தமிழில் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| தகராறு, | நாடா, |
| கொய்யா, | வாத்து, |
| பல்லக்கு, | சரக்கு |
| பதில், | கொஞ்சம் |

என்பன அவற்றுள் சில.

### பிரஞ்சு மொழித் தாக்கம்

பிரஞ்சுக்காரர் தொடர்பால் தமிழில் புகுந்த – சிறப்பாகப் புதுவை மாநிலப் பகுதியில் பேசப்படும் – பிரஞ்சுச் சொற்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டால் அவற்றை அறிந்து நீக்க உதவும் என்று எண்ணுகிறேன்.

பழந்தமிழில் சுண்ணம் என்று சொல்லப்பட்ட face powder இப்பகுதியில் 'பூதர மாவு' என்று பேசப்படுகிறது. இதில் 'பூதர' என்பது Poudre என்ற பிரெஞ்சுச் சொல்லின் திரிபு.

குறடு என்று பொருள்படும் trottoir என்ற பிரெஞ்சுச்சொல் இங்கே 'தெத்துவார்' என்று மருவி வழங்குகிறது.

சமையலறை என்று பொருள்படும் cuisine என்ற பிரெஞ்சுச் சொல் 'குசினி' என்று வழங்குகிறது.

அடிபுதையரணம் (shoe) என்று பொருள்படும் sabot என்ற சொல் 'சப்பாத்து' என்று பேசப்படுகிறது.

குமிழ்( button0 என்று பொருள்படும் bouton என்ற சொல் 'பொத்தான்' என்று பேசப்படுகிறது.

துண்டு என்று பொருள்படும் toile, இங்கே 'துவாலை' என்று வழங்கப்படுகிறது.

விசிப்பலகை (bench) என்ற பொருளுடைய banc என்ற சொல் 'வாங்கு' அல்லது 'வாங்குப்பலகை' என்று வழங்கு கிறது. ஆங்கிலம் கற்றோர் செய்யும் அழிம்புகள்.

மலையில் நிற்கும் நீரைச் சுனை என்றும், வழிந்து வீழும் நீரை அருவி என்றும் கூறுதல் மரபு. அருவி என்ற அருமைத் தமிழ்ச் சொல் இருக்க, அதனிடத்தில் நீர்வீழ்ச்சி என்ற சொல் எப்படி வந்தது? ஏன் வந்தது? Water fall என்பதன் மொழி பெயர்ப்பான இது ஆங்கிலம் கற்ற தமிழர்தம் கைவண்ணம்.

ஆங்கிலச்சொற்களை மட்டுமன்று; தொடரன்களை யே அவற்றின் அமைப்பு முறை மாறாமல் மொழி பெயர்க்கும் அவல நிலையும் காணப்படுகிறது. You are requested to take part in the function என்ற கருத்தை அதே அமைப்பில் தமிழிலும் "நீங்கள் நிகழ்ச்சியில் பங்கு எடுத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளப்படுறீர்கள்" என்று எழுதுகின்றார்கள். இது தமிழாக இல்லை என்பது ஒரு புறம் இருக்க, வேண்டிக் கொண்டவர் யார் என்பதே இதில் தெரியவில்லை. நிகழ்ச்சியில் கலந்து கொள்ளு மாறு உங்களை வேண்டுகிறோம் என்பது தமிழ் மரபு.

He did not come, because he was ill என்ற அமைப்பில், 'அவன் வரவில்லை, நோயாயிருந்த காரணத்தால்' என்று சிலர் எழுதுகின்றனர். இதனை மறுமலர்ச்சி நடை என்று போற்று வோரும் உண்டு.

Radio and television என்பதை வானொலி மற்றும் தொலைக்காட்சி என்று மொழி பெயர்க்கின்றனர். ஆங்கிலத் தில் and என்பதைத் தமிழில் 'மற்றும்' என்று பெயர்த்தல்விரும்பத் தக்கதன்று.வானொலியும் தொலைக்காட்சியும் என்றோ, வானொலி தொலைக் காட்சிகள் என்றோ எழுதுவது தான் தமிழ் மரபு. Day and night என்று ஆங்கிலத்தில் சொல்வதை இரவும் பகலும்என்றோ இரவு பகல் என்றோ இராப்பகல் என்றோ சொல்வது தான் முறை. பகல் மற்றும் இரவு என்றால் சிரிப்பார்கள்.

## மொழிக் கலப்படம்

ஆங்கிலம் கற்றோர் ஆங்கிலப் பெயர் வினைக ளுடன் பண்ணு, போடு, விடு, அடி முதலிய துணை வினைகளைப் பெய்து கலவை வினைகளை உருவாக்கி advice பண்ணுகிறேன், allow பண்ணாதே, arrange பண்ணுவேன், think பண்ணு, idea பண்ணினான், overtake பண்ணினான், warn



பண்ணுகிறேன், switch போடு, dupe விடாதே, bore அடிக்கிறார் என்றெல்லாம் பேசுகின்றனர்; எழுதுகின்றனர். பிரெஞ்சு கற்ற தமிழர் சிலரும் இதுபோலவே, ajouter இடு [அழுத்தேரிடு] arranger இடு [அரான்ழேரிடு] என்று 'ஏரிட்ட' தமிழினை ஓம்புகின்றனர். Father என்பதைப் பாதிரி என்றும், Bank என்பதை வங்கி என்றும், Parliament என்பதைப் பாராளுமன்றம் என்றும் தமிழாக்கும் ஒலி ஒப்புமையாக் கம் விரும்பத்தக்கதன்று. Tutorial என்பதைத் 'தோற்றோரியல்' என்பதும், காலண்டர் என்பதைக் 'காலந்தேர்' என்பதும் குழந்தைத்தனமான தமிழாக்கங்கள்!

'தொழிற்துறை' என்று றகர மெய்யின் பின் தகர வரிசை எழுத்துக்களை எழுதுகின்றனர் சிலர். லகர ளகர, நகரங்களின் பின் தகரம் வரக்கூடாது என்பதை அறியாதவர்கள் இவர்கள். தொழில்துறை என்று தெளிவுக்காக இன்று பெரும்பாலோர் பிரித்தெழுதுகின்றனர். இலக்கணப்படி இதுவும் பிழையே. தொழிற்றுறை என்பதே மரபு. எனினும், புணர்ச்சி மரபு அறியார்க்குப் பொருள் புரியவேண்டும் என்பதால் பலர் இதை ஏற்கின்றனர். தமிழ், வடமொழி சிலர், காரணம் என்பதைக் 'கரணியம்' என்றும், நிமிடம் என்பதை 'நிமயம்'என்றும், முக்கியம் என்பதை 'முகாமை' என்றும், இலவசம் என்பதை இலவயம் என்றும் மாற்றியமைத்து அவற்றைத் தனித்தமிழ் என்கின்றனர். இதுவும் ஒலியொப்புமை யாக்கமே. இவற்றை முறையே அடிப்படை அல்லது முதல், மணித்துளி, இன்றி யமையாதது, நன்கெடை என்று குறிக்கலாம். ஒரு 'தமிழ்ப்பாடலைப்' பாருங்கள் :

*நாத பிந்து கலாதி நமோ நம*
*வேத மந்த்ர ஸ்வரூபா நமோ நம*
*ஞான பண்டித ஸ்வாமி நமோ நம - வெகு கோடி*

இதில் உள்ள அத்தனையும் வடசொற்கள். அருணகிரியார் தம் காலச் சூழ்நிலை போலும் இது. தமிழ் இலக்கணம் பிற மொழிச் சொற்கள் தமிழிற் கலப்பதைத் தடை செய்யவில்லை.

*வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ*
*எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே*
—தொல். சொல். 401

*சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்*
—தொல். சொல் .402

நாத, ஞான, பண்டித என்பன போன்ற சொற்கள் தமிழிற் கலக்கலாம் என்பது முதல் நூற்பாவின் கருத்து, மந்த்ர, ஸ்வாமி ஆகியன மந்திர, சுவாமி தமிழ் ஒலிக்குப் பொருத்தமாகச் சிதைந்து வரும் வடசொற்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்பது இரண்டாம் நூற்பாவின் கருத்து.

மந்த்ர, ஸ்வாமி என்று தமிழில் எழுதுவதற்குத் தமிழ் மரபு இடந்தரவில்லை. அருணகிரி நாதரைப் போன்ற பெரியவர்கள் செய்தாலும் இந்த மரபு மீறலைத் தமிழுலகம் ஏற்றுக் கொள்ள வில்லை. இன்றும் மந்திரம், சுவாமி என்று எழுதுவோரே மிகப் பலர். மேற்கண்ட மரபு பிறழ்வுகள் யாவும் தள்ளத்தக்கனவே. எனினும் இசைத் தமிழாதலின் இவை விதிவிலக்குப் பெறு கின்றன.

## 3. கருதத்தக்கன சில :

சுவர் என்ற சொல்லை இடையின ரகரம் இட்டு எழுதுகின்றோம், படிக்கின்றோம். ஆனால் பேசும்போது" 'சுவற்றில் ஆணி அடி', 'சுவற்றுக்கு வெள்ளை அடி' என்று தான் ஒலிக்கின்றோம். பேச்சில் பெருவழக்காகி விட்ட இப்பிறழ்வு எழுத்திலும் தலை காட்டுகிறது.

'சுவற்றில் நோட்டீஸ் ஒட்டாதே' என்பதை நக ரெங்கும் உள்ள சுவரெங்கும் பார்க்கின்றோம். எவ்வளவு முயன்றும் இந்தச் 'சுவற்றை'ப் பழுது பார்க்க முடிய வில்லை. வயிறு—வயிற்றில் என்பது போலச் சுவறு—சுவற்றில் என ஒப்புமை யாக்கம் செய்யப்படுகிறது.

பெருவழக்காகிவிட்ட இதனைக் காணும்போது, சுவர் என்பதில் இறுதி எழுத்தாக வல்லின றுகரம் இட்டுச் சுவறு என்று எழுதுவதையும் சரி என்று வைத்துக் கொண்டால் என்ன என்று எண்ணத் தோன்றுகிறது. வரட்சி—வறட்சி, சுருசுருப்பு—சுறுசுறுப்பு ஆகிய சொற்களில் ர,ற இரண்டும் வருவதை ஏற்றுக் கொள்ளுகிறோம் அல்லவா?



பேச்சு நடையில் ஒன்றாகவும் எழுத்து நடையில் வேறு ஒன்றாகவும் உள்ள நிலை நீண்ட நாள் நிலைபெறாது. இது போன்ற போராட்டங்களில் பேச்சு வடிவமேவெற்றி பெற்றிருக் கிறது. கோவில் என்பது தான் இலக்கணப் படிச் சரியான வடிவம். அது கோயில் என்றானது பேச்சு மொழியின் வெற்றியே.

'ஆயிரத்தி தொளாயிரத்தி ஐம்பத்தியெட்டு' என்று படித்தவர்களும் ஒலிப்பதை அடிக்கடி கேட்கின்றோம். சில இதழ்களில் வரும் தொடர்கதைகளில், இருபத்தி நாலாம் அத்தியாயம் என்பது போலவே எழுதுகின்றார்கள். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தெட்டு என்றும், இருபத்து நாலாம் இயல் என்றும் எழுதுவதே முறை. இம்முறை பிறழ்வுக்குக் காரணம் உண்டு.பதினொன் றிலும், பதின்மூன்று முதல் தொடர்ந்து பதினெட்டு வரையிலும் வரும் எண்ணுப் பெயர்களின் இடையில், இன் சாரியையின் இகரம் ஒலிக்கின்றது. இருபத்தி ரண்டு, முப்பத்திரண்டு என்ற தொடர்களில் இரண்டில் உள்ள இகரம் இடையில் ஒலிக்கிறது. இதிற் பழகிய பழக் கமே எல்லா இடங்களிலும் இகரத்தைப் புகுத்தி விடுகின் றது. பேச்சிற் புகுந்த இப்பிறழ்வு எழுத்திலும் இடம் பெறுகிறது. ஆயிரத்தி, தொளா யிரத்தி போன்ற வழக்குகளில் அத்துச் சாரியையுடன் இகரச் சாரியையும் வந்ததாக இலக்கணம் வகுத்துக்கொண்டால் என்ன? என்று எண் ணத் தோன்றுகின்றது. மரத்தினை, மரத்தினுக்கு என்ற விடங்களில் ஒரே புணர்ச்சியில் 2, 3 சாரியைகள் வருவ தில்லையா?

'கால்கள் வாரா!' என்று சொல்ல வேண்டியதைக் கால்கள் வராது என்றும், 'கண்கள் உறங்கா' என்று சொல்ல வேண்டி யதைக் கண்கள் உறங்காது என்றும் ஒருமை பன்மை வழுவாய்க்கூறுவது திரைப்படப் பாடல்களிலும் உரை யாடல் களி லும்பெருவழக்காகிவிட்டது. கால்கள் வாரா, கண்கள் உறங்கா என்ற நடை பொதுமக்களிடம் எடுபடவில்லை. பத்துமாடு வந்தது என்று தான் அவர்கள் சொல்வார்களே தவிரப் பத்து மாடுகள் வந்தன என்று சொல்ல மாட்டார்கள். வாரா, செல்லா என்பன போன்ற எதிர் மறை வடிவங்கள் வரும் இடங்களிலாவது இந்த எண் மயக்கத்துக்கு இலக்கணம் சற்றே நெகிழ்ந்து இடங் கொடுக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

'இரண்டு கண்ணும் சிவந்தது' என்பது போன்ற பன்மை ஒருமை மயக்கத்துக்குத் தமிழ் இலக்கணத்தில் இடம் உண்டு.

## 4. கண்டிக்கத்தக்கன சில :

ஒரு மாணவன் எழுதுகின்றான் 'அரசினர் தான் சிறந்த தமிழ்ப் புலவர்களை அரிந்து கொல்ல வேண்டும்' என்று. எண்ணம் உயர்ந்தது தான். அது எப்படி எழுதுப்படுகிறது பாருங்கள்.

"இந்த மழையிலே எங்க வீட்டுக்குல்ல வெல்லம் வந்து விட்டது" என்றார் ஒரு நண்பர்! இப்படிப் பேசும் போது செய்யும் ஒலிப்பிழை தான் எழுத்திலும் புகுந்து விடுகிறது.

இந்த ஒலிக் கொலை சிறப்பாக நகர்ப்புறங்களுக்கே உரியதாய் உள்ளது. நாட்டுப் புறங்களில் யாரும் கடைக்குப் போய் 'ஒரு கிலோ புலி கொடு' என்று கேட்கமாட்டார்கள். பள்ளிகளில் தொடக்க வகுப்புகளி லேயே திருத்திட வேண்டிய ஒலிப்பிழை இது.ஐந்தில் வளையாததுஐம்பதில்வளையுமா? தமிழில் ல—ள வேறுபாடு, பொருள் வேறுபாட்டு உணர்வுக்கு எத்துணை இன்றியமையாதது என்பது நாம் அறியாததன்று. அயலார் வழங்கும் முறை

தமிழ் ஒலியிற் பழகாத அயலார், தரங்கம்பாடியை Trunkbar என்றனர்; திருநெல்வேலியை Tinnavelli என்றார்கள்; தஞ்சாவூரை Tanjore என்றார்கள். நாம் ஒரு காலத்தில் ஆங்கி லேயருக்கும் பிரெஞ்சுக்காரர்க்கும் அடிமைகளாய் இருந்தோம் என்பதை இன்றும் பறை சாற்றிக் கொண்டிருக்கும் அடிமை அடையாளங்கள் அவை. இந்த மானக்கேட்டை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. என்றாலும், இன்னும் அழகுத் தமிழ்ப் பெயர் களை விடுத்து அயலான் உளறிய உளறல்களைச் சொல் வதில் தான் நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருக் கின் றோம்! என்று தொலையும் இந்த அடிமைத் தனத்தில் காதல்?

பாண்டிச்சேரி என்பதில் 'சேரி' என்ற மட்டமான சொல் ஒலிக்கிறதாம். அதனால் அதையும் வெட்டி விட்டுப் 'பாண்டி' என்று மட்டுமே சொல்லிப் பெருமைப் படுவோர் பலராயிருக்



கின்றோம். தமிழ்ப் பாடல்களிற் கூட இன்று 'பாண்டி' இடம் பெற்று வருகிறது. 'முத்தமிழ் சேர் பாண்டி' என்றும், 'பாண்டித் திருநகரம்' என்றும் பாவலர் பலர் பாடுகின்றனர்! பிரஞ்சுக்கார ரால் Poudichery என்று எழுதப்பட்ட பெயர் Pondichery என்று பிரஞ்சுக்காரராலேயே தவறாகப் படிக்கப்பட்டது.அத னைப் பாண்டிச்சேரி என்று ஒலித்தனர் ஆங்கிலேயர். பின்னர்ப் பாண்டி என்று ஆனது. அன்னைத் தமிழை மறந்து அயலான் வைத்த பெயரைச் சுமந்து சொல்லிப் பெரு மைப் படுகிறோம். இதில் யாருக்கும் வெட்கமில்லை.

### ஆங்கிலக் கலப்பு

எழுத்தாளர் சிலர் தம் கதைகளில் உரையாடல் களைச் சிலவிடங்களில் முழுமையாக ஆங்கிலத்திலேயே அமைத் துத் தமிழ் எழுத்தால் அதனை எழுதும் அவல நிலையை என் னென்பது?

"ஐ டிட் சோ மச் ... சோ மச்... ஐ நோ தெட் ஆல் அஸ் மேட் மீ கம் ஹியர்... ஓ யூ *மஸ்ட்* அண்டர்*ஸ்ட*ாண்ட் ஐ ஆம் நாட் *த* ரைட் பெர்சன் ஃபார் ஆல் *தீஸ்*"

இது தமிழ் எழுத்தாளர் ஒருவர், தமிழ் இதழில் தமிழர்க்காக எழுதிய தமிழ்ச் சிறு கதையில் தமிழ் எழுத்தால் எழுதப்பட்ட ஒரு பகுதி! இன்னும் சில எழுத்தாளர்கள் ஆங்கில எழுத்தாலேயே சில தொடர்களை எழுதுகிறார்கள். அவர்களை நோக்கத் தம் தாய்த் தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்தும் மேற்கண்ட எழுத்தாளர்கள் பாராட்டுக்குரியவர்கள் தாம்!

### 'இளைஞர் தமிழ்'

ஆங்கிலம் அறிந்த இளைஞர் சிலர், வேடிக்கை யாக உருவாக்கிப் புழக்கத்தில் விட்ட கலவைச் சொற்களுக்குக் காட்டாக 'அன்சகிக்கபிள்', குளறுபடிக்கேஷன்' என்ற சொற்களைக் காட்டலாம்.

"நேற்று அந்த பிச்சருக்குப் போனேன்டா, ஐயோ அன்சகிக்கபிள்! கதை ஒரே குளறுபடிக்கேஷன்". இப்படித் தமிழுடன் ஆங்கிலத்தையும் குழப்பும் இந்தக் குழறுபடிகளைத் தமிழ்க் காதுகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

## புதுப்பாடல் — உரைநடை

இனிப் பாட்டுலகிற்குள் சற்று நுழைந்து பார்ப்போம். இந்தக் காலத்துப் பாவலர்கள் பிறக்கும் போதே இலக் கணத்தை உதைத்துத் தள்ளிக்கொண்டு பிறக்கின் றார்கள்! மொழி மரபினைக் கற்றுத் தேர்ந்த புலவன் பாட்டு வடிவத்தில் காலத்துக் கேற்ற, பொருளுக்கேற்ற மாறுதலைச் செய்வதைப் — புதியன புகுதலை என்றுமே தமிழிலக்கணம் தடை செய்ததில்லை. புதுமைகளை மதித்துப் போற்றியும் வந்திருக்கிறது. சோம்ப லாலோ, தொன்னூற்கு அஞ்சித் தடுமாறும் உளநிலையாலோ இலக்கணத்தைக் கற்க மறுக்கும் இன்றைய பாவலர் நல்ல கருத்துக்களை, உணர்வு பொங்க வெளியிடும் செறிவான உரைநடையில் அவை அமைந்துள்ளன. அதற்காக அவர்க ளைப் பாராட்டலாம். ஆனால், அவர் கள் பழம்பாடல் மரபுகளை — இலக்கணத்தை — அவற் றைக் கற்ற புலவர்களைக் கடுமையாக இகழ்ந்து பேசு கின்றார்கள்; எழுதுகின்றார்கள். இது "ஆடத் தெரியாத தேவடியாள் கூடம்கோணல்" என்பது போல் இருக்கிறது.

## யாப்பு மட்டும் கசப்பானேன்?

இலக்கணத்தைச் சிறையாகக் கருதி, அதினின்று விட்டு விடுதலையாகிப் பறக்க விழையும் 'விடுதலை உணர்வு' இந்தப் புதுப்பாவலர்கள்பால் மேலோங்கி நிற்கிறது. இலக்கணச் சிறையாக இவர்கள் எண்ணுவது யாப்பிலக்கணம் ஒன்றை மட்டுமே. இளமை முதல் பழகிவிட்ட காரணத்தால், தம்மையு மறியாமல் இவர்கள், எழுத்துச் சொல் இலக்கணங்களுக்குக் கட்டுப்பட்டே எழுதுகின்றார்கள்.

*'நள்ளிரவிலே பெற்றோம்; இன்னும் விடியவேயில்லை'*

என்பது ஒரு புதுப்பாடல் எனப்படுகிறது. இதில் யாப்பு வடிவம்— யாப்பிலக்கண அமைப்பு — இல்லையே தவிரப் பிற இலக்கணங் கள் பிறழாமல் அமைந்துள்ளன. எழுத்தும் சொல்லும் இனிப் பானேன்?

'நளிரவு' என்றோ 'பெர்ரோம்' என்றோ எழுதியிருந் தால் எழுத்திலக்கணம் புறக்கணிக்கப்பட்டது என்று கருதலாம்.



எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் பேச்சுத் தமிழிலேயே பழகிப் போனவை. அதனால் அதில் தவறு ஏற்படுவது இல்லை. யாப்பிலக்கணமும் அப்படிப் பழக்கப் பட்டுப் போனால் அது ஒரு சுமையாக — கட்டுப் பாடாகத் தோன்றாது; தவறும் ஏற்படாது.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ்ச் செவிகள் தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றை இவர்களிற் சிலர் வேண்டுமென்றே செப்பமாகச் செய்து வருகின்றார்கள். கூடியவரையில் மிகுதியாக ஆங்கிலச் சொற்களையும், சமற்கிருதச் சொற்களையும் இடையிடையே மிடைந்து மணிமிடை பவளம் போல் எழுதுவது தான் அது. இதை யே இப்பாடல்களின் 'இலக்கணமாக' இவர்கள் கொள்று கின்றார்கள் போலும்! 'ரத்த புஷ்பங்கள்' என்பது ஒரு பாடலின் தலைப்பு. 'போடா fool' இது ஒரு பாடலின் தலைப்பு! தலைப்பே இப்படி என்றால் உள்ளீட்டைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. மரபை மதித்தெழுதும் பாவலர்களும் இலக்கணம் வழுவாது எழுதுகின்றார்கள் என்பதில்லை. ஒரு பாவலர், 'நின்றது' என்ற பொருளில் 'நின்றிற்று' என்று எழுதுகின்றார்; 'போட்டது' என்ற பொருளில் 'போட்டிற்று' என்று எழுதுகின்றார். இந்த அழகில் இவர் ஒரு பாவலர்! முழுவதும் பாடல்களைக் கொண்டு வெளிவரும் ஓர் இதழின் ஆசிரியர்! இதழ் வலிமை படைத்த இவர்களின் இத்தகைய ஆட்சி பல்கி னால் மரபு பிறழ்வுகளும் பல்கும். '**தமிழ் இலக்கண முடை யார், தான் தோன்றித் தனமான வரம்பழிவுகளைத் தடுத்தல் வேண்டும்**' என்று பரிதிமாற்கலைஞர் கூறியதை அறிஞர் மனங்கொள்ளல் வேண்டும்.

# நடைமுறைத் தமிழும் இலக்கணமும் - சில சிக்கல்கள்

ஒரு நாள் நண்பரொருவரைப் பார்க்கச் சென்றேன். அவர் என்னைக் கண்டதும்,

**"நல்த்தா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தால்ப்போல்க்
கல்த்தாரைக் கல்த்தாரே காமுறுவர்"**

என்று உரக்கப் பாடினார். "என்ன கூத்து இது! நீர் எப்போது கல்த்தாராக மாறினீர்?" என்றேன்.

"இது தான் புதிய இலக்கணம். நல் தாமரை என்பதை நற்றாமரை என்று புணர்த்து எழுதுவது, உம் பழைய இலக்கணம். நற்றாமரை என்பதில் எழுத்துக்கள் திரிந்து விடுவதால், சொல்க்கள் உருமாறி விடுகின்றன; பொருள் புரியவில்லை. அதனால்ச் சொல்க்களைச் சிதைக்காமல் நல்த் தாமரை என்று புணர்த்து எழுத வேண்டும் – என்று புதிய இலக்கணம் கூறுகின்றது. கற்றார் என்பதில் 'கல்' தானே பகுதி? இந்த இலக்கணப் படி, அதை நான் கல்த்தார்–என்று புணர்த்துக் கொண்டேன். உம் பழைய இலக்கணத்தை எத்தனைஎத்தனை நாளைக்குக் கட்டிக்கொண்டு அழுவது? புதுமை வேண்டாமா?" என்றார் நண்பர்.

கற்றரை என்பது 'கல்+தரை' என்பனவற்றின் புணர்ந்த வடிவம் என்று பல பேருக்குத் தெரியாது. அதனால் இத்தகைய புணர்ச்சிகளைத் தெளிவு கருதி, 'கல்த்தரை' என்று எழுதலாம் என்பது ஓர் இலக்கணக் கொள்கை. கல்த்தரை என்று



எழுதினாலே போதும் என்னாமல், வேற்றுமைப் பொருளுக் கேற்றபடி இடையில் தகரம் மிகுத்து விகாரமாக எழுதிய வரையில் மகிழ்ச்சிதான்.

இதில் இக்கொள்கையாருக்கு இருக்கும் இலக்கணப் பிடிப்பும் தெளிவாகிறது. என்றாலும், தமிழில் லகரத்தின் பக்கத்தில் தகரம் நிற்பதில்லை. அப்படி நிற்க நேர்ந்தால், தமிழ் ஒலி முறைக்கு ஏற்றபடி அந்த எழுத்துக்கள் திரியும். அப்படித் திரிந்தால், சொல்வடிவம் திரிந்து விடுகிறது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான்.

அதற்காக, இனிமைக்கும் எளிமைக்கும் பெயர் பெற்ற தமிழ் ஒலிமரபினை, எப்படி அழித்துக் கொள்ள முடியும்? லகரம் ஒலித்தவுடனே தகர வரிசை எழுத்துக் களை ஒலித்தல் எளிய செயலன்று. நாவின் ஓரத்தால் மேல்வாய்ப் பல் அடியைத் தொட்டால், லகரம் பிறக்கும். உடனே நாவின் நுனிப் பகுதி யை மேல் வாய்ப்பல் அடியில் படியச் செய்து தகரத் தை ஒலித்தல் எவ்வளவு துன்பம்! இத்தகைய இடர்ப் பாடுகள் தமிழ் ஒலி முறையில் எங்கும் காண முடியாத வை. அதனால் தான் படியாதவரும், 'கல்லு தூணு', 'பல்லு தேய்' என்று இடையில் ஓர் உகரத்தைச் சேர்த்து எளிதாக ஒலிப்பதைப் பார்க்கின்றோம்.

## பாவேந்தர் சாட்டை

கல்தா, ஜல்தி, Soldat (பிரெஞ்சு) போன்ற சொற்களில் இத்தகைய ஒலிகள் வருகின்றன. காரணம் அவை தமிழல்ல, தமிழ்க்கே உரிய இந்த ஒலிச் சிறப்பை உணராமல், மரபை மீறுகின்ற செயலைப் பாவேந்தர்,

**"வாட்டடங்கன் கற்றரையை வாள்த்தடங்கண்
கல்த்தரைஎன் றெழுதி, முன்னைப்
பாட்டினிலே பெரும்பிழையைப் பல்குவிப்பா
னுக்கு, மணிப் பண்டி தர்கள்,
சாட்டைகொடுத் தறிக்கைவிடத் தாள்ஒன்றும்
அற்றதுவோ?, தமக்குச் சோறு
போட்டிடுவார் ஒப்புகிலார் எனுங்கருத்தோ?
மானமற்ற போக்குத் தானோ?"**

என்று சாடினார். இப்படிக் 'கற்றூணைக்' '**கல்த்தூண்**' என்று புணர்த்தவர் 'பொற்றூணை'ப் '**பொன்த்தூண்**' என்று புணர்த்திருக்க வேண்டும். அப்படிச் செய்ததாகத் தெரிய வில்லை. "கற்றூன், புற்றரை" என்றால் விளங்கவில்லையே எனின், விளங்கிக் கொள்ளச் சிறிது முயற்சி செய்ய வேண்டியது தான்.

கல் + தூண் = கற்றூண், புல் + தரை = புற்றரை என்றெல்லாம் ஐந்தில் சொல்லிச் சொல்லிப் படித்திருந்தால் ஐம்பதில் விளங்காமலா போகும்? இந்தக் கல்லாப் பிழைக்கு, இலக்கணம் என்ன செய்யும்?

## பாடநூல் கேடுகள்

இத்தகைய புணர்மொழிகளைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு நம்மவர்பால் இலக்கண உணர்வில்லை. இதற்கு நமது இலக்கணக் கல்விமுறையும் ஒரு காரணம்.ஒன்பதாம் வகுப்பு மாணவர்களின் தமிழ்ப்பாடநூலை விடப் பெரிதாக உள்ளது – அவர்களின் இலக்கணநூல்.

"என்னைப்பார்" என்ற இடத்தில் கூட ஒற்று மிகுத்து எழுதப் பயிற்சி பெறாத இளைஞர்களின் மூளையில், "வேள் + யாவன் = வேளியாவன், மண் + யாது = மண்ணியாது" என்பன போன்ற இன்றைக்குத் தேவையில்லாத புணர்ச்சிக்கு உரிய விதிகள் எல்லாம் திணிக்கப்படுகின்றன. விட்ட ஆகுபெயர், விடாத ஆகுபெயர்கள் எல்லாம், அவர்களை விட்டபாடில்லை! இருமடியாகு பெயர், மும்மடியாகு பெயர்கள், இவர்க ளைப் பல மடியாக மடித்து ஒடித்துக் கொண்டிருக் கின்றன!

## தேவையற்ற திணிப்புகள்

**எனக்குக் கொடு!** என்ற இடத்தில் கூட ஒற்று மிகுத்து எழுதும் பயிற்சி பெறாத இளைஞர் தலையில்,

"மண் + யாத்த = மண்ஞாத்த,
பொன் + யாத்த = பொன் ஞாத்த"

என்பன போன்ற மட்கிப்போன புணர்ச்சி விதிக் குப்பைகளை எல்லாம் கூடை கூடையாகக் கொட்டிக் கொண்டிருக்கிறோம்!

பள்ளிச் சிறுவர்களுக்குச் சார்பெழுத்துகள் எப்படி 369 ஆகின்றன? என்ற கணக்கு இன்றியமையாததா?



தமிழகத்தில் வழக்கொழிந்து போன உகரச் சுட்டும், "உது, உவ்வீடு" முதலிய சொற்களின் இலக்கணங்களும் அவர்களுக்கு ஏன்?

உரிஞுக் கடிது, பொருநக் கடுமை, ஈமுக் கடிது" அஃகடிய, தெம்முனை, சூர்க்கோட்பட்டான், கஃறீது, முஃடீது" முதலியவற்றின் புணர்ச்சி விதிகள் இன்றைய மாணவர்க்குத் தேவையா? "காவலோன, புலவரான, செய்யுந்து, கடுக்கலந்தகைபிழி எண்ணெய் பெற்றமையான் மயிர் நல்ல" என்பன போன்ற முடிவுகட்கு உரிய இலக்கணங்கள் இன்றைய இளஞ்சிறார்க்கு இன்றியமையாதனவா?

ஆங்கிலத்தில் உள்ளது போலவே, நேர்க்கூற்று அயற்கூற்று, தனி, கூட்டு, கலப்பு வாக்கியங்கள் ஆகியவை பற்றிய இலக்கணங்கள், தமிழ் இலக்கண நூலில் இடம் பெறுவதைப் பார்க்கிறோம். ஆங்கில மொழியமைப்பில், நேர்க் கூற்று அயற்கூற்றுக்களில் ஒன்றை மற்றொன்றாக மாற்றுவதில் சிக்கல்கள் பலவுண்டு. அம்மொழிக்கு அதிற் பயிற்சி தேவையே. தமிழில் அப்படி இல்லை. He said, 'I will come' என்பதைப் போல, அவன் சொன்னான், "நான் வருவேன்" என்று தமிழில் வாக்கியம் அமைவதில்லை. 'வருவேன் என்றான்' என்று தான் அமையும். இதனை 'வருவதாகச் சொன்னான்' என மாற்றுவதும் எளிது; மாற்றாவிடினும் கேடொன்றும் இல்லை.

கூட்டுக் கலப்பு வாக்கியங்களின் மாற்றமும் தமிழுக்குத் தேவையில்லாத ஒன்று தான். பல்லாண்டு கள் தமிழ்த்துறையில் உழைத்து வரும் பெரும் புலவர்க்கும் கலப்பு வாக்கியங்களைக் கூட்டு வாக்கியங்க ளாக்கும் செப்பிடு வித்தை அற்றுப்படியாவ தில்லை. இவை தமிழ்க்குப் புறம்பான இலக்கணப் பாகு பாடுகள்.

## பாடமும் பயிற்சியும்

இத்தகைய வேண்டாதவற்றைத் திணிப்பது தான் இலக்கணத்தைக் கசப்பாக்குகிறது.தமிழ் இலக்கணம் இனியது; இலக்கியச்சுவையும் அதில் காணலாம். அத்தகைய இனிப்பைக் கசப்பாக்கி விட் டோம். அது கசப்பானது என்றே வைத்துக் கொண்டா லும், கசப்பு மருந்துகளை இனிப்பில் குழைத்துக் கொடுப் பது போலக் கவர்ச்சியாகக் கற்பிக்க வேண்டியது தானே?

எனவே, நமது இலக்கணப் பாடத்திட்டம், பயனுள்ள வகையில் மாற்றியமைக்கப்படல் வேண்டும். கற்பிக்கும் முறையும் கவர்ச்சியாய் அமைய வேண்டும்.

## திரையுலகம் திருந்தாதோ?

காளிகோயில் என்பதைக் காளிக்கோயில் என்று மிகுத்து எழுதுவது பிழை. திரைப்படத் துறையில் உள்ள நண்பர் ஒருவரை இது பற்றிக் கேட்டேன்:

"படத்தின் பெயர்களில், 'பொண்ணு ஊருக்கு புதுசு', 'ஒரு மரத்து பறவைகள்' என்று, ஒற்று மிகுவது பற்றிய உணர்ச்சியே இல்லாமல் தலைப்பிடும் திரைத் துறையினர், காளிகோயில் என்ற தொடரில் மட்டும் எப்படி அவ்வளவு பொறுப்பாக ஒற்று மிகுத்துப் போட்டனர்?" என்று.

"அதுவா? அந்தத் தலைப்பில் உள்ள, எழுத்து எண்ணிக்கை தான் காரணம். என் சோதிடப்படி, ஓர் எழுத்துக் குறைந்திருக்கும், போட்டுக் கொண்டார்கள்." என்றார்! இந்த அழகில், இவர்கள் உருவாக்குகின்ற பிழையான தொடர்கள் தான், சுவரெங்கும் கொட்டை கொட்டையாகக் காட்சியளிக் கின்றன; அவற்றை அடிக்கடி காணும் இளைஞர் நெஞ்சில் அவை அழுந்தப் பதிகின்றன. அந்தோ திரைத்துறையே! உன் தமிழைத் தணிக்கை செய்ய ஒரு வழியில்லையா?

## வாராது போகுமா?

இந்த ஒற்றுகள் எங்கே மிகும், எங்கே மிகா என்ற தெளிவு, இலக்கணம் கற்றுத்தேறிய மிகச் சிலர்க்குத் தானே இருக்க முடியும்? இவை பற்றிய விதிகளையும் எளிதில் நிறுத்திக் கொள்ள முடியவில்லையே" என்று பலர் கேட்பது தெரிகிறது. வீரமா முனிவர் கூடத் தொடக்கத்தில் இப்படித் தான் கேட்டார். பின்னர்த் தமிழ் மொழிக்கே இலக்கணம் படைக்கும் அளவுக்குத் தெளிவு பெற்றார். உழைப்பும் முயற்சியும் இருந்தால் எது தான் கைவராது?

ஆங்கிலத்தில், எழுதுவது ஒன்றும் ஒலிப்பது ஒன்றுமாக இருப்பதில் எவ்வளவோ குழப்பங்கள் உள்ளன. இருந்தாலும், அவற்றையெல்லாம் நாம் வருந்திக்கற்று, ஆங்கிலேயரும்



வியக்கும் அளவுக்குத் தெளிவு பெறவில்லையா? இத்தகைய முயற்சியும் பொறுமையும், நமக்குத் தாய்மொழி இலக்கணத் தைக் கற்பதில் இல்லை. இதனை மு. வரதரா சனார் 'அயலார் மெச்சிக் கொள்ள 6 கல் தொலைவு ஓடும் மகன், பெற்ற தாய்க்காக அரைக்கல் தொலைவு நடக்கவும் மறுப்பது போன்ற மனப்பான்மை' என்கிறார்.

ஒரு நண்பர் கேட்டார் : 'பழசாறு என்றால் பொருள் புரியாமலா போய்விடுகிறது'? 'பழச்சாறு என்று மிகுத்து எழுதத் தான் வேண்டுமா?' என்று. சில தொடர்கள் மிகுத்தெழுதினால் ஒரு பொருளும், இயல்பாக எழுதி னால் வேறு பொருளும் தரும். பொய்ச்சொல் என்பதைப் 'பொய் சொல்' என்று இயல்பாக எழுதினால், பொய் யைச் சொல்லு என்று ஆகிவிடும். 'பாடிப்பார்' என்பதைப் பாடி பார் என்றால், பாடியைப் பார் என்றாகும். வாய்க்கால் என்பதை 'வாய்கால்' என்றால், வாயும் காலும் என்று பொருள் மாறும். ஒரு பாடலில் உள்ள 'மா வாக்கியப் பொரு ளை' என்ற தொடரை 'மாவாக்கிய பொருளை' என்று அச்சிட் டிருந்தார்கள்! அதனால், 'பெருமை பொருந்திய வாக்கியத்தின் பொருளை' என்று பொருள்பட வேண்டிய அத்தொடர், 'மாவு ஆக்கி பொருளை' என்று மாறிவிட்டது! கத்திக் கொண்டு வந்தான் என்பதைக்,' கத்தி கொண்டு வந்தான்' என்றால் என்ன ஆகும்?

ஆனால் பழசாறு என்றாலும் பழச்சாறு என்றாலும் பொருள் மாறாது என்பது உண்மை தான். இத்தகைய தொடர்களில் ஒற்றுமிகுவது ஒலியின்பம் கருதியே. வாழைப் பழத்தை, வாழைபழம் என்பதையும், கீரைத் தண்டைக் கீரைதண்டு என்பதையும் தமிழ்க் காது தாங்கிக் கொள்ளுமா?

மேலும், பழசாறு என்பதில் புணர்ச்சியிலக்கணம் முழுமையாகப் புறக்கணிக்கப்படவும் இல்லை. பழம் என்பதன் இறுதி மகரம் முறைப்படிக் கெட்டுத்தான் வந்துள்ளது; இதில் ஒரு சகரம் மிகுவதை மட்டும் ஏன் வேண்டாததாகக் கருத வேண்டும்? இதை யாரும் பழம்சாறு என்பதில்லை; பழஞ்சாறு என்பதுமில்லை.

**'கயிறை எடு' என்றால் என்ன கெட்டுப்போகும்? கயிற்றை எடு என்று தான் எழுத வேண்டுமா?**

இது ஒருவர் வினா. 'கயிறு எடு' எனலாம்; 'கயிறை எடு' எனலாமோ? படியாதவர்களும், கவுத்தை எடு, வவுத்தைப் பசிக்குது என்பார்களே யன்றிக் கவுற எடு, வவுற பசிக்குது என்ன மாட்டார்கள். தாய்மொழியில்

தோய்வுஇல்லாமையும்பிறமொழிக் கலப்பும் மிகுந்த நகரப் புறத்து மக்களே, இத்தகைய பிழைகளைச் செய்கின்றனர். ஒருமுறை, 'என் மகன் கெணறுல உழுந்துட்டான்' என்று ஒரு 'முசியே'[ஐயா என்று பொருள்படும் பிரஞ்சுச்சொல்] கூறியது இங்கு நினைவுக்கு வருகிறது! முதுகு–முதுகை என்று ஆவது போல், வயிறு–வயிறை என்று ஆனால் என்ன குறைந்து போகும்? தமிழின் இனிமை தான் குறைந்து போகும்! இவை இரண்டுமே உயிர்த்தொடர்க் குற்றுகரங்கள்தாம். ஆயினும் வயிறு–வயிற்றை என ஒற்று இரட்டும்; முதுகு – முதுகை என்று தான் வரும்; முதுக்கை என இரட்டாது. இது ஏன் என்று கேட்டால், அது அப்படித் தான்; அது தான் மொழியின் இயல்பு என்று தான் விடை சொல்ல முடியும்.

சில இடங்களில் இப்படி இரட்டாவிட்டால், பொருளே மாறிவிடும். ஆறில் என்றால் ஆறு என்ற எண்ணில் என்றும், ஆற்றில் என்றால் நீரோடும் யாற்றில் என்றும் பொருள்படும். ஆறில் ஒரு பங்கு என்றும், ஆற்றிலே கொட்டினாலும் அளந்து கொட்டு என்றும் வரும் வழக்குகளைப் பாருங்கள்.

ஆடுகால் என்றால், ஆடுகின்ற கால் என்றும், ஆட்டுக்கால் என்றால் ஆட்டின் கால் என்றும் பொருள் படும். நூறுகணக்கு என்றால் கணக்குகள் நூறு என்று பொருள்படும். நூற்றுக்கணக்கு என்றால் பலநூறு எண்ணிக்கை என்று பொருளாகும்.

'நிழ்ச்சிக்கு முந்நாள் அமைச்சர் தலைமை தாங்கு வார்' என்று ஓர் அழைப்பிதழ் கூறியது! முந்நாள் என்ற சொல்லில் இருந்தவை தந் நகரங்கள்! 'மூன்று நாள் அமைச்சர்' என்பது அதன் பொருள்! எந்த னகரம் போட்டால் என்ன? என்ற புறக் கணிப்புமனப்பான்மையே இதற்குக்காரணம். தமிழில்தந்நகரம், இரு சுழினகரம், முச்சுழிணகரம் தந்நகரம், இரு சுழினகரம்,



முச்சுழிணகரம் ஆகியவை தனித்தனிப் பொருள் வேறு பாட்டுக்கு உதவுபவை என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். தன்னலம் இருசுழி னகர மாயின், ஒருவன் தன் நலம்; தந்நகரமாயின் பலர்தம் நலம்.

**கலயம் என்று ல போட்டு எழுதுவது சரியா? கலையம் என்று லை போடுவது சரியா?** என்று ஒருவர் கேட்டார். இரண்டும் சரி என்பது தான் விடை. இலக்கணம் இதனைப் போலி என்கிறது. ச ஞ ய என்னும் எழுத்துக்களுக்கு முன்னே வரும், அ, – ஐ ஆகலாம்; ஐ–அ ஆகலாம். இவற்றில் உண்மை எது போலி எது என்ற ஆராய்ச்சி தேவையில்லை. விற்கும் பண்டங்களில் தான் போலிகளைத் தள்ள வேண்டும். ஆனால் எழுத்துப் போலிகளைப் போற்றிக் கொள்ள வேண்டும்.

**'போலி எழுத்தைப் போற்றுதல் கடனே'** என்கிறார் இலக்கணக் கொத்து நூலார். இப்படி அ, ஐ இரண்டும் ஒத்து இசைப்பதற்கு, ஒலிக்கும் உறுப்புகளின் அமைப்பும் முயற்சியும் தாம் காரணம். மயல் என்பதை ம் அய் அல் எனப் பிரித்தால், மகரத்தில் உள்ள அகரமும் யகரத்தில் உள்ள யகரமெய்யும் சேர்ந்து அய் என ஒலிக்கின்றன. இந்த ஐயை மகரத்துடன் சேர்த்து மையல் என எழுதினாலும் ஒலி ஒன்று தான். ஆகையால் தான் மையல் –மயல் இரண்டும் சரியே என்கிறது இலக்கணம்.

ஈயல்–ஈசல், பையன்கள்–பசங்கள், இயை–இசை, யாமம்– சாமம், பிசை–பியை–பெய், முயல்--முசல் என்று ய–ச இரண்டும் தமக்குள் மாறி ஒலிப்பதுண்டு. இவ்வகையில் ச, ய இரண்டும் ஒரு தன்மையன. சகரத்துக்கு இனம் ஞகரம். எனவே ச ஞ ய இம்மூன்றையும் அடுத்து வரும் போது ஐ அ என்பன ஒத்து ஒலிக்கின்றன. இதனாலேயே கலயம்–கலையம், நிலயம்–நிலையம், வலயம்–வலையம், பயல்–பையல், இலஞ்சி–இலைஞ்சி, அரசு–அரைசு எனச் சில சொற்கள், இரு வகையாகவும் எழுதப்படுகின்றன. சில சொற்கள் தாம்; எல்லாம் அல்ல. இலக்கணம் உள்ளதே என்று, நயம் என்பதை நையம் என்றும் கஞ்சி என்பதைக் கைஞ்சி என்றும் கண்டபடி எழுதக்கூடாது.

**Shakespeare என்ற பெயரைத் தமிழில் எப்படி எழுதுவது?** இந்த ஒலி மாறாமல் இச்சொல்லை எழுதத் தமிழில் எழுத்து இல்லை. இல்லாமை, தமிழின் குறை அன்று; அதுவே அதன் சிறப்பு. ஷ, ஸ, ஹ முதலிய கடின ஒலிகளைத் தமிழ் படைத்துக் கொள்ளவில்லை. அது இனிய எளிய ஒலிகளைக் கொண்ட மொழி. ஹருதய என்பதைத் தமிழ் இலக்கணம் இருதயம் என்று தமிழ் ஒலியில் மாற்றியமைத்துக் கொள்ளச் சொல்கிறது. இதயம் என்று இன்னும் எளிதாக்குவதும் உண்டு. இதுகூட வேண்டாம். நமக்கு நெஞ்சம் இல்லாவிட் டால் தானே அயலாருடைய இதயம் தேவைப்படும்? Shakespeare ஐத் தமிழ்க்குக் கொண்டு வர வேண்டும் என்றால், ஷ், ஸ் ஆகிய எழுத்துக்களைத் தமிழ்க்குத் தக்கபடி மாற்றித் தான் ஆக வேண்டும். ஷே என்பதைச் 'சே' என்றாக்கலாம்; ஸ் என்பதற் குப் பதில் சு போடலாம்; ஆனால் க்சு என்ற ஒலிகள் தமிழில் அடுத்து வருவ தில்லை. எனவே, அவற்றையும் 'க்கு' என்று மாற்றிச், சேக்குப்பியர் என்றுதான் ஆள வேண்டும். பெயர் உருமாறி விட்டதே என்று சிலர் கேட்கலாம். தமிழ் என்ற சொல் ஆங்கிலத்தில் 'Tamil' [டேமில்] என்று உருமாறி விட்டதே, இதற்கு என்னசொல்லுகிறீர்கள்? என்று அவர்களைத் திருப்பிக் கேட்க வேண்டியது தான்.

எல்லா மொழிகளிலும் எல்லா ஒலிகளும் இருப்பதில்லை. இதற்காக, உலக மொழிகளில் உள்ள எல்லா ஒலிகளுக்கும், உரிய எழுத்துகளைக் கடன் வாங்கிக் கொண்டிருக்க முடியாது. அது ஒரு மொழியின் தன் மதிப்புக்கும் இழுக்கு. Coffee என்பதற்கு f என்ற எழுத்தைக் கடன் வாங்கியா போட்டுக் கொண்டோம்? காப்பி என அதைத் தமிழ் ஒலிக்குக் கொண்டு வந்து விட்டோம். இப்போது காப்பி நமக்கு நன்கு பழக்கமாகி விட்டது! இல்லையா?

மேல் நாட்டுப் பெண் ஒருத்தி, தமிழ் நாட்டில் வாழ நேர்ந்தால், அவள் தமிழச்சியைப் போல் புடவை உடுத்துக் கொண்டால் தான், தமிழரும் அவளை ஒரு வகையில் தம்மவளாக மதித்து ஏற்றுக்கொள்வார்கள். தன் நாட்டில் இருந்தது போலவே சட்டை போட்டுக் கொண்டு இங்கே வாழ முற்பட்டால், அவளைத் தமிழர் அயலாளராகத் தானே காண நேரும்? அது போலத்தான் இதுவும்.



**விநாயகம் என்பதில் தந் நகரம் போடுவது சரியா? இருசுழி னகரம் போடுவது சரியா?**

இது ஒருவர் வினா. விநாயகம் வடசொல். நாயக என்பதற்கு முன்–ஒட்டாக, வி அமைந்துள்ளது. நாயக என்பதற்குத் தந்நகரமே முதலில் வரும். ஆகையால் விநாயகம் என்பதிலும், அதையே இட்டு எழுதுவது தான் முறை. அநியாயம் போன்ற சொற்களும் இத்தகையன வே. வடமொழியில் இருசுழி னகரம் இல்லை. அது தமிழ்க் குச்சிறப்பெழுத்து. எனவே சிநேகம், அந்நியர் போன்றசொற்களை இருசுழி னகரம் இட்டு எழுத வேண்டும்.

ஸ்ரீ நிவாசன் என்பதைச் சீனிவாசன் என்று இருசுழி னகரம் இட்டு எழுதினாலும் எழுதலாம். ஆனால் சீனுவாசன் என்று எழுதுவது பிழை. இப்படி 'னி' யை 'னு' வாகத் திரிப்பதற்குக் காரணம், தம் பெயரில் சீனி என்ற ஒலி வருவதை அப்பெயருடையோர் விரும்பா மைதான்.

சீனிவாசன் என்றால் சீனியில் வாசம் செய்யும் எறும்பு, என்று பொருள்படுமாம்! முநிஸ்வாமி என்ப தை, முனிசுவாமி என்றோ, முனிசாமி என்றோ, இரு சுழி னகரமிட்டு எழுதலாம். ஆனால் இப்பெயருடையோர் பலர் முனுசாமி என்றே எழுதுகின்றனர். இதற்கும், அவர்கள் முனி என்ற பெயரை, அது பேய் பிசாசு வகை என்று தவறாகக் கருதி விரும்பா ததுதான் காரணம். உண்மையில் முனி என்பதற்குத் துறவி என்பது பொருள்.

"பேசுவது போலவே எழுதினால் என்ன? பேச்சுத் தமிழ்க்கும் இலக்கியத் தமிழ்க்கும் எவ்வளவோ இடை வெளி இருக்கிறதே. மேல் நாட்டரில், தமிழை நன்கு கற்றுப் புலமை பெற்று வருபவர்க்குக் கூட, நமது பேச்சுப் புரிவதில்லையே"என் பது சிலர் கருத்து. இப்படி நினைப் பதில் தவறேதுமில்லை. இது பற்றிய என் பட்டறிவு ஒன்றினைக் கூறுவது இங்கே பொருத்த மாகும்.

பிரான்சு நாட்டிலிருந்து வந்த பேராசிரியர் ஒருவர், என்னிடம் பேச்சுத் தமிழ் கற்றார். உணவு விடுதிகளுக் குச் செல்லும் போது, அங்குள்ளவர்களோடு என்னென்ன

பேசவேண்டியிருக்கும், அவர்கள் நம்மோடு என்னென்ன பேசக்கூடும் என்பனவற்றையெல்லாம் நன்றாகக் கற்பித்தேன். ஒருமுறை அவர் வெளியூர்க்குச் சென்ற போது, மகிழ்ச்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் ஓர் உணவு விடுதிக்குள் நுழைந் திருக்கிறார்.

அங்கே அவர் என்ன கேட்டாரோ அதற்கு அவர்கள் என்ன சொன்னார்களோ தெரியவில்லை. பெரிய ஏமாற்றம்! மிகவும் சினத்தோடு என்னிடம் வந்தார். "என்ன, அவர்கள் பேசுவது எனக்குப் புரியவில்லை; நான் பேசுவதையும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை, சிரிக்கிறார்கள்!'என்றார். "என்ன செய்வது; பேச்சுத்தமிழ் எழுத்துத் தமிழ்போல் எங்கும் ஒன்றாக இல்லையே! மாவட்டத்துக்கு மாவட்டம் ஊருக்கு ஊர், ஏன் ஆளுக்கு ஆள் கூட, அது வேறுபடுகிறதே" என்றேன்.

"இருக்கிறது என்ற சொல்லை இருக்குது, இருக்கு, இர்க்கு, ருக்குது, ருக்கு, இக்கிது, கீது, கீத்து, கிது என்று இடந்தோறும் பலவகையாகப் பேசுகிறார்கள். இதில் உங்களுக் குச் சொல்லிக் கொடுத்தது ஓரிரு வடிவத்தைத்தான். இதுபோலத் தான் ஒவ்வொரு சொல்லும்; பழகித் தெரிந்து கொள்ள வேண்டியதுதான்" என்றேன். இலக்கியத் தமிழைவிடப், பேச்சுத் தமிழ் கற்பிப்பதும் கற்பதும் எத்துணை அரிய செயல் என்பதை இதனால் அறியலாம்.

வாழைப்பழம் என்று, எழுதிப் படிக்கக் கற்பித்தல் எளியது; பேசும் முறை கற்பித்தல் அரியது. வாழைப் பழத்தில் மட்டும் எனக்குத் தெரிந்த வரையில், வாளப் பளம், வாளபளம், வாழப்பழம், வாழபழம், வாயபயம் என்று ஐந்து வகைகள் இருக்கின்றன! ஏழு சுரங்களே திரும்பத் திரும்ப வருவதனால் இன்பம் தருவதுதானே இசை? தமிழ் மொழியை எங்கெல்லாம் ஒலியழகுடன் கையாளு கின்றார்களோ, அங்கெல்லாம் தம்மையு மறியாமல் எதுகை மோனைகள் அமைந்து விடுகின்றன. எதுகை மோனைகள் பாவலர்க்கே உரியவை அல்ல. படித்தவர் களைவிடப் படியாதமக்களே அவற்றின் இன்றியமையா மையைநன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அவர்களி டை யே உருவாகும்



பழமொழிகள் நாட்டுப் பாடல்கள் முதலிய வற்றில் எதுகை மோனைகள் எப்படிக் கொஞ்சு கின்றன! எதுகை மோனை என்பதைக் கூட அவர்கள் எதுகை யுடன் எகனை மொகனை என்று சொல்வார்களே! சொல் சிதைந்தாலும் கவலையில்லை; எதுகை அழகு வேண்டும் என்ற மனப்பான்மையல்லவா இதில் வெளிப்படுகின்றது!

**'தலையைத் தின்பவன் தரணி யாள்வான்'** தலை, தரணி – மோனை. **'பொரிமாவை மெச்சினாளாம் பொக்கை வாய்ச்சி'** பொரி, பொக்கை மோனை. **'ஓய்யாரக் கொண் டையாம் தாழம்பூவாம் உள்ளே இருக்குதாம் ஈரும் பேனும்'** ஓய்யார, உள்ளே – மோனை. **'குத்துவிளக்கே சாய்ந்தாடு, கோயில் புறாவே சாய்ந்தாடு'** குத்து, கோயில் -- மோனை. **வெய்யில் ஓரைக்குதே மாமாவே வேர்வை தட்டுதே மாமாவே** வெய்யில்–வேர்வை, கானல்–காசு – மோனைகள். **'அவிட்டத்திலே பெண் பிறந்தால் தவிட்டுப் பானை யெல்லாம் தங்கம்'.** அவிட்டம், தவிட்டு – எதுகை. **'பெட்டைக் குதிரைக்கு ரட்டைக் கொம்பு'.** பெட்டை, ரட்டை – எதுகை. **'நடைன்னு நடப்பனா வடைன்னு சுடுவனா; வந்த விருந்தாடிக்கு இந்தான்னு குடுப்ப னா'.** நடை– வடை, வந்த – இந்தா –எதுகைகள். **'ஆற்றிலே ஒரு கால்–சேற்றிலே ஒரு கால்'.** ஆற்றிலே – சேற்றிலே – எதுகை.


இவற்றை உருவாக்கியவர்கள் எழுத்து மணமே இல்லாதவர்கள் என்பது, இவற்றில் உள்ள கொச்சைச் சொற்களாலேயே தெரியும். இவர்களுக்கு இருக்கும் செவி யுணர்வு அதாவது எதுகை மோனைகளில், தம்மையறியாது ஈடுபடும் அழகுணர்வுகூடப் படித்தவர் களுக்கு, அதிலும் பாவலர்களுக்கு இல்லையே! இதை எங்கே போய்ச் சொல்வது?

நமது தமிழ் இலக்கண நுட்பங்களையும், அவற்றைக் கண்ட நம் முன்னோர் தம் அறிவாற்றல்களையும், உலகமே புகழ்ந்து கொண்டிருக்கும் போது, நாம் இங்கே இலக்கணத்தை எள்ளி நகையாடிக்கொண்டிருக் கிறோம்.

"தமிழ் மக்களைப் போல இலக்கணத்தினை அன்பும் ஆர்வமும் கொண்டு, திட்ப நுட்பம் செறிய மிகவும் நுணுகிக் கற்றுணர்ந்து இன்புற்றவர்கள் உலகிலேயே வேறு பிறர்

இல்லை எனலாம். மொழியின் இலக்கண அமைப்புகளை நுணுகி நுணுகி, மிகவும் ஆராய்ந்து பயின்று வந்ததனால் தமிழர்களின் அறிவு, மிகக் கூர்மை யடைந்து வளர்ந்ததுடன் அவர்களுடைய மொழியும் திருத்த முற்றுச் செம்மை எய்தித் திகழ்வதாயிற்று.”

இது நமக்குள்ளே நாமே மறைவாகச் சொல்லிக் கொள்ளும் பழங்கதை யன்று; பல மொழியிலக்கணங் களை ஓதி உணர்ந்து, ஒப்பிட்டு ஆராய்ந்ததன் விளை வாக, மொழியியற் பேரறிஞர் கால்டுவெல் அவர்கள் கண்டறிந்து கூறிய கருத்தாகும்.





# நடைமுறைத்தமிழும் இலக்கணமும் - சில வினா விடைகள்

நடைமுறைத் தமிழும் இலக்கணமும் என்ற கட்டுரை குறித்து எழுப்பப்பட்ட சில வினாக்களுக்கு இங்கே விடைகள் தரப்படுகின்றன :

**1. தமிழ்நாடு அரசு என்ற தொடர் பிழையானது. தமிழ்நாட்டரசு என்பது தான் சரி என்கிறார் என் நண்பர். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

தமிழ் நாட்டரசு என்பது தான் சரி. தமிழ்நாடு அரசு என்றால் தமிழை நாடும் அரசு என்றும், தமிழ்நாடும் அரசும் என்றும் பொருள்படும். தமிழ் நாட்டின் அரசு என்ற பொருளில் தமிழ் நாட்டரசு என்றே ஆகும்.

**2. நெருப்பை அணைத்தல், நெருப்பை அவித்தல் என்று இரண்டு வழக்குகள் உள்ளனவே. இவற்றுள் கொள் ளத் தக்கது எது?**

நெருப்பை அணைத்தல் என்பது மரபன்று. இன்றும் நாட்டுப்புறங்களில் நெருப்பை அவி என்று தான் சொல்கிறார் கள். நெருப்பைஅணை என்று பேசுவதும் எழுதுவதும் நகர்ப் புறங்களில் படித்தவர்கள் பழக்கமாக உள்ளது. தீ அணைப்புத் துறை என்று தீ அவிப்புத் துறைக்குப் பெயர் வழங்குகிறது. இது பிழை தான். விளக்கை அவித்தல் என்ற தொடர் கேட்கக் கடுமையாக உள்ளது என்ற காரணத்தால் விளக்கை அணை

என்று மங்கலமாகக் கூறப்போய், இந்த வழக்கு வந்திருக்கலாம். ஆனால் ஊரைச்சுடும் நெருப்பை அணை என்று மங்கலப்படு வதில் பொருள் இல்லை.

**3. நற்றாமரை, கற்றரை எனப் புணர்வதே தமிழ் ஒலி மரபு என்றால் மண்ஞாத்த, பஃறொடை, முஃடீது எனப் புணர்வதும் அதே தமிழ் மரபு என்று தானே கொள்ளவேண் டும்? இவற்றை மட்டும் மட்கிப் போன புணர்ச்சிவிதிக் குப்பைகள் என்று எப்படிக் கூறுகிறீர்கள்?**

தமிழ் ஒலிமரபு என்று நான் குறித்தது, இன்ன எழுத்தை அடுத்து இன்ன எழுத்து வரும் என்ற மயக்க இலக்கணத்தை.ல் த, ற் த என வருதல் தமிழில் இல்லை என்பதால் அவற்றை எனத் திரிந்தே வரும். மண்ஞாத்த, பொன்ஞாத்த முதலியன இப்படித்தான் வருதல் வேண்டும் என்பதில்லை. இவை ஒலி மரபுக்காகத் திரிந்தனவும் அல்ல. இவை முறையே மண்யாத்த, பொன்யாத்த, பல தொடை, முட்டீது என்று வருவனவே. எனினும் அவை, அவற்றோடு மண்ஞாத்த முதலிய வேறு முடிவுகளையும் பெறும் என்பது இலக்கணச் செய்தி.

*ண னவெண் புள்ளி முன் யாவும் ஞாவும்*
*வினையோ ரனைய என்மனார் புலவர்*

என்பது தொல்காப்பியம். இதுவும் நன்னூலார் காலத்தில் இறந்துவிட்டமையால் அவர் அதனைத் தம் நூலிற் கூறாமல் விலக்கி விட்டார்.

*குறில்வழி லளத்தவ் வணையின் ஆய்தம்*
**ஆகவும்** *பெறுஉம் அல்வழியானே*

என்பது நன்னூல்.

இங்ஙனம் இங்கு எடுத்துக் காட்டிய தொடர்கள் இரண்டு வகையாகப் புணர இடமிருக்கிறது. இவற்றில் ஒன்று நிலைத்திருக்க மற்றது மறைந்து விட்டது. மட்கிப் போன வையாகக் கூறியது மறைந்தவற்றையே. தமிழ் ஒலி மரபுக்கு ஏற்றனவேயாயினும், நன்னூலார் விலக்கியது போல் இன்று இறந்து போனவற்றை விலக்காமல், இன்றைய மாணவர்க்குக் கற்பித்துக் கொண்டிருக்க வேண்டாம் என்பதே என் கருத்து.



மேலும் கல்+தரை என்பது கற்றரை என்று தான் இன்றும் புணர்க்கப்படுகின்றது. எனவே கற்றரைக்குரிய விதி மட்கிப் போனதாகக் கூற முடியாது.

கல்தரை என்பது போல இன்று சிலர் பிரித்தே எழுதுவது உண்மை தான். பொதுமக்களுக்குப் புரிய வேண்டும் என்ற நோக்கம் இதில் உள்ளது. எனினும் கற்றோர் நடையில் இது செல்வாக்குப் பெறும் காலத்தில், ஒலி மரபுக்கு ஒவ்வாத இதுவும் தமிழ் இலக்கணத்தால் ஏற்றுக் கொள்ளப்படலாம். அப்போது கற்றரைக்குரிய விதி மட்கிப் போகலாம்.

மொழியானது நம்மால் கையாளப்படும் கருவியே. அதில் ஏற்படும் மாறுதல்கட்கு நாமே காரணம். மொழியில் எப்பகுதியும் தானாகவே கழிதலும் தானாகவே புகுதலும் இல்லை என்பது என் கருத்து. குடியாட்சியிற் போலவே, மொழியிலும் பெரும்பான்மை செல்வாக்குப் பெறுகிறது. பெரும்பாலோர் கழிப்பது கழிகிறது; புகுத்துவது புகுகிறது. சிலர் செய்தால், கழித்தல் புகுத்தல் என்று செயற்கை போலவும், பலர் செய்தால் கழிதல் புகு தல் என்று இயற்கை போலவும் கூறப்படுகிறது. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்றது இதனாலே யே.எனவே பழைய விதிகளை நாமே கழித்து விடுகிறோ மேயன்றித் தாமே கழிதல் இல்லை என்று யான் கருதுகி றேன். புதியவற்றைப் புகுத்துவதற்கும் இஃது ஒக்கும்.

**4. விசிப்பலகையைச் சிலர் வாங்குப் பலகை என்கிறார்கள். இது பழந்தமிழ்ச் சொல்லா?**

பழந்தமிழில் இதற்கு வாங்கிய பலகை என்று கூடப்பொருள் இல்லை; வாங்கு பலகை என்பதற்கு வளைந்த பலகை என்பது தான் பொருள். விசிப் பலகை யை 'வாங்கு' அல்லது வாங்குப் பலகை என்பது புதுவை வட்டார வழக்கு. ஆங்கிலத்தில் bench என்பது பிரெஞ் சில் banc (பான்) எனப்படும். banc என்பதை பாங்க் என்று எழுதுவார்கள். சிலர் இதனைப் பாங்கு என்று தமிழ் ஒலிக்கேற்ப ஒலித்திருக்க வேண்டும். பண்டி—வண்டி, பங்காளம்—வங்காளம் என்று பகரம் வகரமாதல் மொழியியல் உண்மை. இதன்படிப் பாங்கு—வாங்கு என்று ஆகியிருக்க வேண்டும்.

**5. Power cut என்பதற்கு மின்சார வெட்டு என்பது சரியான மொழி பெயர்ப்புத்தானா?**

இதனைச் சொற்பெயர்ப்பு எனக் கொள்ளலாம். Cut என்பதை வெட்டு எனப் பெயர்ப்பதில் ஒலியும் பொருளும் பொருந்துகின்றன. என்றாலும் தமிழ் மரபிற்பழகிய செவிக்கு இது என்னமோ போல இருக்கிறது. Power cut என்பதை மின் குறைப்பு என்றால் என்ன குறைந்து போகும்?

**6. எண்ணை, வெண்ணை போன்றவற்றுக்கும் இலக்கணத் தில் இடம் கொடுப்பதற்கு ஏதேனும் தடை உண்டா?**

எண்+ நெய் என்ற பொருளை உணர்த்த எழுந்த எண்ணெய் என்ற சொல் இன்று oil என்பது போல் எல்லா வகை நெய்களுக்கும் பொதுப் பெயராகி விட்டது. இது போலவே எண்ணை என்று இறுதியில் ஐகாரம் இட்டு எழுதப்படும் பிழை வடிவமும் ஒரு காலத்தில் ஏற்றுக் கொள்ளப்படலாம் என்று கருதுகின்றேன். இலக்கணமும் இதனை மரூஉ என்று போற்றிக் கொள்ளக்கூடும்.

தமிழ் மொழியில் சொற்களின் இறுதியில் எகரக்குறில் வராது. ஆனால் பேச்சு வழக்கில் அது வரு வது விந்தையாக உள்ளது. கடெ, தலெ என்று பேசப்படு வன கடை, தலை என்று எழுதப்படுவனவே. இது போல வே எண்ணெ என்று எழுதப் படுகிறது போலும். அருமருந்தன்ன என்பது அருமந்த என்று ஆனது போன்ற பெருஞ் சிதைவுக்கு இடந்தந்து போற்றிய இலக்கணம், ஒலியிய லொடு பொருந்திய எண்ணைக்கு ஒரு காலத்தில் இடந்தரலாம் என்று கருதுகின்றேன்.

**7. ஆங்கிலத்தில் and என்பதற்கு நேரான தமிழ்ச் சொல் எது?**

Father and mother என்பதைத் தந்தையும் தாயும் என்கிறோம். இதைத் 'தந்தை மற்றும் தாய்' என்று சிலர் மொழி பெயர்க்கின்றனர். and என்பதற்கு நேரான சொல்லாக மற்றும் என்பதை அவர்கள் கருதுகின்றனர். இது தமிழ் மரபு அன்று.



Kandan and son என்று பெயர்ப்பலகையில் ஆங்கிலத்தில் எழுதித் தமிழில் அதைக் கந்தன் அண்டு சன் என்றே பெரும் பாலும் எழுதுகிறார்கள். இதனைக் கந்தனும் மகனும் என்று எழுதுவதே முறை. Paper and pencil என்பதைத் தாளும் கரிக்கோலும் என்று உம்மை விரித்தோ, தாள் கரிக்கோல் என்று உம்மை தொகுத்தோ மொழி பெயர்க்கலாம். இது போலவே husband and wife என்பதைக் கணவனும் மனைவியும் என்றோ, கணவன் மனைவியர் என்றோ கூறலாம். கணவன் மற்றும் மனைவி என்பது மரபு வழு. எனவே and என்பதற்குத் தமிழிலே மற்றும் என்பதைக் கொள்வது முறையன்று; உம் என்பதைக் கொள்ள வேண்டும்.

**8. மகன் என்பதற்குப் பன்மை என்ன?**

மகன்கள் எனலாம். மக என்பது குழந்தை; இதனுடன் னகரம் சேர்த்து மகன் என்றால் ஆண்பிள்ளை என்றும், ளகரம் சேர்த்து மகள் என்றால் பெண்பிள்ளை என்றும் பால் பிரிந்து பொருள் •ரும். மக்கள் பிள்ளைகள் என்ற பொருள்படும். கண்ணகி கோவலரைத் தம் மக்கள் என்று கவுந்தியடிகள் கூறியது இந்தப் பொருளில் தான். மக்கள் என்ற இச்சொல்லே பொதுவாக மாந்தர் தொகுதியையும் உணர்த்தும் வழக்குப் பெற்றுவிட்டது. ***மக்கள் தாமே ஆறறிவுயிரே*** (தொல். மரபு.33) என்பதில் இப்பொருளைக் காணலாம். மகார் என்றொரு பன்மைச் சொல் உண்டு. இதுவும் பொதுவாகப் பிள்ளைகள் என்றே பொருள்படும். ஆண் பிள்ளைகள் என்பதைக் குறிக்க sons என்றும், பெண்பிள்ளை களைக் குறிக்க daughters என்றும் ஆங்கிலத்தில் உள்ளது. போலத் தமிழில் தனிச் சொற்கள் இல்லை. இன்று பேச்சு வழக்கில் உள்ள 'மவனுவ', 'மவளுவ' என்ற சொற்கள் அவற்றுக்கு இணையாக எழுந்தனவே. இவற்றின் முறையான வடிவம் மகன்கள், மகள்கள் என்பனவே. பன்மையில் பாலைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமானால் இவற் றை ஏற்றுக் கொள்வதை விடச் சிறந்த வழியில்லை.

**9. அப்பன் அம்மை என்பனவே எழுவாய் வடிவங் களாயிருக்க அப்பா அம்மா என்ற விளிவடி வங்கள் இன்று எழுவாயாகப் பெருவழக்காகி விட்டனவே இவற்றை ஏற்ப தா? தவிர்ப்பதா?**

தம் அப்பன் என்பன புணர்ந்து தமப்பன் என்று பழந் தமிழில் வழங்கிய சொல், இன்று தகப்பன் என்றானது. இதனை ஏற்றுக் கொண்ட தமிழ், அப்பா அம்மாக் களையும் ஏற்றுக் கொண்டு விட்டது என்றே சொல்ல வேண்டும். வினாவில் உள்ள 'பெரு வழக்காகி விட்டன' என்ற உண்மையே இதனைத் தெளிவாக்குகிறது.

**10. சமையற்காரரைக் குசினி என்பது என்ன சொல்? Kitchen என்ற ஆங்கிலச்சொல்லே இப்படியானது எனலாமா?**

Kitchen என்பது சமையலறை. Cook என்பது தான் சமையற்காரரைக் குறிக்கும். Cuisinier (குய்சினியே) என்ற பிரெஞ்சுச் சொல்லிற்குச் சமையற்காரர் என்று பொருள். குய்சினியே என்ற ஒலியொற்றுமை காணப் படுவதால் குசினி என்பது பிரெஞ்சுச் சொல்லின் சிதைவாயிருக்கலாம்.

**11.கொக்குப் பறக்கிறது என்பதை மிகுத்து எழுத வேண்டும். ஆனால் குருவி பறக்கிறது என்பதை இயல்பாக எழுத வேண்டும் என்கிறார் என் நண்பர். இது சரியா?**

உங்கள் நண்பர் சொல்வது சரி தான். கொக்குப் பறக்கிறது, குருவி பறக்கிறது என்னும் இரண்டுமே எழுவாய்த் தொடர்கள்தாம். ஒன்று மிகுந்தும், மற்றது மிகாதும் வருவது முறை யில்லையே என்று வினவும் உங்கள் வினாவில் முறை மை உள்ளது. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் இரண்டு இடங்கள் தவிர எல்லா இடங்களிலும் வல்லினம் மிகும். அந்த இரண்டில் ஒன்று – ஈட்டு புகழ், கத்து கடல் எனவரும் வினைத் தொகை; மற்றொன்று – நடத்து தம்பி, காட்டு கந்தா என வரும் ஏவல் வினை முற்றுத்தொடர். பேச்சு வழக்கில் நாம் கொக்கு பறக்கிறது என்று இயல்பாகவே சொல்லுகின்றோம். இதனால் பொருள் மாறுபாடும் ஏற்படவில்லை. இதுவே எழுத்துத் தமிழிலும் மெல்லச் செல்வாக்குப் பெறு வதைக் காண்கின்றேன். ஒரு பல்கலைக் கழகத்தின் தமிழிலக்கணப்பாடத்தில்கூட இப்பிழை சேர்ந்து உள்ளது.

**12. வினா என்பதைக் கேள்வி என்கின்றோம். இதனைப் பிழை எனத் தள்ளுவதா? கேள்வி என்ற சொல்லுக்கு ஏற்பட்டிருக்கும் புதியதோர்பொருளா கக்கொள்ளுவதா?**



பழந்தமிழில் கேள்வி என்பது காதால் கேட்பது என்றே பொருள்படும். எப்படியோ இதற்கு வினா என்ற பொருள் வந்து விட்டது. மொழி வழக்குகளைக் கொள்ளுவதும் தள்ளுவதும் கற்றோர் கையில் மட்டும் இல்லை. பொதுமக்களுக்கும் இந்த உரிமை உண்டு. கேள் என்பதற்கு இப்போது வினாப் பொருளே மிகுதியாக வழங்குகிறது. இதனையும் மொழி ஏற்றுக் கொள்ளும் என்றே நினைக்கின்றேன்.

**13. துப்புரவு என்பதன் பொருள் என்ன? "வீட்டைத் துப்புரவு செய்" என்று கூறுவது பிழையா?**

துப்புரவு என்பதற்கு வலிமை என்பது பொருள்.

*துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கள்*
*மற்றை யவர்கள் தவம்* — குறள் 263

என்கிறது திருக்குறள். இன்று இச்சொல் தூய்மை என்ற பொருளில் மட்டுமே ஆளப்படுகின்றது. தூய்மை என்ற சொல் இருக்கும் போது துப்புரவுக்கு இந்தப் பொருள் மாற்றம் செய்திருக்க வேண்டியதில்லை. இதுபோலவே கண்ணோட்டம் என்ற சொல்லும் பழைய பொருளை இழந்து வருகிறது. திருக்குறளில் கண்ணோட்டம் என்று ஓர் அதிகாரம் உண்டு. அதற்கு 'இரக்கம்' என்பது பொருள். இன்று 'அந்த நூலை ஒரு கண்ணோட்டம் விட்டேன்' என்று எழுதுகின்றார்கள். இது, to have a glance என்று ஆங்கிலத்தில் நினைத்துத் தமிழில் மொழி பெயர்ப்பதன் விளைவாக இருக்கலாம். அந்த நூலிற் பார்வை செலுத்தினேன் என்று இதனைக் கூறலாம்.

**14. பாண்டிச்சேரி என்பது சரியா? புதுச்சேரி என்பது சரியா?**

கிழமையிதழ் ஒன்றில் சில ஆண்டுகட்கு முன் ஓர் அம்மை யார், புதுச்சேரி என்ற பழம் பெயர் மறைந்து போனதற்கும் பாண்டி என்ற புதுப்பெயர் நிலைத்து விட்டதற்கும் மகிழ்ச்சி தெரிவித்து எழுதியிருந்தது இப்போது நினைவுக்கு வருகிறது. புலவர்கள் கூடப் பாண்டி என்பது ஏதோ பாண்டியனோடு தொடர்புடைய தமிழ்ப் பெயர் போலும் என்றே நம்புகின் றார்கள்'பாவேந்தரைத் தந்த பாண்டி.' என்று பாடலிலும் அதனை எடுத்தாள்கின்றனர். புதுச்சேரியைப் பிரெஞ்சுக்காரன்

Poudichery என்று எழுதி, u வை n ஆகப் பிறழ ஒலித்து Pondichery ஆக்க, ஆங்கிலேயன் அதனைப் பாண்டிச்சேரியாக ஒலிக்க, அதிலும் 'சேரி' என்ற சொல் ஒலிப்பது இழிவு எனக்கருதிய நம்வர், தம் உயர்மனங்கள் அதையும் கழிவு செய்து 'பாண்டி' எனச் சுருக்கிச் செல்லமாக அழைக்க, இப்படிக் குரங்குகளின் கைம்மாலையாகச் சிதைவுண்டு, எஞ்சிக் கிடப்பதே 'பாண்டி'. இதனைச் சொல்வதில் தான் நம்மவர்க்குப் பெருமையும் மகிழ்ச்சியும். இது நம்தனிச் சிறப்புகளில் ஒன்று!

**15. கார் காலமா? கார்க்காலமா? கார்காலம் என்றெழு தினால் தேர்கால் என்று ஏன் எழுதக்கூடாது? சங்க காலம் சரியானால் தங்ககாப்பு ஏன்சரியாகக் கூடாது?**

கார்க்காலம் என்பதே புணர்ச்சி விதிப்படிச் சரி. எனி னும் விதிக்குள் அடங்காது விலக்குப் பெறுவன எல்லா விடத்திலும் உண்டு. புறனடைகளைக் கொண்டு பொது விதிகளை மீறுதல் விரும்பத்தக்கதன்று. கார்காலம் இத் தகையதே. ஏரிக்கரை விதிப்படி மிக வேண்டும். ஆயி னும் ஏரிகரை என்றே வழங்கும். காரணம், இலக்கியம் இலக்கணத்தின் வழி நிற்பதன்று என்பதே.சங்ககாலம் என்பது வட சொற்புணர்ச்சி. இடைஉரி வடசொற்புணர்ச் சிகள் இயம்பிய விதிக்கு மாறுபட்டு வருவன உள என்பது நன்னூற் புறனடை.

**16. வரும்படி சொன்னார், வரும்படிச் சொன்னார் — இவற்றில் எது சரி? இதற்குப் புணர்ச்சி விதி உளதா? எங்கே?**

வரும்படி சொன்னார் என இயல்பாய் எழுதுவதே சரி. வரும், போகும், சொன்ன என்பன போன்ற வினைகளை அடுத்து வரும் 'படி' என்ற சொல்லின் முன் வரும் வல்லினம், வரும்படி சொல், போகும்படி கூறு, சொன்ன படி செய் என்று இயல்பாகும். பெயரை அடுத்து வரும் படி முன் சட்டப்படிக் குற்றம், முறைப்படிச் செய் என்று மிகும். சுட்டு வினாக்களை அடுத்து வரும் படி முன், அப்படி சொல் – அப்படிச்சொல், இப்படி செய்–இப்படிச் செய், எப்படி கேட்டான்–எப்படிக்கேட்டான் என்று எப்படியும் வரும். இந்த விதி ஆறுமுக நாவலர் தம் இலக்கணச் சுருக்கத்தில் உள்ளது.



**17. பெரும் விழா, பெருவிழா — இவற்றில் எது சரி?**

பெரு என்ற பண்படி, வல்லினத்தின் முன்வரின் இனம் மிகுந்து பெருங்கதை, பெருந்திணை என வரும், உயிரின் முன்னும் யகரத்தின் முன்னும் வரின் பேரழகு, பேர்யானை என முதல் நீளும். மெல்லினத்தின் முன்னும் வகரத்தின் முன்னும் வரின் பெருநாரை என்றும் பெருவாயில் என்றும் இயல்பாகவே வரும். எனவே பெரும் விழா என்பது பிழை, பெருவிழா என்பதே சரி.

**18.வேண்டும், வேண்டாம் என்ற சொற்கட்கு இன்றைய வழக்கின்படி என்ன இலக்கணம் கூறலாம்?**

வேண்டும் என்பதைத் தொழிற் பெயர் என்றும் வேண்டாம் என்பதை எதிர்மறைத் தொழிற் பெயர் என்றும் கூறலாம். ஓ ஓதல் வேண்டும் என்பது போல் சில விடத்தில் இவை வியங்கோ ளாகவும் வரும்.

**19. தமிழ்க்காவல் என்று மிகுத்தெழுதுவதே சரி என்கிறேன் நான். இதை மறுக்க முடியுமா?**

மறுக்க முடியாது. ஆனால் தமிழ்காவல் என்று இயல்பாக எழுதுவதையும் மறுக்க முடியாது. ஒரு தொடரை நாம் எவ்வகைத் தொடராகக் கொள்ளுகி றோமோ அதற்கேற்றபடி அதனைப் புணர்த்தெழுதலாம். தமிழினது காவல் என்று கொண்டால் மிகுத்து எழுத வேண்டும்; தமிழைக் காத்தல் என்று கொண்டால் இயல்பாக எழுத வேண்டும். அறத்தினது காவலர் என்ற பொருளில் அறக்காவலர் என்று எழுதலாம். ஆனால் அறங்காவலர் என்பதே பெரு வழக்கு. இது அறத்தைக் காப்பவர் என்ற பொருளது. மெய்யின் காப்பாளரை மெய்க்காவலர் எனல் வேண்டும், ஆனால் மெய்காப்பாளர் என்கிறோம். அதுபோல் ஊர்க் காவலை ஊர்காவல் என்பதும் உண்டு. நாடு காத்தலை நாட்டுக் காவல் எனலாம். இதனை நாடுகாவல் என்கிறது இறையனார் அகப்பொருள். கடையினது திறப்பைக் கடைத் திறப்பு எனலாம். கடைதிறப்பு என்கிறது கலிங்கத்துப்பரணி. இங்கே கடையைத் திறத்தல் என்பது பொருள். இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வருமொழி வினையாய விடத்து,

இயல்பு என்ற விதி இங்கே போற்றப்பெறுகிறது. எனவே தமிழ் காவல் இயல்பாகவும் எழுதப்படும்.

**20. பூவிலே சிறந்த பூ அன்பா?**

பூப்பூவாய்ப் பூத்திருக்கும் பூமியிலே ஆயிரம்பூ பூவிலே சிறந்த பூ என்ன பூ? என்ற பாடல் வினாவுக்கு, 'ரோசாப்பூ' என்றொரு குழந்தை விடை சொல்ல, அது தப்பு என்று மறுக்கப் படுகிறது, மற்றொரு குழந்தை 'தாமரைப்பூ' என்கிறது. இதற்கும் 'ஊகூம்' என்று மறுப்புக் கிடைக்கிறது.பூவிலே சிறந்த பூ தாமரை தான். பூவிலே சிறந்த பூ தாமரைதான். 'பூவெனப் படு வது பொறிவாழ்பூவே' என்றும் 'பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை' என்றும், 'பூவிற்குத் தாமரையே' என்றும் பெருவழக் காக வரும் கூற்றுகள் தாமரையின் சிறப்பைப் பறை சாற்று கின்றன. குழந்தை சரியான விடையைச் சொல்ல அதை மறுப்பவர் ஓர் ஆசிரியை என்பது ஒரு வேடிக்கை! தமிழில் உரோசப்பூவுக்குச் சிறுதாமரை என்று பெயர் உண்டு. இதனைச் சரியான விடையாக ஏற்றுக் கொண்டாலும் பிழையில்லை. இதுவும் மறுக்கப்படுவது இன்னொரு வேடிக்கை! இறுதியாக, ஆசிரியை சொல்லும் சரியான விடை தான் என்ன என்று பார்த்தால், அன்பு என்று விடை கிடைப்பது எல்லாவற்றையும் விடப் பெரிய வேடிக்கை! இதை அடிக்கடி கேட்கும் குழந்தைகள் அன்பு என்பதை 'அன்பூ' என்று எழுதினால் வியப்பதற்கில்லை!

**21. அனைத்து என்ற சொல்லுக்கு எல்லாம் என்ற பொருளைக் கொள்ளுவதா? தள்ளுவதா?**

'அன்றியனைத்தும்' என்ற தொடர் தொல்காப் பியத்திலேயே பலவிடத்தில் எல்லாம் என்ற பன்மைப் பொருளில் வருகின்றது. அனைத்தும்–பன்மையே.

**22. புலவன் என்பதற்குப் பெண்பால் என்ன?**

உழவனுக்குப் பெண்பால் உழத்தி என்பது போலப் புலவனுக்குப் பெண்பால் 'புலத்தி' எனலாம்.



**23. பரவாயில்லை' என்பதற்குத் தமிழ் என்ன?**

'பெரிதில்லை' என்று சிலரும் 'கேடில்லை' என்று சிலரும் கூறுகின்றனர்.ஆங்கிலத்தில் not bad என்ற பொருளில் இதுவழங்குகிறது. இதே பொருளில் 'தகாதில்லை' என்ற சொல் இன்றும் நாட்டுப்புற மக்களிடையே பெருவழக்கில் உள்ளது.

**24. இல்லை, வேண்டும் என்பவற்றை ஐம்பால் மூவிடங்கட்கும் ஏற்றுக் கொண்டதைப்போல் எதிர்மறை வினையைக் குறிக்க அல்ல என்பதை ஏற்றுக்கொண்டு மு.வ. போன்றவர்கள் எழுதுவதைப் பிழைஎன்பதா? ஏற்றுக்கொள் வதா?**

'உண்டு' என்பது தொல்காப்பியர் காலத்தில் ஒன்றன் பாலுக்கே உரித்தாயிருந்தது. நன்னூலார் காலத்தில் இது ஐம்பால் மூவிடங்களிலும் ஆட்சி பெற்றுவிட்டது. இதனை ஏற்றுக் கொண்ட பவணந்தியார் 'வேறில்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன' என்ற விதி செய்தார். நன்னூலின் படி, அல்ல என்பது பலவின் படர்க்கைக்கே உரியது. இன்றோ எல்லா இடம்பால்களிலும் ஆளப்படுகிறது. இப்போதுள்ள இலக்கணப்படி இது பிழை தான். கற்றோர் வழக்கில் இடம் பெற்று விட்ட இது, இலக்கணத்தில் இடம்பெறும் நாள் மிகத் தொலைவில் இல்லை.

**25. பரிட்சையில் முதலாவதாக வர முயற்சித்தான். இதில் பிழையிருந்தால் திருத்துக.**

பரிட்சை வடசொல். இதற்குத் தமிழ் 'தேர்வு'. முதலாவது என்பது அஃறிணை, முதல்வனாக எனல் வேண்டும். இங்கே வரஎன்பது மிகை. to come first என்ற ஆங்கில அமைப்பு இது. முதல்வனாக என்பதே போதும்; அல்லது முதலிடம் பெற என்றும் கூறலாம். முயற்சித் தான் என்பது முயன்றான் என்றோ முயற்சி செய்தான் என்றோ இருத்தல் வேண்டும். முயற்சி தொழிற்பெயர். இதனை வினையடியாய்க் கொண்டு வினைகளை உருவாக் குதல் தமிழ் மரபன்று. பயிற்சி பயிற்சித்தான் என்று வருவதில்லை. எனவே, தேர்வில் முதலிடம் பெற முயன்றான்' என்று இதனைச் செப்பம் செய்யலாம்.

**26. கெடு விடு என்பன போன்ற குறிலிணைப் பகுதிகள் கெட்ட விட்ட என ஒற்றிரட்டுவது போல் போடு என்பதும் போட்ட என இரட்டிக்கிறதே இது எப்படி!**

போகடு என்பது போடு என்பதன் பழைய வடிவம். எனவே போகடு என்பதன் உட்பிணைப்பு நிலையை போடு என்றாகிறது.போகவிடு என்ற தொடர் போகடு என்றாகியிருக் கலாம். விடு குறிலிணை தானே! எழுந்திடு—எழுந்திட்ட என்பது போலப் போகடு போகட்ட என்றாகிறது. எனவே போடு என்பதும் போட்ட என்று ஒற்றிரட்டுகிறது என்று கருதுகின்றேன்.

**27. தேர்தலில்தம்இடத்தைத் தக்கவைத்துக்கொண்டார் இதில் தக்க வைத்தல் என்ற சொல்லின் வேர் யாது?**

தம் இடத்தை நிலை நிறுத்திக் கொண்டார் என்று இதனைச் சொல்லலாம். தங்க வைத்து என்பதே தக்க வைத்து என வலிந்து ஒலிக்கப்படுகிறது. இது விரும்பத் தகாதது.

**28. வீட்டு மருமகளை மாட்டுப்பெண் என்பது மகளிரை இழிவுபடுத்துவதாகாதா?**

மணம் ஆளன் என்பது மணவாளன் என்றாகும். இது மணாளன் என மருவியும் வழங்கும். இதுபோல் மணவா ளனுக்குப் பெண்பாலான மணவாட்டியும் இவ்வகையில் மணாள னுக்குப் பின்னடையாமல் மணாட்டி என்று மருவுகின்றாள். மணாட்டிப் பெண் என்பது மேலும் மருவி மாட்டுப்பெண் என்றானது என்பர். எனவே இதில் இழிப்புக்கும் பழிப்புக்கும் எள்ளளவும் இடமில்லை.

**29. கம்பத்தை நட்டினான் என்று எழுதுவது சரியா?**

பிழை; கம்பத்தை நட்டான் என்றே எழுத வேண்டும். கொடியை நாட்டினான் என்பது சரி. இதில் நாட்டு—பகுதி. இன் இடைநிலை. நட்டான் என்பதில் நடு என்னும் பகுதி ஒற்று இரட்டி இறந்த காலம் காட்டுகிறது. இதில் இன் இடைநிலை வராது. நடு என்ற பகுதியையும் இன் இடை நிலையையும் ஒரே சொல்லிற் பெய்வது பிழை.



30. பரிசுதிட்டம் **அரு இல் 'வளமோடு' என்பதைச்** சரியான **விடையாகத் தந்திருக்கிறீர்கள். மஃகான் புள்ளிமுன்** அத்தே **சாரியை (தொல். உருபு. 13) என்ற விதிப்படி** 'வளத்தோடு **'என்று எழுதினேன். இது தவறா? 'கட்டளைப்படிச்** சேத்துப்பட்டு **'என்று எழுதவேண்டும் என்கிறீர்கள். 13-4-2004 தெளிதமிழில் நூற்கடல் அவர்கள் 'அறியாதபடி காத்தற்கண் 'என்று எழுதியுள்ளதைக் காணுங்கள்.** - *வே. வனிதாமணி, சேடர்பாளையம்*

தொல்காப்பிய நூற்பாவையும் சான்றோர் ஆட்சியையும் காட்டி இது தவறா? என்று கேட்கும் உங்கள் இலக்கண ஈடுபாட்டையும், குற்றத்தைத் தட்டிக் கேட்கும் துணிவையும் பாராட்டுகிறேன். மகரவீற்றுப் பெயர்களோடு ஒடு, ஓடு உருபுகள் புணரும்போது அத்துச்சாரியை இன்றி எழுதுவதும் மரபே. உலகமோடு (பதிற்.14-22, புறம். 56-25), சீற்றமொடு (பதிற்.15-2) என்பன காண்க. அதன் படித் தொல்காப்பியரும் அகரமோடு(17), அகரமொடு(46), உகரமொடு (162), காலமொடு(683), உள்ளமொடு(1096) சுற்றமொடு(1138), என்று அத்துச் சாரியை இன்றியும், திறத்தோடு(984) என்று அத்துச்சாரியை யுடனும் இரு வகையாக எழுதுகிறார். இந்த மரபினை,

***உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்*** (புணரியல் 133) என்று கூறுகிறார். அதனால் 'வளமோடு' என்பதும் சரியே. அதனைத் தவறாகக் கொண்டு நீங்கள் திருத்தியிருக்க வேண்டியதில்லை.

நூற்கடல் அவர்கள் அறியாதபடி காத்தல் ' என்று இயல்பாக எழுதியதும் சரியே. யான் பரிசுதிட்ட விடையில் கட்டளைப்படிச் சேத்துப்பட்டுக்கு' என்று மிகுத்து எழுதியதும் சரியே. முன்னது, அறியாத என்னும் வினையை அடுத்து வரும் படி என்னும் இடைச்சொல். பின்னது கட்டளை என்ற பெயரை அடுத்து வரும் படி என்னும் இடைச்சொல். முன்னதற்கு, **வினையை அடுத்த படி என்னும் இடைச்சொல்லின் முன் வரும் வல்லினம் மிகா** (தமிழிலக்கணம், ஆறுமுகநாவலர், 161) என்பது விதி. பின்னதற்கு,

*இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்*
*கசதப மிகும்* (நன்னூல் 165) என்பது விதி.

**31. தெளிதமிழ் 13.4.2004 இதழில் இரா. செம்பியனின் பின் அட்டைப் பாடலில் 'மிகப்பெரிய' என்பதற்கு எதுகை யாக 'வகை வகையாய்' என்பது வருகிறது, க என்ற குறிலுக்குக் கை என்ற நெடில் எதுகையாக வருவது சாரியா?**

- வீ. வில்வநாதன், பெங்களூர்.

முதலெழுத்து அளவொத்திருக்க இரண்டாமெழுத்து ஒன்றுவது எதுகை. அவ்விரண்டாமெழுத்து உயிர் மெய்யாயின் மெய்ம்மட்டும் ஒத்து வருவது போதும். அதன் மேலேறிய உயிர், குறிலுக்குக் குறில், நெடிலுக்கு நெடில் என்று அமைவது சிறப்பு. இவ்வாறன்றிக் குறிக்கு நெடிலும் வரலாம். கேடும் - கோடாமை (குறள் 115) காண்க. ஆனால் நீங்கள் குறிப்பிடும் கை என்பது நெடிலுமன்று; குறிலே. ஐகாரவுயிர் மெய்கள் சீரின் இடையிலும் கடையிலும் ஒரு மாத்திரையே பெறும். எனவே, மிக - பகை என்று வரலாம். பிறவி - இறைவன் (குறள் 10) என்று வருவது காண்க. இதனை 'வருக்க வெதுகை' என்பர். காரிகை 41 உரை காண்க.

**32, 'முனைவர்ப்பட்டம்' என மிகுத்து எழுதி, இருபெய ரொட்டுப் பண்புத்தொகை என இலக்கண ஈடுபாடுகொண்ட ஓர் அன்பர் குறிப் பிட்டுள்ளார். இது சரியா?**

*- முனைவர் மு. இளங்கோவன், ஆர்க்காடு.*

உயர்திணைப் பெயர்கள் இருவழியிலும் இயல்பாகப் புணரும். சில உயர்திணைப்பெயர்கள் விகாரப்படும். இருபெய ரொட்டுப் பண்புத் தொகைகளிற் சில விகாரப்படும். அவ்வன்பர் கூறுவது சரியே. ஆனால் எல்லா இரு பெயரொட்டுகளிலும் ரகரவீறு விகாரப்பட்டே புணரும் என்பதில்லை. சிலவே, தியாகராசர் + செட்டியார் = தியாகராசச்செட்டியார், விநாயகர் + பத்தர் = விநாயகப்பத்தர் என்று விகாரப்படும். பல பெயர்கள் புலவர்பட்டம், சான்றோர் பெருமக்கள் என்று இயல்பாகவே புணரும். **'ஆயர்குலத்தினில்'** (திருப்பாவை 5) என்றும், 'பவணந்தி என்னும் **புலவர் பெருமான்**' (நன்னூல் 137 சங்.நமச்.உரை) என்றும் வரும் இலக்கிய வழக்குகள் காண்க. எனவே, முனைவர் பட்டம் என்று இயல்பாக எழுதுவதே மரபுக்கு ஒத்தது.



**33. தெளிதமிழ் 13.4.04 இதழ் 31ஆம் பக்கத்தில் முனைவர் இரா. சாரங்கபாணி தனலக்குமி இணையர் 'நோய்தபு நோன்றொ டை'யுடன் இனிது வாழ்க! என்றுள்ளது. இதன் பொருள் யாது? புலவர் ஒருவரைக் கேட்டதற்குப் "புரியவில்லை" என்றார். தெளி(ந்த) தமிழில் இப்படி ஒரு தெளி(வற்ற) தமிழா ? சிந்தியுங்கள்.**

*- புதா. சு. முருகையன், திருப்பத்தூர்.*

தபுதல்-கெடுதல். நோன்மை-வலிமை. உடம்புக்குத் தொடை என்றும் பெயருண்டு. நோய்தபு நோன் தொடை = நோய் நீங்கிய வலிய உடம்பு. பெரும்புலவர் இரா. சாரங்கபாணி தனலக்குமியர் நூறாண்டு கடந்தும் நோயில்லா வலிய உடம்புடன் வாழ்க என்று வாழ்த்தப்பட்டனர். **'முழுவலி துஞ்சும் நோய்தபு நோன் றொடை'** என்பது பதிற்றுப்பத்தில் 44 ஆம் பாடலின் 9ஆம் அடி. இந்த அழகிய தொடரின் பொருட்சிறப்புக்கருதி இதையே அப்பாட்டுக்குப் பெயராக வைத்துள்ளனர். பத்துப்பாட்டுள் மலைபடுகடாம் என்பதும் இப்படி வந்த பெயரே. பழந்தமிழிலக்கியத்தில் பயின்றோர் இதன் அருமைப்பாடுணர்ந்து சுவைத்திருப்பார்கள். அத்தகைய தொடரை நீங்கள் தெளிவற்ற தமிழ் என்று குறிப்பிட்டமைக்கு இரங்குகின்றேன். 'அறி தோறறியாமை கண்டற்றால்' என்பதுபோல், 60 ஆண்டுக்கு மேலாகப் பழந் தமிழில் ஊறிக்கிடக்கும் எனக்கும் சில சொற்கள் புரியாதனவாயுள்ளன. அதற்காக என் அறியாமையை நொந்துகொண்டு, அகரவரிசை பார்த்தோ, அறிந்தார்வாய்க் கேட்டோ ஐயமகற்றிக் கொள்கிறேன். தமிழைப் பழிப்பதில்லை.

**34. நனி என்ற உரிச்சொல் பெயர் முன் வாராது என்று கூறியிருக்கிறீர்கள். 'நனி பசு பொழியும் பாலும் என்ற பாவேந்தர் பாடற்பகுதியில் நனி என்பது பெயர்முன் வருகிறதே. எப்படி?** *- இரத்தின. சின்னசாமி, புதுவை-9.*

நனி வருந்தினை (அகம் 19), நனி கேட்டு (குறுந்.138), நனி தின்றான் (நன். 358உரை) என வினைமுன் நனி வருவதே மரபு. நனி நல்லர், நனி பேதை என்பவற்றில், நல்லரும் பேதையும் (குறிப்பு) வினைகளே. நனி மரம், நனி மாடு எனப் பெயர் முன்

நனி வாராது. ‘துவைத்துத் துணியை உலர்த்தினான்’ என்பதில் துணி என்ற பெயர்க்கு முன் வருவதால், துவைத்து என்பது பெயரெச்சமாகாமல், ‘துவைத்து உலர்த்தினான்’ என்று இயைந்து வினையெச்ச மாவதுபோல, ‘நனி பசு பொழியும் பாலும்’ என்பது, ‘பசு நனி பொழியும் பாலும்’ என்றே சொற்கள் இயைந்து பொருள் தரும். இதில் நனி என்பது வினைமுன் வருவது காண்க.

35. அதிகாரம், கவனம், தண்டம், சித்திரம், தானம், பதம், பாதம், பூசை, மதுரம், வேகம் என்பவை தமிழ்ச்சொற்களே என்று பாவாணர் கூறுகிறார். ஆனால், தி. நீலாம்பிகை யம்மையார் அவற்றை வடசொற்கள் என்கிறார். யார் கூறுவதை எடுத்துக்கொள்வது? - வீ. வில்வநாதன், வெங்காலூர்.

1) பழந்தமிழில் காணப்படாததாகவோ அருகிக் காணப் படுவதாகவோ இருந்து, பிற்காலத்தமிழில் பெருகிய வழக்குடை யதாக உள்ளமை, 2) பிற திராவிடமொழிகளில் திரிந்த வடிவத் துடனாவது காணப்படாமை, 3) அயல் மொழியில் அடிப்பட வழங்கிவருகின்றமை என்ற இயல்புகளால் ஒரு சொல்லைப் பிறமொழிச்சொல்லோ என ஐயுறுகின்றேன். அதன்படி நீங்கள் குறித்துள்ளவற்றில் தண்டம் என்பதுதவிரப் பிறசொற்கள் என் சிற்றறிவுக்கு அயற் சொற்களாகவே தோன்றுகின்றன. பதம் என்பது செவ்வி என்ற பொருளில தமிழ்ச்சொல். கால் என்ற பொருளில் வடசொல். பூசை என்பது பூனை யாயின் தமிழ்ச்சொல். வழிபா டாயின் வடசொல். பாவாணர் தமக்கே உரிய முறையில் ஆழமாக ஆய்ந்து அவற்றைத் தமிழ்ச்சொல் என்று நிறுவியிருக்கலாம். அவ் வாய்வினை யான் படித்து மெய்ப்பொருள் காணும் வாய்ப்புப் பெறும் வரை இதுவே எனது கருத்தாக இருக்கும்..

36. பழநி, பழனி என்ற இரு சொற்களில் எது சரியானது? *- வீ. வல்வநாதன், வெங்காலூர்.*

பழனி என்ற சொல்லே சரியானது. பொதினி என்பது அதன் பழைய பெயர். அகநானூறு,

முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி (61)



என்பது காண்க. ஆவியர் குடியினர் ஆண்டதால் அது ஆவிநன்குடி@ என்றும் பெயர்பெற்றது. திருமுருகாற்றுப்படை,

**ஆவி நன்குடி அசைதலும் உரியன்** (176)

என்பது காண்க. பொதினி என்ற பெயர் பழனி என்று மருவியிருக்க வேண் டும். அதனால், பொதினியில் உள்ள றன்னகரமே அப்பெயருக்குரியது. மாம்பழக் கதையை அடிப்படையாகக் கொண்டு, முருகனைப் “பழம் நீ” என்று அழைத்ததால் பழநி என்று சிலர் எழுதுகின்றனர். பழனி என்பதே இலக்கிய வழக்கு.

**37. மொழியாக்கம், மொழிபெயர்ப்பு - இவ்விரு சொற்களும் ஒரே பொருளுடையனவா?**
- வீ. வில்வநாதன், வெங்காலூர்.

மொழிபெயர்ப்பு, மொழியாக்கம் ஆகிய இரண்டு சொற்களுமே இன்று ஒரே பொருளில் வழங்குகின்றன. மொழிபெயர்ப்பு என்பது தொல் காப்பியர் காலப் பழமையுடையது. மொழிபெயர்ப்பில், சொல்லுக்குச்சொல், பொருளுக்குப் பொருள் என்று இரண்டு கொள்கைகள் உண்டு. Warm welcome என்பதைச் ‘சூடான நல்வருகை@ என்பது சொல்லுக்குச்சொல். ‘அன்பான வரவேற்பு@ என் பது பொருளுக்குப் பொருள். ஒரு மொழி யிலிருந்து மற்றொரு மொழிக்குப் பெயர்க்கத்தக்கது சொல்லா? பொருளா? என்பது மொழிபெயர்க்கப்படும் பொருளைப் பொறுத்தது. கட்டுரைகளுக்கு முதல் முறையும் படைப்பிலக்கியங் களுக்கு இரண்டாம் முறையும் பெரும்பாலும் பொருத்தமா யிருக்கலாம்.

**38. முணர் என்பது நீர்மப்பொருளின் அளவைப் பெயராக வழங்குகிறது. இச்சொல் அகரமுதலிகளில் காணப்படவில்லை. இலக்கியங்களிலோ கல் வெட்டுக்களி லோ இச்சொல் உண்டா? இதுபற்றிய செய்திகள் யாவை?**
*- அம்பல் நா. தண்டபாணி*

ஒரு வாய் அளவு நீர்மப்பொருள் என்ற பொருள் தரும் மிடறு என்ற சொல் பேச்சு வழக்கில், முடறு- முணறு - முணர் - மொணர் என்றெல்லாம் மருவி வழங்குகிறது. ஒரு மிடறு குடித்தான், மிடறு கூட்டி விழுங்கினான் என்றெல்லாம் எழுத்து வழக்கில் வரும்;.

39. மாநகர்- இதில் மா என்பது எவ்வாறு உரிச்சொல் லாக வரும்? நன்னூல் விளக்கம் தருமா? மா முன் வல்லினம் மிகுமா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்கம் தருக.

*- து. இராசகோபால், திண்டுக்கல்.*

மா என்பது பெயர்ச்சொல்லாயின் விலங்கு, மாமரம், மாவு, கருமை, பெருமை முதலிய பல பொருள் தரும். இடைச்சொல் லாயின் வியங்கோள் வினையை அடுத்து, உண்கமா என்பதுபோல அசைச்சொல்லாக வரும். (தொல். இடையியல் 35, நன்னூல் 439) 'மாநகர்' பெரியநகர் என்ற பொருளில், மா என்பது பண்பை உணர்த்துவதால் உரிச்சொல் எனலாம். தொல்காப்பியமும் நன்னூலும் மேற்கண்ட நூற்பாக்களில் மா என்னும் வியங்கோ ளசைச் சொல்லைப்பற்றிப் பேசுகின்றன. விலங்கைக் குறிக்கும் மா என்றபெயர்முன் வல்லினம் மிகாது என்கிறது நன்னூல் (171). பெரிய என்ற பொருளில் மாபெருந்தானை எனத் தொல்காப்பியத் திலும்(புறத்.5), சங்க இலக்கியங் களிலும் ( மாக்கிணை-புறநானூறு, 378) சிறுபான்மை வருகின்றது. பெரிய என்ற பொருளில் பெயர்க்கு முன் அடையாக வரின் உரிச்சொற்றொடர் எனலாம். அத்தொடர் களில் பெரும்பாலும் வலி மிகும். மாக்கிணை, மாக்கதை (கம்பரா.5, பெரியபு.3) என்பன காண்க. மாகாளி, மாசாத்துவான் (சிலப்.1-33)எனச் சிறுபான்மை மிகாமையும் உண்டு. வடசொற்களுக்கு முன் வரின், மாபாரதம், மாபாதகன், மாபுராணம்,மாபத்தினி (சிலப். 21-50) என இயல்பாகவே புணரும். மாபெரும் என ஒருபொருட்பன்மொழியாக வரும்போது, மாபெருந்தானை, மாபெருந்தானம் (சிலப்.27-91), மாபெருங்கோயில் (மணி.22-11), மாபெருந் துன்பம் (மணி. 6-153), மாபெருந்தேவி (சீவக.1403) என இயல்பாகும்.

40. பவழம், பவளம் இவற்றில் எது பிழை?

*-க. மா. வீரணன்.*

தமிழ்ச் சிறப்பொலியாகிய ழகரத்தையுடைய பவழம் என்ற வடிவமே முதலில்தோன்றியதாகவும், தமிழர் சிலரின் ழ-ள ஒலிப்புக் காரண மாக அது பவளம் என்ற வடிவத்தைப் பெற்றதாகவும் எனக்குப்படுகிறது. தொல்காப்பியத்தில் பவழத்தைக் காண முடியவில்லை. சங்க இலக்கியங் களில் பவழம், பவளம் ஆகிய இரு வழக்குகளுமே சமமான அளவில் காணப் படுகின்றன. அவற்றில்,



பவழச் செப்பில் பொன்சொரிந் தன்ன
இகழுநர் இகழா இளநாள் அமையம் (அகம், 25-11)

பவழத்தன்ன மேனி, திகழொளி
(குறுந்தொகை,கடவுள்வாழ்த்து)

திகழொளி முத்தரும் பாகத் தைஇப்
பவழம் புனைந்த பகுதி சுமப்ப (கலித்தொகை 80-5)

என்ற இடங்களில் வரும் எதுகைகள், ழகரமே பவழத்துக்குச் சொந்தமான எழுத்து என்பதைத்தெளிவாக்குகின்றன.

பவழமும் பொன்னும் குவைஇய முத்தின்
திகழரும் பீன்றனபுன் னை
(யாப்பருங்கலம் 36 உரை மேற்கோள்)

என்பது மூன்றாம் எழுத்தொன்றெதுகை என விளக்குகிறது யாப்பருங்கலம். ழ-ள ஒலித்திரிவு காரணமாக ழ-ள ஆகிறதேயன்றி, ள-ழ ஆவதில்லை. வாழைப்பழத்தை வாளப்பளம் என்பார்களே ஒழியக் குளத்தைக் குழம் என்பதில்லை. காளியைக் காழி என்பதில்லை. எப்படியோ பவழம், பவளம் ஆகிய இரு வழக்குகளும் சான்றோர் செய்யுள்களில் இடம்பெற்ற பிறகு இவற்றில் ஒன்றைப் பிழை என்பது தகுதியாகாது. எனவே, பாவாணரும் இருவகையாக வழங்கும் சொற்களாகப் பின்வருபவற்றைக் கூறுகிறார்: இழிவு-இளிவு, குழறு-குளறு, சுழித்தார்-சுளித்தார், துழாய்-துளாய், பவழம்-பவளம்.

41. விடுதலை என்ற சொல்லைப்பற்றிய விளக்கம்தருக. விடு+தளை என்பது பொருளாக வருமா? அல்லது விடுதலை இடுகுறிப்பெயரா?விளக்கவேண்டுகிறேன்.

*-அ. இரேணுகாதேவி, குலமங்கலம்*

விடுதலை என்பது இடுகுறிப்பெயரன்று; காரணப்பெயர். தளையிலிருந்து விடுவிக்கப்பெறுவதுதான் விடுதலை என்றாலும், மடிநா ளகரத்தோடு கூடிய 'விடுதளை' என்ற வடிவம் எங்கும் இல்லை. விடுதலை என்ற சொல் தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் காணப்படவில்லை. எனவே, இது பிற்காலத்தில்

உருவான சொல்லே. விடுதலை என்ற பொருளில் வீடு என்ற சொல் வழங்கியிருக்கிறது. (அறம் பொருளின்பங்களை) 'விட்டதே பேரின்ப வீடு' என்பர் அவ்வையார். விடுதல் என்பது தொழிற் பெயர். அதில் விடு என்ற முதனிலையும், தல் என்ற இறுதி நிலையும் உள்ளன. பண்டு-பண்டை, நேற்று-நேற்றை, இன்று-இற்றை, ஏறு-ஏற்றை, பரண்-பரணை, ஒன்று-ஒற்றை, இரண்டு-இரட்டை, ஆண்டு-ஆட்டை, கால்-காலை, என்று சில சொற்களின் இறுதியில் ஐகாரச் சாரியை சேர்வதுபோல் விடுதல் - விடுதலை என்றாகியிருக்கிறது. 'விடுதலையும் கெடுதலையும்' என்கிறார் பாவேந்தர். 'விடுதலைப் பத்திரம்' என்பது உலக வழக்கு.

**42. தமிழ்நாட்டுப் பாடநூற்கழகத்தின் 10ஆம் வகுப்பு இலக்கண நூல் யாப்பிலக்கணப் பகுதியில் உள்ள பின்வரும் பாடல்கள் எந்த நூலுள் இடம் பெற்றுள்ளன? பொருள் யாது?** *- புலவர் து. இராசகோபால், திண்டுக்கல்*

பஃறொடை வெண்பா

**சேற்றுக்கால் நீலம் செருவென்ற வேந்தன்வேல்**
**கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்**
**தோற்றம், தொழில், வடிவு, தம்முள் தடுமாற்றம்**
**வேற்றுமை இன்றியே ஒத்தன மாவடர்**
**ஆற்றுக்கா லாட்டியர் கண்.**

நேரிசைச் சிந்தியல் வெண்பா

**அறிந்தானை ஏத்தி அறிவாங் கறிந்து**
**சிறந்தார்க்குச் செவ்வன் உரைப்ப - சிறந்தார்**
**சிறந்தமை யாராய்ந்து கொண்டு.**

இன்னிசைச் சிந்தியல் வெண்பா

**நறுநீல நெய்தலும் கொட்டியும் தீண்டிப்**
**பிற நாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி**
**அறநாட்டுப் பெண்டிர் அடி.**

-

இப்பாடல்கள் எந்த நூலிலும் இருப்பதாகத் தெரியவில்லை. யாப்பிலக்கண எடுத்துக்காட்டுக்கென்றே இயற்றிய பாடலாகவும் இருக்கலாம்.தொல்காப்பியம் செய்யுளியல், யாப்பருங்கலம், காரிகை ஆகியவற்றில் எடுத்துக்காட்டுகளாகவே வருகின்றன. பொருள்:



<u>சேற்றுக்கால் என்ற பாடல்:</u> சேற்றில் கால்கொண்டு நீலமலர் போன்ற தோற்றம், போர் வென்ற அரசனின் வேல் போன்று பார்வையால் கொல்லும் தொழில், கூற்றினை ஒத்த வலிய அம்பு போன்ற வடிவு, போரிடும் கெண்டை மீன் போன்ற தடுமாற்றம் ஆகியவற்றில் ஒத்துள்ளன மாவடுவை ஒத்த மருதநிலப் பெண்டிரின் கண்கள்.

<u>அறிந்தானை என்ற பாடல்:</u> எல்லாம் அறிந்த இறைவனை வணங்கி, அறிவு நூல்களை முறைப்படிக் கற்று, கேட்கத் தகுதியுடையோர்க்குச் செம்மையாகப் பாடஞ்சொல்வர் - அவர் சிறந்திருப்பதைத் தெரிந்துகொண்டு.

<u>நறுநீல என்ற பாடல் :</u> மணமிக்க நீல மலராகிய நெய்தலையும் கொட்டி மலரையும் தீண்டி, பாரியின் பறம்பு நாட்டுப் பெண்களின் கால்கள், பிற நாட்டுப் பெண்களின் தலையில் சென்று மணக்கும்.

**43. இருள், இருட்டு - ஒரே பொள் தருவன. கால், காற்று - ஒரே பொருள். இந்த அடிப்படையில் பகல், பகற்று ஆக வாய்ப்பு உண்டா? கும்மிருட்டு, காரிருள்- பொருள் வேறுபாடு உண்டா? பட்டப்பகல், நண்பகல் - இவற்றுக்குள்ள வேறுபாடு என்ன?** *- சு. சீனிவாசன், கல்பாக்கம்.*

இருள் + து = இருட்டு (இருளை உடையது), கால்+து =காற்று (வளியை உடையது) என்ற பொருளில், பெயர்களுடன் து என்னும் குறிப்புவினை விகுதி புணர்ந்து உருவான இருட்டு, காற்று என்ற சொற்கள் நீங்கள் சொல்வதுபோல் நாளடைவில் இருளுக்கும், காலுக்கும் பெயராகி வழங்குகின்றன. அதுபோலவே பகலை உடையது என்ற பொருளில் பகல்+து = பகற்று என்று ஆக வாய்ப்புண்டு. என்றும் உலகப் பந்தின் ஒருபக்கம் இருட்டு மற்றொரு பக்கம் பகற்று என்று சொல்வதைப் பிழை என்று சொல்ல முடியாது.

குண்டுகட்டு (குழிந்த கண்ணை உடையது), குறுந்தாட்டு (குறுகிய காலை உடையது) என்ற இலக்கிய வழக்குகள் உண்டு. ஆனால், பகற்று என்று சொல்லாட்சி இருப்பதாகத் தெரிவில்லை. ஆனால், இருள் - இருட்டு என்பது போல், பகல்-பகற்று என்றால் ஒரே பொருளுணர்ச்சி வாராது. கும்மிருட்டு, காரிருள் (கரிய இருள்) ஒரே நேரம். நண்பகல் என்பது நடுப்பகல். பகல் 10

மணியிலிருந்து 2 மணி வரையான சிறுபொழுது நண்பகல் எனப்படும். அவ்வாறே இரவு 10 மணிமுதல் 2 மணிவரையுள்ள சிறுபொழுது நள்ளிரவு எனப்படும்.

**44. ஆசான் என்பதற்குப் பன்மை வடிவம் யாது?**
*– சிலம்பூர்க்கிழான், கள்ளக்குறிச்சி*

ஆசான் என்பதற்குப் பன்மை வடிவம் ஆளப்பட்டிப்பதாகத் தெரியவில்லை. ஆசாள் என்று பெண்பால் வடிவம் இருப்பதால், தேவைப்படின் (ஓதுவான்–ஓதுவார், தட்டான்–தட்டார் என்பனபோல) ஆசார் என்று ஆள்வது மரபிற்கேற்றதே. அல்லது மாமன்மார், அண்ணன்மார் என்னும் இக்கால வழக்கையொட்டி ஆசான்மார் என்பதும் தவறாகாது.

**45. பெருமான் என்பதற்குப் பெண்பால் வடிவமும் யாது?** *– சிலம்பூர்க்கிழான், கள்ளக்குறிச்சி*

தொகுப்பு–தோப்பு ஆனாற்போல, பெருமகன்–பெருமான் என்றும், பெருமகள்–பெருமாள் என்றும் ஆகியிருக்கவேண்டும். பெருமாள் திருமாலுக்கு வழங்கவே, பெண்பாலுக்குப் பெருமாட்டி பிறந்திருக்கலாம். இவை மேலும் மருவிப் பிரான், பிராட்டி என்றாயின. பெருமான் என்பதற்குப் பெண்பாலாகப் பெருமாட்டியே வழக்கில் உள்ளது.

**46. ஏவுகணை, ஆடுகளம் – வினைத்தொகை அல்ல என்று கூறுகிறார் பெரும்புலவர் ப. அரங்கசாமி. உங்கள் கருத்துயாது?** *– சிலம்பூர்க்கிழான், கள்ளக்குறிச்சி*

கடையொருசீரும் விளங்காயாகி என்பது நூற்பாவில் கூறப்பட்ட இலக்கணம். கனிச்சீரும் வரும் என்பது உரையிற் கூறப்பட்ட இலக்கணம். அதைத்தான் கருத்திற் கொள்க என்றேன். இதுபற்றிய விளக்கத்தை அடுத்த வினாவுக்குரிய விடையிற் காண்க.

**47. ஏவுகணை, ஆடுகளம் – வினைத்தொகை அல்ல என்று கூறுகிறார் பெரும்புலவர் ப. அரங்கசாமி. உங்கள் கருத்துயாது?** *– சிலம்பூர்க்கிழான், கள்ளக்குறிச்சி*

ஏவுகணை, ஆடுகளம் என்பன வினைத்தொகை என்பதே என் கருத்து. அல்ல என்று கூறுகின்றவர்கள் தாம் அது எப்படி என்பதை விளக்க வேண்டும்.



**48. கட்டளைக் கலித்துறையின் இறுதிச்சீராக வீணர்களே என்றும் குறியாதுவாய் என்றும் கனிச்சீர்கள் வரலாமா?** *– புலவர் திருக்குறள் நாவை. சிவம், மணற்பாறை.*

கட்டளைக் கலித்துறைகளில் 5ஆம் சீராகக் கனிச்சீர் களும் சிறுபான்மை வரும். இவ்விலக்கணம் புலவர் குழந்தையின் யாப்பதிகாரத்தில் 73ஆம் நூற்பாவுரையில் கூறப்படுகிறது.

*தாழா திறைஞ்சிப் பணிந்துபன் னாளும் தலைநின்மினே*
(திருவிரட்டை மணிமாலை–9)

எனக் காரைக்காலம்மையார் பாடலிலும்,

*ஆட எடுத்திட்ட பாதமன் றோநம்மை ஆட்கொண்டதே*
(திருவிருத்தம், கோயில் – 10)

என அப்பர் பாடலிலும் இறுதியில் கனிச்சீர்கள் வருவது காண்க. கட்டளைக் கலித்துறையிலக்கணம் பற்றிய, இலக்கண நூல்களில் கூறப்பெறாத வேறு பல செய்திகளை எனது மொழிப் பார்வைகள் என்ற நூலிற் காணலாம்.

**49. வெண்பாவில் வீடுபேற்றை, கேட்கமாட்டேன் என்பன போன்ற விளாங்காய்ச் சீர் வரலாமா?**
*– புலவர் வீ. வில்வநாதன், வெங்காலூர்*

வெண்பாவில் என்ன? எவ்வகைப் பாவிலும் விளாங்காய்ச் சீர் வருவது விரும்பத்தக்கதன்று. அது எந்தப் பாவில் அமைந்தாலும் அப் பாவுக்குரிய ஓசையைக் கெடுத்துவிடும்.

***வாய்க்குவாய்த்த சொல்லிலான மாலைபோலச் செய்யுளாக்கித்***
***தாய்க்குநீங்கள் ஆற்றலாமோ தாழ்வு?***

இது விளாங்காய்ச் சீர்களால் ஆன வெண்பா. இதில் வெண்டளை, எதுகை மோனைகள் எல்லாம் குறைவின்றியே இருக்கின்றன. ஆனால் வெண்பாவுக்குரிய செப்பலோசை இருக் கிறதா? எனவே, தவிர்க்க முடியாத இடங்களில் விளாங்காய்ச் சீர்கள் அருகி வரலாம் என்க.

**50. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற அவ்வையாரின் தமிழ்ப்பாடலில், அதுவும் அந்தக் காலத்தி லேயே பிதா என்ற வடசொல் வந்து உள்ளதே!**
*– மா. தங்கராசு, மல்லிகுந்தம்*

இந்த அவ்வையார் 11ஆம் நூற்றாண்டினர் என்பர். கி.மு. வில் எழுந்த தொல்காப்பியத்திலேயே வடசொற்கள் கலந்துள்ளன.

*அன்றியும் தமிழ்நூற்கு அளவிலை அவற்றுள்*
*ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ?*

என்று சுவாமிநாத தேசிகர் கேட்பதை மறுக்க முடியவில்லை. அவ்வளவு பழங்காலத்திலேயே தமிழ்ப்பகைவர்கள் தமிழ்நாட்டிற் புகுந்து தமிழ்ப்பண்பாடுகளை அழிக்கத் தொடங்கிவிட்டார்கள். இன்றும் அது தொடர்ந்து நடந்து வருகிறது.

**51. தொலைபேசியில் உள்ள 0 எண்ணை எவ்வாறு அழைப்பது? பூச்சியம், சுன்னம், சுழி, பாழ் இவற்றுள் எதனைத் தழும்பேற்ற வேண்டும்? 9, 90, 900, 9000 ஆகிய எண்களைத் தொண்டு, தொன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்று அழைத்தால் என்ன?**

*– சு. சீனிவாசன், கல்பாக்கம்*

0 என்ற எண்ணுக்கு நான் சுழி என்ற பெயரையே பயன்படுத்துகிறேன். பூச்சியம், சுன்னம் என்பன வடசொற்கள். 9ஐத் தொண்டு என்றே பரிபாடல் முதலிய இலக்கியங்கள் குறிக்கின்றன. 90, 900, 9000 ஆகியவற்றை முறையே தொண்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்று குறிப்பது ஏற்புடையது தான். ஆனால் மரபு என்று ஒன்று இருக்கிறதே. அதை மீற முடியாமல் தானே தொல்காப்பியரும் ஒன்பது+பத்து என்ற சொற்களை நிறுத்தி எப்படி எப்படியோ தொண்ணூறு என்று புணர்ந்துக் காட்டி இடர்ப்படுகிறார்? இதை இராமலிங்க அடிகளார் பிழை என்கின்றார். தொல் என்பதை நிலைமொழியாக வைத்துப் புணர்த்தால் குழந்தைகளுக்கும் புரியும் என்கிறார்.

**52. ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, அகலகவி ஆகிய வற்றுக்குப் பொருளும் விளக்கமும் அளிக்க வேண்டுகிறேன்.** *– இரா. அருமருந்தலைவன், திருமருகல்.*

**ஆசுகவி :** கொடுத்த பொருளும், பாவகையும், அடியும், அணியும்அமைய விரைந்து பாடவல்ல பாவலன். காளமேகப் புலவரை ஆசுகவி என்பர்.

**மதுரகவி :** சொற்சுவை பொருட்சுவை செறிய, அணிகளமைய இனிமை யாகப் பாவல்ல பாவலன். ஆழ்வார் பன்னிருவரில் ஒருவர் மதுரகவி.



**சித்திரகவி :** எழுகூற்றிருக்கை முதலிய ஓவியங்களில் அமையச் செய்யுள் செய்ய வல்ல பாவலன்.

**வித்தாரகவி (அகலகவி) :** அகன்ற காப்பியங்களைப் பாடவல்ல பாவலன்.

இந்நான்கு வன்மைகளையும் ஒருங்கே பெற்றவர்களை, நாலுகவி அல்லது நாற்கவி என்பர். நாலுகவிப் பெருமாள் என்று திருமங்கையாழ்வாரும், நாற்கவிராச நம்பி என்று நம்பியகப்பொருள் ஆசிரியரும் கூறப்படுவர்.

**53. நுந்தை என்ற சொல்லிற் போலவே முந்தை என்ற சொல்லில் முதலில் வரும் உகரத்தைக் குற்றுகரம் எனலாகாதா?**

*–சக்கர. இராசாங்கம், நிரவி*

தந்நகரம் நா நுனியானது மேல்வரிசை முன்பற்களின் அடிப்பாகத்தில் பரந்து பொருந்தப் பிறப்பது (தொல். பிறப்பியல் 13). றன்னகரம் நா நுனி குவிந்து மேல் வாயைத் தொடப் பிறப்பது (தொல். பிறப்பியல் 14) பரந்து பொருந்த, குவிந்து தொட என்ற தொடர்களின் பொருள்வேறுபாடு நோக்கத்தக்கது. எனவே ந ன க்களுக்கிடையே ஒலிப்பில் நுட்பமான வேறுபாடு உண்டு. இதனைப் பந்தி–பன்றி என்ற சொற்களை மாறி மாறி ஒலித்துப்பார்த்து உணர லாம். ஆனால் இன்று எல்லாச் சொற்களிலும் நகர னகரங்கள் வேறுபாட்டுடன் ஒலிக்கப்பெறுவதில்லை. முந்நாள்–முன்னாள் என்ற இரண்டுக்கும் இன்று நம் ஒலிப்பில் வேறுபாடு இல்லாமற் போய் விட்டது. (ஒரே வகையாக ஒலிக்கும் இரு சொற்கள் எப்படி வெவ் வேறு பொருளைத் தரமுடியும்)? இன்று எழுதும் போது மட்டுமே இந்த வேறுபாட்டைக் காட்டுகிறோம்) மொழியியலார் தந்நகரத்தை நுனிநாப்பல்லொலி என்றும், றன்னகரத்தை நுனிநா நுனியண்ண வொலி என்றும் வேறுபடக் குறிப்பிடுவர்.

நுந்தை என்ற சொல்லின் முதல் இரண்டெழுத்துகளைப் பிரித்தெழுதினால் ந்+உ+ந் என்றாகும். அந்த நுட்பமான இரண்டு மெய்யொலிகளை விரைந்து ஒலிக்கும் போது இடையில் உள்ள உ ஒரு மாத்திரையிற் குறைந்து ஒலிக்கிறது போலும். முந்தை என்பதிலும் ம்+உ+ந் என இரண்டு மெய்க்கிடையில் தானே உ வருகிறது எனின், இதில் இரண்டு மெய்களும் நகரமாயில்லை. ஒன்று மகரம் எனவே நுந்தை என்பதிற்போல் முந்தை என்பதில் உள்ள உகரமும் குற்றுகரமாகும் எனக் கூற முடியாது.

பிற்காலத்தில் இந்த நுட்பமான ஒலி வேறுபாடு மறைந்துவிட்டதனால் நன்னூலார் இதனைக் கூறவில்லை போலும்.

**54. குற்றியலுகரம் மொழிக்கு இறுதியில் மட்டுமின்றி, மொழிக்கு முதலிலும் வரும் எனக் கொள்வது சரியாகுமா?**
*–சக்கர. இராசாங்கம், நிரவி*

குற்றியலுகரம் என்பது ஒலி குறைந்த இயல்பையுடைய உகரம். அது இறுதியில்தான் வர வேண்டும் என்ற கட்டாயமில்லை. குறுகுவதற்கு உரிய சூழ்நிலையில் எழுத்துகள் எங்கிருந்தாலும் குறுகும். குற்றியலிகரம் மொழிகளுக்கு இடையில் குறுகுவது. ஐகாரக்குறுக்கம் மொழிக்கு இடையிலும் கடையிலும் குறுவது. ஔகாரக் குறுக்கம் மொழிமுதலிற் குறுகுவது. ஆய்தக் குறுக்கம் மொழிகளுக்கு இடையில் குறுகுவது. மகரக் குறுக்கம் மொழிகளுக்கு இடையிலும் கடையிலும் குறுகுவது.

**55. எனக்கு என்ற சொல்லில் கு என்ற நான்காம் வேற்றுமை உருபில் உள்ள உகரத்தைக் குற்றியலுகரமாகக் கொள்ளலாமா?** *–சக்கர. இராசாங்கம், நிரவி*

கூடாது. அது முற்றுகரம். கு, அது என்ற உருபுகள் தனிச் சொற்கள். அவை பெயருடன்சேர்ந்து எனக்கு என்று வரும்போது வன்றொடர்க் குற்றுகர மென்றும், எனது என்று வரும்போது உயிர்த்தொடர்க் குற்றுகரமென்றும் கூறுவர் சிலர். அவ்விரண்டிலும் உள்ளவை ஒரு மாத்திரை ஒலிக்கும் குற்றிய லுகரங்கள் என்று முறையே நன்னூல் 242ஆம் நூற்பாவுரையும், 79 ஆம் நூற்பாவும் விளக்குகின்றன.

**56. பத்து, நன்று, சால்பு, அஃது, காடு, போயது–இவற்றுள் போயது என்பதை, போ+ய்+த்+உ எனப் பிரிக்க முடிகிறது. ஏனையவற்றை அவ்வாறு பிரிக்க முடியவில்லை யே.** *–சக்கர. இராசாங்கம், நிரவி*

*போயது என்பதை, போ+ய்+அ+து என்று பிரிக்க வேண்டும். மற்றச் சொற்களிலும் நன்று என்பதை நல்+று என்றும், சால்பு என்பதைச் சால்+பு என்றும் பிரிக்கலாம். பத்து, அஃது, காடு என்பவற்றைப் பிரிக்க முடியாது. அவை பகாச்சொற்கள்.*



**57. ஒலிப்போர்க் கேற்பக் குற்றுகர மாத்திரை கூடும் அல்லது குறையும் என்று கொள்ள முடியுமா?**
*–சக்கர. இராசாங்கம், நிரவி.*

முடியாது. யார் ஒலித்தாலும் அவ்வவற்றுக்குரிய அளவு மாத்திரையே எழுத்துகளை ஒலிக்கவேண்டும். எழுத்துகள் ஒலியளவிற் கூடுவதும் குறைவதும் இசைத்தமிழில் மட்டுமே காணக்கூடியவை.

**58, 'அக்குவேர் ஆணிவேராக', 'அக்குவேறு ஆணி வேறாக' – இவற்றில் எது சரி? அக்கு, ஆணி என்பவற்றின் வெளிப்படை, மறைபொருள்கள் யாவை?**
*–அம்பல் நா. தண்டபாணி*

'அக்கு வேறு ஆணி வேறு' என்பதுதான் சரி. இதன் பொருள் கூறுகூறாக என்பது அக்கு 'அக்காகப் பிரித்துக் காட்டினான்' என்பார்கள். இதற்கு ஒரு பொருளைச் சிறு சிறு பாகங்களாகப் பிரித்துக் காட்டினான் என்பது வெளிப்படைப் பொருள். ஒரு செய்தியை மிக மிக விரிவாக விளக்கி னான் என்பது குறிப்புப்பொருள். இதிலிருந்து அக்கு என்பது இங்கே இனிப் பிரிக்கமுடியாத சிறிய பகுதி என்று பொருள் தருகிறது. 'ஆள் தேள்', 'காவல் சேவல்', 'கடை கண்ணி', 'நகை நட்டு' என்ற தொடர்களில் தேள், சேவல், கண்ணி, நட்டு என்ற சொற்கள் எதுகை மோனை ஆகிய ஒலிநயத்துக்காக வருகின்றன. அதுபோல் பெரியதொரு பொருள் சிறப்பன்றி, 'அக்குவேறு ஆணி வேறு' என்பதில் அக்கு என்பதற்கு மோனையாக ஆணி வந்துள்ளது என்று கருதுகிறேன். உலக வழக்கில் மிகுதியாக உள்ள இத் தொடருக்கு இலக்கிய வழக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

**59. குரோட்டன் (croton) என்பதன் தமிழாக்கம் யாது?**–*அம்பல் நா. தண்டபாணி*

*'வண்ணச் செடி' எனலாம்.*

**60. 'வாச்சாங்குளி' என்ற சொல்லின் உண்மை வடிவம் யாது? ஏதேனும் இலக்கியத்தில் இச்சொல் இடம் பெற்றுள்ளதா?**–*அம்பல் நா. தண்டபாணி*

'வாச்சாங்குளி' என்பதற்கு வாய்ப்பேச்சால் ஏமாற்றுகிறவன் என்ற பொருள் பேச்சு வழக்கில் மட்டுமே உள்ளது. அதன் உண்மை வடிவம் தெரிய வில்லை. இலக்கிய வழக்கும் இருப்பதாகத் தெரியலில்லை.

**61. கெந்துதல் தூய தமிழ்ச்சொல்லா? இதன் பழையவடிவம் யாது?** *–அம்பல் நா. தண்டபாணி*

கெந்துதல் தமிழ்ச்சொல்லே. கிட்டிப்புள் விளையாட்டில் மரத்துண்டைத் துள்ளி யோடச் செய்தலைக் கெந்துதல் என்பர். தத்துதல், நெளிதல் ஆகிய பொருள்களிலும் வரும். கெந்து என்பதே கிட்டிப்புள் விளையாட்டைக் குறிக்கும்.

**62. பாவலர் பரிசு திட்டம்–4, பாடல் 7இல் 'வல்லாரை' என்றும், பாடல் 32இல் 'ஏதேதோ' என்றும், விளச்சீரின் இடத்தில் காய்ச்சீர்கள் வந்துள்ளன. இவ்வாறு வரலாமா?** *– வீ. வில்வநாதன், வெங்காளூர்*

வரலாம். அரிதாக இவ்வாறு வருவதுண்டு ஆனால் அக்காய்ச்சீர்கள் மங்காயாக இருக்க வேண்டும்; விளங்காயாக இருத்தல் கூடாது. சான்றாக இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் (கம்பராமாயணம், அகலிகை. 24) தோள் கண்டார் தோளே கண்டார் (கம்ப. உலாவியல்.10) மஞ்சொக்கும் அளக ஓதி (கம்ப. சூர்ப்ப. 70) சொல்லொக்கும் க'டிய வேக( கம்ப. தாடகை வதை.50) முதலான பாடல்களைக் காண்க. இவை எனது 'பாவலர் பண்ணை' 42ஆம் பக்கத்தில் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. இதற்கு,

**விளமது வருமென விதித்த வீட்டினில்**
**விளமது கொண்டிலாக் காயும் வேண்டுவர்**

என்பது விருத்தப்பாவியல்கூறும் இலக்கணம்.

**63. வாரிதி, மேகம், கோரம், கொடூரம், சோகம், பஞ்சம், கொஞ்சம், தரணி, காவியம், ஆணை–இவை தமிழ்ச் சொற்களா?** *– வீ. வில்வநாதன், வெங்காளூர்*

இவற்றில் கொடூரம், பஞ்சம், கொஞ்சம் தவிர மற்றவை தமிழ்ச் சொற்களல்ல. ஆணை என்பது கட்டளை என்ற பொருளில் தமிழன்று. சூள் என்ற பொருளில் தமிழ்ச்சொல் என்று தோன்றுகிறது.



**64. இசையின் பெயர் என்பதால் என் மகளுக்குப் 'பவதாரணி' என்று பெயர் வைத்துள்ளேன் என்கிறார் என் நண்பர் ஒருவர். பவதாரணி–தமிழ்ப்பெயர் தருக.**

'பவதாரணி' என்ற பெயரை எங்கோ கேட்டதாக நினைவு. இது ஒரு பண்ணின் பெயர்போலத் தோற்றமளிக்கிறது. ஆனால் தென்னாட்டிசையில் பவதாரணி என்று ஒரு பண் (இராகம்) இருப்பதாகத் தெரியவில்லை. அரி தாரிணி, கிரிதாரிணி, குசுமதாரிணி, பாவுகதாரிணி, பூலாதாரிணி, மாயா தாரிணி, வந்தனதாரிணி என்று பண்கள் உள்ளன. அவற்றில் உள்ளது தாரிணிதான்; தாரணி அன்று. பவம்–பிறப்பு. தாரணி–பெற்றவள். இப் பொருளில் பவதாரணியைப் பிறவியுடையாள் அல்லது பிறவியாள் என்று தமிழாக்கலாம்.

**65. 'கைப்பேசி' என்பது சரியா? தொலைபேசியும் கையில் வைத்துத் தானே பேசுகிறோம்? 'அலைபேசி' என்பதும் சரியில்லை. தமிழுலகெங்கும் ஒரே சொல்லைப் பயன்படுத்த வழிவகை காணவேண்டும். செல் என்பதை நாமும் அப்படியே 'செல்லிடப்பேசி' என வழங்கலாம் அல்லவா?** *–படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி*

Cell Phone என்பதைத் தமிழில் வழங்கவேண்டும் என்ற ஆர்வத்தில் தமிழ்ப்பற்றாளர் உருவாக்கிய நல்ல தமிழ்ச்சொற்களே 'செல்லிடப்பேசி', 'அலைபேசி', 'கைப்பேசி' என்பன. ஒரே சொல்லையே எங்கும் பயன்படுத்;த வேண்டும் என்பதை நானும் உடன்படுகிறேன். ஆனால் இதைத்தான் பயன்படுத்தவேண்டும் என்று யாரும் யாரையும் வற்புறுத்த முடியாது. உங்களுக்கு 'அலைபேசியும்' 'கைப்பேசி'யும் பிடிக்கவில்லையன்றோ? நான் 'கைப்பேசி'யை விரும்பக் காரணங்கள்:

1. Tutorial, Calender என்பனவற்றைத் 'தோற்றோரியல்', 'காலந்தேர்' என்று தமிழாக்குவதில், பழகிய ஆங்கில ஒலியை விடமுடியாத மனப்பான்மை தெரி கிறது. 'செல் பேசி', 'செல்லிடப்பேசி' என்ற தமிழாக்கங்களும் அப்படித் தான் எனக்குத் தோன்றுகின்றன. ஒரு புதிய பொருளுக்குப் பெயர் வேண்டின், அதன் ஆங்கிலப் பெயரை மொழிபெயர்ப்பது ஒருவகையில் ஆங்கில அடிமைத் தனம். தமிழ் மரபின்படி நாம் புதிய பெயர் வைக்கலாம். புகையிலையும் உருளைக்கிழங்கும் அப்படித்தான் வைக்கப்பட்டன.

2. தொலைபேசி என்பதற்கு எதுகையாக ‘அலைபேசி’ அமைந்திருப்பினும் உங்களுக்குப் போலவே எனக்கும் அது பொருத்தமாகப் படவில்லை.

3. மலேசியாவில் இதனை Hand Phone என்றே குறிப்பிடுகிறார்கள். அது போல் நாம் ‘கைப்பேசி’ எனலாம் என்று நினைத்தேன்.

4. கைக்கிளை, கைப்பிள்ளை, கைவேலை, கைக்குடை, கைக்குட்டை, கைத்தடி என்ற நம் தமிழ் மரபிற்கேற்றதாகவே கைப்பேசி உள்ளது. கை–சிறுமை.

புதிய ஆக்கச்சொற்களில் பெரும்பாலோர் விரும்பிப் பயன்படுத்துவதே நிலைக்கும். மற்றவை மறையும். இப்போது உங்களுக்குப் பிடித்ததை வழங்குங்கள். வலிவுள்ளது வாழும்.

**66. பெரியபுராணம் 130ஆம் பாடல் ஈற்றடியில் வரும் விடங்கப்பெருமான் என்பதற்கு உளி படாத கடவுள் என்று பொருள் கூறியிருந்தது. இதில் பிழை இருக்குமெனக் கருதுகிறேன். பொருத்தமான பொருள் கூறி விளக்குக.**
*–ஆ. கண்ணப்பன், விழுப்புரம்*

உளி படாத என்பது சரிதான். விடங்கன்–உளியினால் செதுக்கப்படாமல் தானே (இயற்கையாக) உருவான சிவலிங்கம். இதைச் சுயம்புலிங்கம் என்பர். இத்தகைய சிவலிங்கங்களைக் கொண்ட கோயில் உள்ள 1. திருவாரூர், 2. திருநாகைக்காரோணம், 3. திருநள்ளாறு, 4. திருமறைக்காடு, 5. திருக்காறாயல், 6. திருவாய்மூர், 7. திருக்குவளை ஆகிய ஏழு ஊர்களும் விடங்கத்தலங்கள் எனப்படும். பெரியபுராணத்தில் நீங்கள் குறிப்பிட்ட பாடலில் உள்ள வீதிவிடங்கப் பெருமான் திருவாரூரில் கோயில் கொண்ட திருவிழாத் திருமேனி (உற்சவ மூர்த்தி) யைக் குறிக்கும்.

**67. குருகூர்ச் சுப்பிரமணிய தீட்சிதர் இயற்றிய பிரயோக விவேகம் என்ற நூல் எதைப்பற்றிக் கூறுகிறது? விளக்கம் தருக.–** *புலவர் மு. முனிசாமி, வேலூர்–9*

17ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டு ஆழ்வார் திருநகரியில் தோன்றித் தமிழ் வடமொழிகளில் பெரும்புலமை பெற்று விளங்கிய சுப்பிரமணிய தீக்கிதர் இயற்றிய நூல்



பிரயோகவிவேகம். சொற்களை நெறியறிந்து ஆளும் அறிவு தரும் நூல் என்பது இதன் பொருள். இது வடமொழிச் சொல்லிலக் கணத்தோடு தமிழ்ச் சொல் லிலக்கணத்தை ஒப்பிட்டு எழுதிய நூல். வடமொழிக்கும் தமிழுக்கும் இலக்கணம் பெரும்பாலும் ஒன்றே. சிறிதளவு வேறுபாடு உண்டெனி னும் அது கோடியில் ஒரு கூறு கூட இல்லை என்னும் கருத்தினர் இவர். 51 கட்டளைக் கலித்துறைகளால் இயன்ற இந்நூலுக்கு, ஆசிரியரே உரை நூற்பாக்களும் எடுத்துக்காட்டுகளும் வரைந்து, உரையும் எழுதியுள்ளார். தமிழறிஞர்கள் சற்றுப் பொறுமையுடன் இதில் உள்ள வடமொழி இலக்கணக் கலைச்சொற்களைப் புரிந்துகொண்டு படித்தால் இலக்கண நுட்பங்கள் பலவற்றைத் தெரிந்துகொள்ளலாம்

**68. பாடாண்திணை–இயன்மொழி வாழ்த்து இவ்விரண்டுக்கு முள்ள வேறுபாடென்ன?**
*– புலவர் மு. முனிசாமி, வேலூர்–9.*

2. பாடாண்திணை என்பது புறப்பொருள் திணைகள் பன்னிரண்டனுள் ஒன்று. பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு என்பது இதன் பொருள். ஒருவனது புகழ், வலிமை, கொடை, இரக்கம் முதலியவற்றை ஆராய்ந்து கூறுதல். இயன்மொழி வாழ்த்து என்பது பாடாண் திணையின் நாற்பத்தெட்டுத் துறைகளுள் ஒன்று. அரசரதுஇயல்பைப் புகழ்ந்து மொழிவதும், கொடை முதலியவற்றில் நும் முன்னோர் இத்தன்மையர், நீயும் அவ்வாறு ஆகுக@ என்று அரசரை உயர்த்துச் செல்லுவது. இரண்டுமே ஆண்மகனது பண்புகளைப் பற்றியன எனினும், திணை அனைவர்க்கும் பொதுவானது. துறை அரசரைப்பற்றியது எனலாம். இயல்பைப் புகழ்ந்து மொழிவதும், கொடை முதலியவற்றில் நும் முன்னோர் இத்தன்மையர், நீயும் அவ்வாறு ஆகுக@ என்று அரசரை உயர்த்துச் செல்லுவது. இரண்டுமே ஆண்மகனது பண்புகளைப் பற்றியன எனினும், திணை அனைவர்க்கும் பொதுவானது. துறை அரசரைப்பற்றியது எனலாம்.

**69.** இந்தக் கல்வியாண்டுப் பன்னிரண்டாம் வகுப்புத் தமிழ்ப்பாடநூலில் 87 ஆம் பக்கத்தில் குமரகுரபரர் இயற்றிய மதுரைக் கலம்பகத்திலிருந்து மேகவிடு தூது என்று தலைப்புடன் ஒரு பாடல் இடம் பெற்றுள்ளது. அது எவ்வகைப் பாடல் என்றுகூடக் குறிப்புரையில் இல்லை. ஆனால் மூல நூலில் ‘எழுசீர்ச் சந்தவிருத்தம்’ எனக் குறிக்கப்பட் டுள்ளது. எழுசீர்ச் சந்தவிருத்தம் கம்பன் பாடலில் ஐந்து வகையாக

வருவனவற்றைத் தங்கள் 'கம்பன் பாடிய வண்ணங்கள்' என்ற நூலில் குறித்துள்ளீர். அந்த ஐந்து வகையிலும் இந்தப் பாடல் பொருந்தவில்லை. கீழே பாடலைக் குறித்துள்ளேன்.

எழுசீர்ச் சந்த விருத்தம்

*ஏமவெற் பென்றுகயி வாயவெற் பென்றுமல*
*யாசலத் தென்று மு(றை)வார்*
*கோமகட் கன்ப(ர்)மது ரேச(ர்)முச் சங்க(ம்)வள(ர்)*
*கூடலிற் சென்று புகலீ(ர்)*
*தாமரைக் கண்டுயிலு மாலெனச் சந்தமலி*
*சாரலிற் றுஞ்சு முகி(ல்)கா(ள்)*
*மாமதிப் பிஞ்சுமி(ரை) தோர்குயிற் குஞ்சுமுயி(ர்)*
*வாய்மடுத் துண்டொ ழிவதே*

சந்தம்: தானனத் தந்ததன தானனத் தந்ததன
தானனத் தந்த தனனா

( ) அலகு பெறாதவை அல்லது குறைவான மாத்திரை பெறுபவை . இப்பாடலில் நான்கு அடிகளிலும் முதல் ஐந்து சீர்கள் 5 மாத்திரை யும், ஆறாவது சீர் 3 மாத்திரையும், ஏழாவது சீர் 4 மாத்திரையும் பெற்று வந்துள்ளன. இந்த எழுசீர்ச் சந்த விருத்தப்பாடலுக்கு விருத்தப்பாவியல் கூறும் இலக்கணம் தேவை. இப்பாடல் ஆசிரிய விருத்தம் என்று நான் கருதுவது சரியா எனவும் அருள்கூர்ந்து எழுதுமாறு வேண்டுகிறேன்.

*— ஆ. புருடோத்தமன், முதுகலைத் தமிழாசிரியர், திண்டிவனம்.*

நீங்கள் குறிப்பிட்ட பாடலுக்கு மூலநூலில் 'எழுசீர்ச் சந்த விருத்தம்' என்று யாப்புக் குறிப்பு இருப்பதுகூடச் சரியில்லை. அது 'அறுசீர் ஆசிரிய வண்ண விருத்தம்'. நீங்கள் குறித்தபடி 'தானனத் தந்ததன' முதலிய சந்தக்குழிப்புகள் உடையவற்றை வண்ணப் பாடல் எனல் வேண்டும். அப்பாடலின் சந்தக் குழிப்பையும்,

தானனத் தந்ததன தானனத் தந்ததன
தானனத் தந்ததனனா

என்றே எழுதவேண்டும். ஆறாம் சீரை இருசீராக்கியிருப்பது சரியன்று, அப்பாடலின் ஆறாம் சீர்களை, தென்றுமுறைவார், சென்றுபுகலீர், துஞ்சுமுகி(ல்)காள், துண்டொழிவதே என்றே எழுதவேண்டும்.சில எழுத்துகள் அலகுபெறா என்பதே சரி;



குறைவான மாத்திரை பெறுவன என்பது சரியில்லை. நீங்கள் அடைப்புக்குள் இட்டவற்றுள் (றை), (ரை) என்பன அலகு பெறுவன. மற்றவை அலகு பெறாதவையே. புகலீ(ர்), முகி(ல்)கா(ள்) என அடியிறுதிகளில் வரும் ஒற்றுகள் அலகு பெறலாம்; எனவே அவற்றுக்கு அடைப்புக்குறியிட வேண்டியதில்லை.

விருத்தப்பாவியல் நூல் சந்தப்பாக்களுக்கே இலக்கணம் கூறுகிறது; வண்ணப்பாடலுக்குத் தண்டபாணி அடிகளாரின் 'வண்ணத்தியல்பு' என்ற நூலே இலக்கணம் கூறும். வண்ணப் பாடல்களின் சீர்களை மாத்திரையால் அளப்பதில்லை. சந்த, வண்ணப்பாடல்களின் இலக்கணங்கள் பற்றி வினவும்அளவுக்கு உங்களுக்கு அவற்றில் ஆர்வம் இருப்பதைப் பாராட்டுகிறேன். அப்பாடலை ஆசிரிய விருத்தம் என்று நீங்கள் கருதுவது சரிதான். ஆனால் அது ஆசிரியச் **சந்த** விருத்தமன்று ; **வண்ண** விருத்தம்.

**70. சென்னையிலும் அதன் சுற்றுப்புற ஊர்களிலும் உள்ள சில குடும்பங் களில் தந்தையின் அம்மா, தாயின் அம்மா ஆகியோரை 'ஆயா' என்று அழைக்கின்றனர். மற்றவர்கள் 'பாட்டி' என்று வழங்குகின்றனர். இதில் 'ஆயா' என்பது நாகரிக மற்ற சொல் என்றும், 'பாட்டி' என்பதே நாகரிகமான சொல் என்றும் படித்தவர்கள் கருதுகின்றனர். 'ஆயா' என்பது பிழையான சொல்லா? அது தமிழ்ச்சொல்தானா? அதற்கு வேர்ச்சொல்லை ஆய்ந்து எனது ஐயப் பாட்டைக் களைந்திடுமாறு வேண்டுகின்றேன்.**

*— மா. ப. கிருட்டினன், சென்னை—30.*

பெற்றோரின் தாயாரை ஆயா என்று அழைக்கும் வழக்கம் தென்னார்க்காடு, புதுவை ஆகிய பகுதிகளிலும் உண்டு. பாட்டி என்றும் சிலர் வழங்குகின்றனர். இவையிரண்டும் பிழையற்ற தமிழ்ச்சொற்களே. இவற்றில் எதுவும் நாகரிகமற்ற சொல் இல்லை. சோறு என்பது நாகரிகம் அன்று ; சாதம் அல்லது ரைஸ் என்பதே நாகரிகம் என்பது போன்ற மனப்பான்மையே இது. இன்று பாட்டி என்பதை நாகரிகம் என்போரும் குறைந்து, 'Grandma' என்போரே மிகுந்து வருகின்றனர்.

ஆய் என்பது அன்னை என்று பொருள் தரும் மிகத் தொன்மையான சொல். திராவிட மொழிகள் அனைத்திலும் காணப்படுவது. அதுவே என்+ஆய்=யாய், நின்+ஆய்=ஞாய், தன்+ஆய்=தாய் என மூன்றிடங்களுக்கும் வேறுபட உருவாகிப் பின்னர்த் தாய் என்பதே மூவிடங்களுக்கும் பொதுவான சொல்லாகி வழங்கி வருகிறது.

ஆய் என்பதிலிருந்து ஆய்ச்சி (ஆச்சி–நகரத்தார் வழக்கு), தாய் (தாய்ச்சி–பிள்ளைத் தாய்ச்சி) ஆயாள், ஆயா என்ற வடிவங்கள் வந்தன. ஆயாள், ஆயா என்பன பேச்சு வழக்கில் பெற்றோரின் தாய்க்கும் வந்தன.

பாட்டி என்பது பன்றி, நாய், நரி ஆகிய விலஙுகுகளின் பெண்பாற் பெயர் என்கிறது தொல்காப்பியம் (மரபியல் 66.67). பாட்டி என்பது (பாணனுக்குப் பெண்பாலாகப்) பாடல்மகள் என்ற பொருளில் அகநானூறு (196–4) மதுரைக்காஞ்சி (749) ஆகிய சங்க நூல்களில் வருகிறது. காலத்தால் பிற்பட்ட பரிபாடலில் மட்டும் பாட்டி என்பது கிழவி என்ற பொருளில்(10–37) வருகிறது.

ஆயா என்பதே முற்பட்ட வழக்கு. பாட்டி என்பது பெற்றோரின் தாயின் பெயரானது பிற்பட்ட வழக்கே. இன்று ஆயா என்பது குழந்தைகளைப் பேணும் பெண்ணுக்கும் மருத்துவமனைப் பெண் ஊழியர்க்கும்கூடப் பெயராக வழங்குகிறது.

**71. 15–6–2005 தெளிதமிழ் 2ஆம் பக்கத்தில், 'சில அறிஞர்களுக்கு' என்று எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு வரலாமா?** – *புலவர் சி. வெற்றிவேந்தன், பாகூர்.*

சில என்னும் அஃறிணைப் பன்மைப்பெயர் அறிஞர்கள் என்னும் உயர்திணைப்பெயர் வரலாமா? என்று கேட்கிறீர்கள் என்று நினைக்கிறேன். தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் இதற்கு இடமில்லை. ஆனால் தொல்காப்பிய உரையில் இளம்பூரணர், 'பலர் சான்றார்', 'பலர் அரைசர்' என்பன 'பலசான்றார்', 'பலவரைசர்' என்று ரகரமெய் கெட்டு வரும் புணர்ச்சிகளைக் காட்டாகத் தருகிறார் (தொகை மரபு–154). இவையே பிற்காலத்தில், 'சில கலிங்கர்' (கலிங்கத்துப்பரணி–போர் பாடியது–470), 'சில பெரியோர்கள்'(உ. வே. சா. என் சரித்திரம், பக்.18), 'சில தான் தோன்றிகள் எழுதுகின்றனர்'(பாவாணர், கட்டுரை வரைவியல், பக்.31) எனச் சான்றோர் வழக்கில் வந்துள்ளன. இன்றைய தமிழில் இந்நிலை இயல்பாகிவிட்டது. இனி எழுதப்படும் இலக்கணங்களில் இது இடம்பெறக்கூடும்.

*72. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்*
*அவையல்ல நல்ல மரங்கள் – சவைநடுவே*
*நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய*
*மாட்டா தவன்நன் மரம்*



**இதில், நீட்டோலை' என்பதன் பொருளையும், நன்மரம் என்பவன் வாசியாநின்றானா? குறிப்பறிய மாட்டாதவனா? என்பதற்கான விளக்கத்தையும், 'வாசியா நின்றான்' என்பது வாசிக்காமல் நிற்பவனைக்குறிக்கிறதா? வாசி+ஆநின்று +ஆன் எனப் பிரிக்கப்பெற்று வாசிக்கின்றவனைக் குறிக்கிறதா?** – *வெண்பாவூர்ச் செ. சுந்தரம்.*

'நீட்டோலை'–(படித்துக் காட்டுவதற்காகத்) தன்னிடத்து நீட்டப் படும் ஓலை. 'வாசியாநின்றான்'–வாசிக்காமல் நின்றவன். குறிப்பறியமாட்டாதவன்–வெளிப்படையாகச் சொல்லப்படாததை நுண்ணுணர்வால் உயத்துணரமாட்டாதவன். 'நன்மரம்.–நல்ல மரங்களைப்போன்றவர்கள். காட்டில் வளர்ந்து நிற்கும் மரங்களைவிட, தனது எழுத்தறிவு இன்மை பலர்முன் வெளிப்பட்டதால் நாணி நிற்பவனும், குறிப்பாக ஒன்றை அறிந்துகொள்ளும் திறனற்றவனும் ஆகிய இவர்கள் மரங்களைப்போன்றவர்கள். காட்டு மரங்கள் நடவா. பேசா. மக்கள் வடிவில் உள்ள இந்த மரங்கள் நடக்கும் பேசும். அதனால் இவை நல்ல மரங்கள் என்பது இதன் கருத்தாக இருக்கலாம்.

1) வாசியாநின்றான்=வாசிக்கின்றவன்–நிகழ்கால வினையாலணையும்பெயர். இதனை வாசி+ஆநின்று+ஆன் எனப் பிரிக்க வேண்டும். இந்தப் பொருள் கொண்டால், அவனை மரம் என்பது பொருந்தாது.

2) வாசியா நின்றான்=வாசிக்காமல் நின்றான்–ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். (வாசியாது என்பதில் து என்ற ஈறு கெட்டது). இந்தப் பொருளே பொருத்தமாகத் தோன்றுகிறது. மரம் என்ற இறுதிச்சொல் மரங்கள் என்ற பன்மைப்பொருளில் வந்த பால்பகாஅஃறிணைப்பெயர்.

**73. 13–7–2005 பொதிகைத் தொலைக்காட்சியில், முத்து. இராமமூர்த்தி என்பவர் தொல்காப்பியத்துக்கு முன்பே எழுதப்பெற்ற பாடல்கள் புறநானூற்றில் உண்டு என்றார். இது எப்படி?–** *வி. தமிழ்ப்பித்தன், நன்மங்கலம்.*

தொல்காப்பியம் இடைச்சங்க நூல். இடைச்சங்ககாலம் கி. மு. 1500 முதல் கி. மு. 400 வரை என்பர் பாவாணர். புறநானூறு கடைச்சங்க காலத்தில் தொகுக்கப்பட்டது. கடைச்சங்ககாலம் கி. மு. 400முதல் கி. பி. 400 வரை என்பர். இடைச்சங்க காலத்துப் பாடல் புறநானூற்றில் தொகுக்கப்பட வாய்ப்புண்டு. ஆனால், தொல்காப்பியத்துக்கு முந்திய பாடல்கள் அதில் உண்டு என்றால் அதற்குச் சான்று காட்டவேண்டும்.

**74.** அன்புடையீர் என்ற சொல்லில் உள்ள உடையீர் என்பது அன்பு உடைந்தவர்–அன்பு அற்றவர்–என்றும் பொருள்படுமா? அதைப் பிரித்து இலக்கணம் கூற வேண்டுகிறேன் *–செ. முருகன், மூ. குச்சிப்பாளையம்.*

அன்புடையீர்=அன்பு+உடையீர். உடையீர்=உடை+ய்+ஈர். உடை–முதனிலை, ஈர்–இறுதிநிலை, ய்–உடம்படுமெய். உடை என்பதற்கு உடைத்தற்பொருளும் உண்டு. அந்தப்பொருளில் அச்சொல் அன்பை உடையுங்கள் என்றும், அன்பை உடைக்கமாட்டீர்கள் என்றும் இருவகையாகப் பொருள்படும். ஆனால் அற்றவர் என்று பொருள்படாது.

அன்புடையீர்= 1) அன்பை உடையவரே(உடைமைப்பொருள்)
2) அன்பை உடைப்பீராக !(உடைத்தற்பொருள்)
3) அன்பை உடைக்கமாட்டீர்(உடைத்தற்பொருள்)

**75.** *தலைவலி வந்தால் தயவுடன் கேளப்பா*
*தலைவலி மருந்து மலைதனில் இருக்கும் கல்லை*
*மாண்புடன் பெயர்த்து வந்து*
*தலைதனில் போட்டால் தலைவலி தீரும்*

இது முறையான பாடலா? இதன் உட்பொருள் யாது?
*–வீ. வில்வநாதன், வெங்காலூர்.*

சித்தமருத்துவத்தில் மருந்துகளைக் குறிப்பாகக் கூறுவதுண்டு. முசு என்பது குரங்கு. அதனால், முசுமுசுக்கை என்பதை 'இரு குரங்கின் கை' என்பார்கள். இந்த மருந்தில் நோய் தீராவிட்டால் புத்தகத்தைச் சுட்டுப்போடு என்பார்கள். இதற்குப் பொருள், மருத்துவ நூலைக் கொளுத்திப்போடு என்பதன்று. இங்கே 'புத்தகம்' என்பதற்கு மயிலிறகு என்பது பொருள்.இதில் தீராவிட்டால் மயிலிறகைச் சுட்டுப் பற்றுப்போடு நோய் தீர்ந்துவிடும் என்பதாகும். நீங்கள் குறித்ததன் குறிப்புப்பொருள் என் சிற்றறிவுக்கு எட்டவில்லை. தெரிந்தவர்கள் அன்புகூர்ந்து தெளிதமிழுக்கு எழுதுக.



**76. மலேசிய நாட்டில் சிலர்பெயருக்கு முன்னர் 'டத்தோ' என்று குறிப்பிடப்படுகிறது. அதன் விளக்கம் யாது?**–*அம்பல் நா. தண்டபாணி*

'டத்தோ' என்பது மலேசிய நாட்டு அரசு சிறந்த குடிமக்களுக்கு வழங்கும் சிறப்புப்பட்டம். டத்தோ, டத்தோசிறீ, டான்சிறீ, பி. பி. என்,தூன் ஆகிய பட்டங்களை வழங்குவது அந்நாட்டு மரபு என்கிறார், கவிக்கொண்டல் இதழாசிரியர் புலவர் மா. செங்குட்டுவன்.

**77.'அல்லல் நோய்' (குறள்1301) என்பது 'அல்லனோய்' என்று புணருமா?'அதனினூஉங்'(644), 'செறாஅரெனச்'(1292) என்ற அளபெடைச் சொற்களும் கருவிளம் என்ற ஈரசைச் சீர்களாகுமா? 'தொழாஅர்' என்பது ஓரசையா? ஈரசையா?– அருள்கூர்ந்து தெளிவுறுத்துக.**
*–இரத்தின. சின்னசாமி, புதுவை–8*

அல்லல்+நோய்=அல்லனோய் ஆகும். அதனினூஉங், செறாஅரென ஆகிய இரண்டையும் முறையே 'அத/னினூங்', 'செறா/ரெனச்' என்றே கொண்டு கருவிளம் எனல் வேண்டும். இவற்றில் அளபெடை எழுத்துகள் அலகு பெறவில்லை. ஆனால் 'தொழா/அர்' என்பதில் அ என்ற அளபெடை எழுத்து நேரசையாக அலகு பெற்றுள்ளது. எனவே தொழாஅர் என்பது புளிமா என்னும் ஈரசைச்சீரே. அளபெடையெழுத்துகள் தேவையில்லாவிட்டால் அலகு பெறுவதில்லை.

***78.*** **மாந்தன் என்னும் சொல் இலக்கிய வழக்கில் எப்பொழுது வந்தது? அதற்கு முன் அது எவ்வாறு வழங்கப்பட்டது?**–*புலவர் ச. மு. விமலானந்தன், திருப்பத்தூர்.*

மாந்தர் என்ற பன்மைப்பெயர் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்தே வழங்கிவருகிறது. ('மாந்தர் மக்கள் என்னும் பெயரும்'–தொல். பெயரியல்,9, 'மரஞ்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்'–நற்றிணை,226). ஆனால், 'மாந்தன்' என்ற ஒருமைப்பெயர் 9ஆம்நூற்றாண்டிலிருந்து இலக்கிய வழக்கில் இருப்பதாகத் தெரிகிறது. 'அறைக்கண் மாந்தன்' (தூதுச்சருக்கம்,40) என்ற ஆட்சி சூளாமணியில் காணப்படுகிறது. அதற்கு முன் மாந்தன் என்ற பொருளில் 'மகன்' என்று வழங்கப்பட்டது. 'மகனே

தோழி'(அகநானூறு) 'மகன் எனல் (குறள்) என வருவன காண்க. 'முறைமை சுட்டா மகன்' என்று தொல்காப்பியர் (பெயரியல், 9) கூறுவது இதனையே.

**79.** குறுந்தாட்டு=குறுமை+தாள்+து எனப் பிரிக்கப்பட்டுள்ளது. அதனைக் குறுமை+தாள்+து எனப்பிரித்தால் வரும் தவற்றை அறிய விழைகிறேன்.

*—புலவர் பெ. சயராமன், கள்ளக்குறிச்சி*

தாட்டு (தாளை உடையது) என்பதைத் தாள்+து என்று பிரிக்காமல், தாள்+டு என்று தவறாகப் பிரித்ததனால் வந்ததே டு என்னும் ஈறு என்பது மொழிநூலார் கருத்து. நானும் இதனை உடன்படுகிறேன். ஆனால் அது நமது இலக்கணமரபிற்கு ஏற்றதாயில்லை. அவ்வாறு பிரிப்பதால் தொல்காப்பியம் கிளவி.8, வினை.20 ஆகிய நூற்பாக்களில் டுகரவீறு கூறுவதும், நன்னூலில் டுக் குறிப்பினாகும் (328) என்று கூறுவதும் பொருளின்றிப்போகும். உண்டான் என்பதை உண்+த்+ஆன் என்றும் பிரிக்கலாம். ஆனால் இலக்கண மரபின்படி நாம் உண்+ட்+ஆன் என்றே பிரிக்கிறோம். அது போல் தாள்+டு என்றும், கண்+டு என்றும் பிரிப்பதில் தவறில்லை.

**80.** இன்று கருநாடக இசை என்று சொல்லும் இசையில் உள்ள மோகனம், கல்யாணி, கரகரப்பிரியா, பைரவி, ஆனந்தபைரவி இராகங்களின் தனித்தமிழ்ப் பெயர்களைக் கூறுவீர்களா?

*—இரா. கு. அரங்கசாமி, தங்கவயல், கருநாடகம்.*

இன்று தமிழிசை என்று சொல்லப்படுவது வரலாற்றுக் கெட்டாத காலத்திலேயே தமிழன் கண்ட தமிழிசையே. தென்னாடு ஒரு காலத்தில் கருநாடகம் என்று அழைக்கப்பட் டது. அதனால் தென்னாடு முழுவதிலும் இருந்த தமிழிசையும் கருநாடகஇசை என்று அழைக்கப்பட்டது. அதில் இருந்த எல்லாக் கலைச்சொற்களையும் தமிழ்ப் பகைவர்கள் திட்டமிட்டு வடமொழிமயமாக்கினர். நீங்கள் குறிப்பிடும் பண்களின் பழைய தனித்தமிழ்ப் பெயர்கள் வருமாறு

மோகனம் — முல்லைப்பாணி
கல்யாணி — மேற்செம்பாலை
கரகரப்பிரியா — கோடிப்பாலை
பைரவி — படுமலைப்பாலை
ஆனந்தபைரவி — சாளரபாணி.



**81.** வெண்பா நாள், மலர், காசு, பிறப்பு என்று முடியவேண்டுமென்று இலக்கணமிருக்கக் காளமேகப் புலவர்,

*செருப்புக்கு வீரரைச் சென்றழிக்கும் வேலன்*
*பொருப்புக்கு நாயகரைப் புல்ல—மருப்புக்குத்*
*தண்டேன் பொழிந்ததிருத் தாமரைமேல் வீற்றிருக்கும்*
*வண்டே விளக்குமா றே*

என்று ஒரே எழுத்தில் முடித்துள்ளது குறித்துக் கூறுங்கள்.

*—புலவர் நா. ஞானசேகரன், திருலோக்கி.*

சொன்ன கட்டளை அமையும்படி உடனே பாப்புனைய வல்லவனை ஆசுகவி என்பர். ஆசுகவியாகிய காளமேகத் திடம் யாரோ கிண்டலுக்காகச் செருப்பு என்று தொடங்கி விளக்குமாறு என்று முடியும்படி ஒரு வெண்பாப் பாடுக என்று கேட்டிருப்பார்கள்போல் தெரிகிறது. அப்போது பாடிய பாடல் இது. செருப் புக்கு என்பது போர்க்களத்தில் புகுந்து என்றும், விளக்கும் ஆறே என்பது வழியை விளங்கச் சொல்லுக என்றும் பொருள்படுமாறு திறம்படப் பாடிய அருமையைச் சுவைக்கவேண்டும். இதில் இறுதியில் வரும் றே என்பது நாள் என்ற வாய்பாட்டில் அடங்கும்.

**82.** பெரியபுராணம், திருநாவுக்கரசுசுவாமிகள் புராணம் 263ஆம் பாடலில், ஏய்ந்த அன்பினால் இறைஞ்சி இசைவண் தமிழ்கள் புனைந்து— இதில் தமிழ்கள் என்பதன் பொருள் என்ன? *—புலவர் மு. முனிசாமி, வேலூர்*

தமிழ் என்பதற்குத் தேவாரம் என்று ஒரு பொருள் உண்டு. தமிழ்கள்=தேவாரப்பாடல்கள். (தே+வாரம்= தெய்வத் தைக்குறித்து வாரநடையில் பாடப்பெற்ற இசைத் தமிழ்ப் பாடல்கள்). தமிழ்கள் புனைந்து என்பது இங்கே தேவாரப் பாடல்களைப் பாடி என்ற பொருளில் வருகிறது. தமிழ் என்பது தேவாரப்பாடல் என்ற பொருளில் தேவாரத்தில் பலவிடங்க ளில் வருகிறது. சான்று ஞானசம்பந்தன் ஒண்டமிழ்களின் (தென்திருமுல்லைவாயில்—11),பந்தனுரை செந்தமிழ்கள் (திருப்புகலி—11)

**83.** *கானந்தரு கிழங்கும்பலகனியுங்கனிமொழியார்*
*ஏனந்தனி லேதந்திட வினிதாவிருந் தயரும்*
(புலவர் குழந்தை, இராவண காவியம், தமிழகப்படலம்—55)

இதில் அயரும் என்ற செய்யுமென் முற்றுப் பல்லோர் படர்க்கையில் வந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பலர்பால்

வினைமுற்றாகச் செய்யுமென்முற்று வருமா? இது தொல்காப்பிய இலக்கணத்துக்கு ஏற்புடையதா?

*—கு. பகுத்தறிவு, கட்டிபாளையம்.*

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா
—தொல். சொல்.227

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே —நன்.227

என்பதால், தொல்காப்பியருக்கு, ஏன்? நன்னூலார்க்கும்கூட அஃது ஏற்புடைய தன்று. இன்றைய பேச்சுவழக்கிலுங்கூட அவ்வாறு வருவதில்லை. சிறந்த இலக்கணப் புலவராகிய புலவர் குழந்தை அப்படிக் குறிப்பிட்டிருக்கமாட்டார். மேற்கண்டது சந்தப்பாடல். அதில் முதல் மூன்று சீர்களும் 6 மாத்திரை பெற்றிருக்கவேண்டும். ஆனால், கிழங்கும்பல, இனிதாவிருந் ஆகியன 7 மாத்திரைச் சீர்களாக உள்ளன. இதிலும் ஏதோ பிறழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

**84. வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள் அறுவகை இலக்கணம் என்னும் ஒரு நூல் படைத்துள்ளார். ஆறாம் வகை இலக்கணமாக அடிகள் எதனைக் குறிப்பிடுகிறார்?**

*—நா. தண்டபாணி, அம்பல்*

எழுத்துச் சொற் பொருள் யாப்பணி என்னும் ஐந்தோடு ஆறாம் இலக்கணமாக அடிகளார் கூறுவது புலமை இலக்கணம்.

*ஐந்தே இலக்கணமென் றாயிரம்பேர் கூறிடினும்*
*செந்தேன்என் றாறுவிதம் செப்புவிப்ப(து)—எந்தேகத்(து)*
*உள்ளும் புறம்பும் ஒளிரும் ஒருபொருள்*
*விள்ளும் குருபாத மே*

என்பது நூலின் பாயிரம். தவறு, மரபு, செயல்வகை, நடுநிலை, எதிர்நிலை, அருள்நிலை என்று பாகுபடுத்திப் புலமையிலக்கணம் கூறுகின்றார். தமிழ் தெரியாத தெய்வம் ஒன்று உண்டு என்றால் அது பேய்! என்றும், தமிழைவிட உயர்ந்தமொழி உலகில் உண்டாமென் றால், வெகுண்டெழாதவன் வெறும் புலவன்தான் என்றும், புலவர்களில் காக்கைகள்போல் கூடி வாழ்வாரும் உளர். நாய்களைப்போல் பகைத்து வாழ்வாரும் உளர் என்பனபோன்ற கருத்துகளைக் கூறுகிறார். தமிழ்ப் புலவர்கள் கட்டாயம் பயிலவேண்டிய நூல்.



**85.** வாரா என்னும் சொல்லுக்கு இலக்கணக்குறிப்பு வரையுங்கால் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பதற்குப் பகரமாக எழுவாய் கெட்ட வினைமுற்றென்று விடையிறுத்தால் பிழையாகுமா? அருள்கூர்ந்து விளக்குக

*—வீ. வில்வநாதன், வெங்காலூர்*

பெயரெச்சத்தை எப்படி வினைமுற்றென்று சொல்லமுடியும்? மேலும், ஒரு சொல்லுக்கு இலக்கணக்குறிப்பு வரையும்போது எழுவாய் கெட்ட வினைமுற்றென்று கூறும் மரபும் இல்லை. சொற்றொடர் இலக்கணம் கூறும்போது தோன்றா எழுவாய் பற்றிக் கூறுவதுண்டு. ஒரு சொல்லுக்கு அது என்ன பொருளில் வருகிறது என்று அறிந்து இலக்கணக்குறிப்பு எழுதவேண்டும். வாரா என்பது பின்வரும் நான்கு பொருள்களில் வரும்:

அ) அவை வாரா—எதிர்மறைப் பலவின்பால் தெரிநிலை வினைமுற்று
ஆ) வாராக் கடன்—ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) வாராக் கெடுத்தான் (வாராமல் கெடுத்துவிட்டான்)—ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்
ஈ) வாராக் கொடுத்தான்(வந்து கொடுத்தான்)—செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகாலத் தெரிநிலை வினையெச்சம்.

**86.** தொல்காப்பிய உரையாசிரியர்கள் குண்டுகட்டு, குறுந்தாட்டு எனச் சான்று காட்டியுள்ளார்களே தவிர, கண்+து என்றோ, கண்+டு என்றோ பிரித்துரைத்தார்க ளில்லை. கட்டு, தாட்டு என்பனபோலும் புணர்ச்சிகளுக்கு எம்போலியர் எளிதின் உணரத் தாங்கள் மேலும் சில சான்று களையும், இவற்றிற்கான புணர்ச்சிவிதி நூற்பாக்களையும் எடுத்துரைக் கவேண்டுகிறேன். *—பேராசிரியர் கி. சிவகுமார், விருத்தாசலம்*

தொல்காப்பிய உரையாசிரியர்கள் கட்டு, தாட்டு என்பவற்றைப் பிரித்துப் புணர்த்துக் காட்டவில்லை. எனினும் டுகரம் ஒன்றன்பாற் குறிப்புமுற்றாக வருவதற்கே அச்சொற்களைக் காட்டாகக் காட்டுகின்றனர். அவை கண்டு தாடு எனப் புணரலாமாயினும், காண்+து=காண்டு எனநில்லாமல் காட்டு எனவலிந்து நின்றவழியே பிறவினைப்பொருள் தருமாறுபோலக் கட்டு(கண்ணை உடையது), தாட்டு(தாளை உடையது) என ஒலியழுத்தம் பெற்றவழியே குறிப்பு வினைப்பொருள் தருவதால் அவ்வாறு புணர்கின்றன. கல், நில் என்னும் ஒத்த பகுதிகள், கல்+ற்+ஆன்=கற்றான், நில்+ற்+ஆன்= நின்றான் என வேறுபடப் புணர்வதற்கு மரபு என்பதையன்றி வேறு காரணம் கூறமுடியாது.

தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் இவற்றிற்குத் தனியாகப் புணர்ச்சிமுடிபு கூறப்படவில்லை. அவற்றை,

*உணரக் கூறியபுணரியன் மருங்கின்*
*கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே—தொல்.புள்ளி.110*
*விகுதி பதஞ்சா ரியைஉரு பனைத்தினும்*
*உரைத்த விதியினோர்ந் தொப்பன கொளலே —நன். 254*

ஆகிய விதிகளில் அடக்கிக்கொள்ளவேண்டும்.

**87. யானும் என் எஃகமும் சாறும் என்பதில் வரும் சாறும் என்பது றும் என்ற தன்மைப்பன்மை விகுதி கொண்டது என்பர். தெரிநிலை வினைமுற்றாகிய இதன் பகுதியையும் பொருளையும் விளக்கவேண்டுகிறேன்.**

*—பேராசிரியர் கி. சிவகுமார், விருத்தாசலம்.*

*யானுமென் னெஃகமுஞ் சாறு மவனுடைய*
*யானைக்குஞ் சேனைக்கும் போர்*

என்பது, "பகைவனுடைய யானை, சேனைகளுடன் போரிட்டு வெல்வதற்கு நானும் என் வேலுமே போதும்" என்று பொருள்படும். இஃது ஒரு மறவன் கூறும் நெடுமொழிக் கூற்றாக உள்ளது. சால்+றும்=சாறும். இது யான் என்னும் உயர்திணைச்சொல்லும், எஃகம் என்னும் அஃறிணைச்சொல்லும் விரவி எண்ணப்படும் போது உயர் திணை முடிபு கொள்ளினும் அமையும் என்பதற்குக் காட்டாக வருகிறது (தொல். கிளவி.43). தும் ஈற்றைத் தன்மைப் பன்மையீறாகத் தொல்காப்பியர் கூறியிருப்பதுகொண்டே (தொல்.வினை.202) உண்+தும்= உண்டும், செல்+தும்=சேறும் என எல்லாவற்றையும்தும்மீறாகவே கொண்டு புணர்க்கலாம் எனினும், அவர் கும் றும் ஈறுகளையும் தன்மைப்பன்மைக்குக் கூறியிருப்பதனால் உரையாசிரி யர்கள், உண்டும்–டும், கூறுதும்–தும், சேறும்–றும் என்று பிரிக்கின்றனர். அம்முறைப்படிச் சாறும் என்பதை(ப் பாவாணர் கருத்துப்படிச் சால்+தும்=சாறும் என்று பிரித்துப் புணர்க்கலா மாயினும்) தொல்காப்பிய நன்னூல்கள் கூறும் இலக்கணப்படிச் சால்+றும் என்றே பிரித்துப் புணர்க்கவேண்டியுள்ளது.

**88. ரகர ஒற்று உயிர் போன்றது என்பதற்கு எடுத்துக்காட்டுத் தர வேண்டுகிறேன்**

*— புலவர் ச. மு. விமலானந்தன், திருப்பத்தூர்.*



இயல்பு புணர்ச்சி அல்லாத இடங்களில் சொல்லின் இறுதியில் வரும் ண ம ன ல வ ள முதலிய மெய்கள் வல்லினம் வரின் திரியும் அல்லது கெடும். (வரும் வல்லினம் மிக இடந்தரா.)

காட்டு: மண்+கலம் = மட்கலம் – ணகரம் திரிந்தது.
குளம்+கரை = குளக்கரை – மகரம் கெட்டது.

ஆனால் அத்தகைய இடங்களில் ய ர ழ ஆகிய மெய்கள் உயிரெழுத்துப்போல், வரும் வல்லினம் மிக இடம் கொடுக்கும்.

காட்டு: வேய்+தோள் = வேய்த்தோள்
தமிழ்+பாட்டு = தமிழ்ப்பாட்டு
கார்+பருவம் = கார்ப்பருவம்
இவை, புலி+தோல் = புலித்தோல்
இசை+பாட்டு = இசைப்பாட்டு
இளமை+பருவம் = இளமைப்பருவம்

என்ற உயிரீறுபோல் வலிமிக்குப் புணர இடம் தருதலின், ரகர ஒற்று உயிர் போன்றது என்று கூறப்பட்டது.

**89. தாங்கள் எழுதிய சங்கத் தமிழ் நூலில் பஞ்சணைக்கு ஐந்து பொருள் உண்டு என்று எழுதியுள்ளீர்கள். அன்னத்தின் தூவி மட்டும் கூறியுள்ளீர்கள் மற்ற நான்கும் யாவை? –** நா. செயராமன், திரு. பட்டினம்.

நான் எழுதிய சங்கத்தமிழ் நூல் என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்பது தெரியவில்லை. ஐம்பூஞ்சேக்கை (பஞ்சணை)க்குரிய 5 பொருள்களை நச்சினார்க்கினியர்,

சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணம்
உறுதூவி சேக்கையோர் ஐந்து.

என்று குறிப்பிடுகிறார் (நெடுநல்.131 உரை). அதாவது பூளைப்பூ, செம்பஞ்சு, வெண்பஞ்சு (இலவம்பஞ்சு), சேணம், அன்னத்தூவி என்பன. அன்னத்தூவி, இலவம்பஞ்சு, செம்பஞ்சு, மயில் தூவி, வெண் பஞ்சு என்றும் கூறுவர்.

**90. "கொல்லான் புலாலை" என்ற குறள்படி எந்த ஒருயிர் மற்றொரு உயிரைக் கொல்லாமல் புசித்து வாழ்கின்றது என்ற ஐயத்திற்கு விடையளிக்க வேண்டுகிறேன்.** – நா. செயராமன், திரு. பட்டினம்.

தொல்காப்பியர் கருத்துப்படி மரம், செடி, கொடிகளும் உயிருள்ளவையே. அதனால் ஓரறிவுயிரைக் கொல்லுதலும் உயிர்க்கொலையே. ஆனால் அவற்றைக் கொல்வதை வள்ளுவர் கூட உயிர்க்கொலையாகக் கொள்ளவில்லை போலும். 'பைங்கூழ் களை கட்டதை'(குறள்550)உடன்படுகிறார். முனிவர்கள் உயிர்க்கொலைக்கு அஞ்சிக் கந்த மூல பலங்களை உண்டு வாழ்ந்தனர் என்பர். இவற்றில் மூலம் என்பது கிழங்கு. அது விளையக் கூடியதாதலின் அதை உண்பதும் உயிர்க்கொலையே. தானாகப் பழுத்து விழுந்த பழுப்புகள், பழங்கள், வைக்கோல்கள் போன்ற உயிரற்ற பொருள்களை மட்டும் புசித்து வாழும் உயிர்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**91. சில பன்மைச் சொற்களில் மேலும் கள் விகுதி சேரும் காரணம் யாது?**—*ஆறு. தமிழ்நிதிவேந்தன், புதுச்சேரி–9*

இறைவனின் அடிக்கு அணுக்கமானவர் என்ற பொருளில் துறவியை அடி என்பர். அதன்படி இளங்கோஅடி என்பவருக்கு மேலும் மதிப்பளிக்க இளங்கோ அடிகள் என்கிறோம். (இதன்மேலும் ஓர் ஆர் விகுதி சேர்த்து, இளங்கோ அடிகளார் என்பதும் உண்டு) இது போல் குரு என்பதைப் பன்மையில் குருக்கள் என்றனர். இது பின்னர் ஒருமையைக் குறிக்கும் சொல்லானது. அதனால் பன்மைக்கு மேலும் ஒரு மார் சேர்த்துக் குருக்கள்மார் என்றனர். (அதனோ டமையாது 'குருக்கள்மார்கள்' என்பதும் உண்டு!). இவற்றிற்கெல்லாம் ஒருவகை உயர்வு மனப்பான்மையே காரணம். உழவர், மன்னர் என்பனவே பன்மை. நாளடைவில் இவை ஒருமைப்பெயராகிப் பன்மைக்குக் கள் விகுதி பெற்றன. அவை என்பதற்குக் கள் சேர்ப்பது மொழி மரபறியாமை. மக்கள் என்பதே பன்மை. இன்று தொலைக்காட்சியில் சிலர் 'மக்கள்கள்' என்று செய்தி படிக்கின்றனர். இது கல்லாப்பிழை. அதுகள், இதுகள் என்று 'பெரிய்ய' எழுத்தாளர் சிலர் எழுதுகின்றனர். இது மொழி அக்கறை இல்லாத கழிசடைத்தனம்!

**92, 'அணியமாய்'—இதனை நம் முன்னோர் எப்படி வழங்கினர்?** —*புலவர் ச. விமலானந்தம், திருப்பத்தூர்.*

தயார், ஆயத்தம், ready என்ற சொற்களுக்கு நிகராகப் பாவாணர் 'அணியம்' என்ற சொல்லை உருவாக்கினார்.



இப்பொருளில் ஏற்கெனவே 'சமைவு என்று ஒரு சொல் உண்டு. பாவாணரும் தொடக் கக்காலத்தில் தயாராயிருக்கிறேன் என்ற பொருளில் 'சமைவாயிருக் கிறேன்' என்றே எழுதினார். சோறாக்குவதற்கு அரிசியைத் தயார் செய்தார் என்பதை, நொய்யும் நறுங்கும் களைந்து அரிசி 'அமைத்தார்' என்று சேனாவரையர் குறிப்பிடுகிறார். இந்த அமைத்தார் பின்னர்ச் சமைத்தார் ஆனது. 'வனஞ்செல்வதற்கே சமைந்தார்கள்' (கம்ப. நகர் நீங்கு.143) என்கிறான் கம்பன். பிற்காலத்தில் அவ்விடத் தில் தயார் அமர்ந்து ஆட்சி செலுத்தியது. இன்று அதுவும் மறைந்து ready கோலோச்சுகிறது. இவற்றை மாற்றவே அணியம் உருவாக் கப்பட்டது. இப்போதெல்லாம் உணவகங்களில் சாப்பாடு தயார் ஆவதில்லை. meals ready ஆகிறது!

**93. சாறும் என்பதன் பொருள் போதும் எனக் குறிப் பிட்டிருந்தீர்கள்.இது எதிர்காலங் காட்டும் முறைமை யினையும், சால் என்ற பகுதியின் பொருளையும் விளக்க வேண்டுகிறேன்.** —*பேரா. கி. சிவகுமார், விருத்தாசலம்*

'யானும் என் எஃகமும் சாறும்' என்பது 'பகைவர் படையை எதிர்த்துப் போரிட்டு வெல்ல நானும் என் வேலுமே போதுமானவ ராவோம்' என்று பொருள் தருதலின் எதிர்காலங் காட்டியதாகும். 'இந்திர னே சாலுங்கரி (குறள்25) என்பது 'ஐந்தவித்தான் ஆற்றலுக்குச் சான்றாகக் காட்டுதற்கு இந்திரனே சான்றாக அமைவான். வேறு சான்று வேண்டா' என்று பொருள் படும். சால்+றும்—சால்—உரிச்சொல் லடியாகப் பிறந்த வினைப்பகுதி. (=போதுமானதாதல்). றும்—தன்மைப் பன்மை விகுதி. இங்கு எதிர்காலங் காட்டிற்று (தொல். சொல். 202). புணர்ச்சியில் சால் என்பதன் லகரம் கெட்டது (தொல். புள்ளி. 75, நன். 229)



# எழுத்தறியார் தமிழில் யாப்பிலக்கண அமைப்புகள்

"தொடையும் சீரும் செயற்கையானவை; பாடலுக்குப் புறம்பான சேர்க்கைகள்" என்பது பிளின்சு என்னும் மேனாட்டுப் பாவலர் கருத்து. இந்தக் கருத்துத் தமிழ் யாப்புக்கும் பொருந்தும் என்று கொள்ளும் அறிஞர்களும் உள்ளனர். இதன் வன்மை மென்மை களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**ஆய்வுக்களம்**

இந்த ஆய்வுக்குரிய களங்களாக யான் தேர்ந்து கொண்டவை, எழுத்தறியாத் தமிழ் மக்களின் பேச்சு வழக்கில் இடம் பெறும் இணை மொழிகள் [words in pairs] தொடர் மொழிகள் [Idioms], பழமொழிகள், விடுகதைகள், நாட்டுப்புறப் பாடல்கள் ஆகியன. இதில் வரும் நாட்டுப்புறப் பாடல்களிற் பெரும்பாலான புதுச்சேரி வட்டாரத்தில் தொகுக்கப்பெற்றவை.

யான் எடுத்துக் கொண்டவை எழுத்தறியார் தம் வழக்குகளே என்று நம்புகிறேன். இவற்றில் படித்தவர் படைப்புகளும் கலந்து விட்டிருக்கக்கூடும். படிக்காதவர் வழக்கும், படித்தவர் வழக்கும் பலவிடங்களில் ஒத்திருக் கலாம். அதனால் ஒரு வடிவம் இவ்விருவகையாரில் யாருடைய படைப்பு என்று இனங் கண்டு கொள்வது அரிய செயலே. எனினும் படிக்காத மக்களின் படைப்பு களை அறிந்து கொள்ள நமக்குச் சில தடயங்கள் கிடைக்காமலில்லை. அவை ஓரளவு இப்பாகுபாட்டுக்குத் துணை செய்கின்றன.



*'வெரை ஒண்ணு போட்டா சொரை ஒண்ணு காய்க்குமா?'*

என்னும் பழமொழியில் விதை என்பதற்குப் பதில் வெரை என்னும் பேச்சு வடிவம் இடம் பெற்றுள்ளது. அதனால் தான் வெரை சொரை என்ற ஒலி ஒன்றுகிறது. இது படித்தவர் உருவாக் கியதாக இருக்க முடியாது.

*'புள்ளைய சாக்கிட்டுப் பூதம் முழுங்கிச்சாம்'*

இதையும் படித்தவர் உருவாக்கியிருக்க முடியாது. அவர் புள்ளை என்ற பேச்சு வடிவத்தைப் பயன்படுத்த மாட்டார். பிள்ளை என்ற வடிவத்தையே பயன்படுத்துவார். அப்படி அமைந்தால் பிள்ளை–பூதம் என்ற சொற்களிடையே ஒலியொற்றுமை இராது.

*'பொம்பிள சிரிச்சா போச்சி போயல விரிச்சா போச்சி'*

இது படித்தவர் படைப்பாயின், பெண்பிள்ளை, புகையிலை என வரும். ஒலி ஒன்றாது.

*'காஞ்சுங் கெடுத்தது; பேஞ்சுங் கெடுத்தது'*

இது படித்தவர் படைப்பாயின், காய்ந்தும் – பெய்தும் என்றிருந்திருக்கும். காய்–பெய் என்பன எதுகையாகா.

*'வாழற ஊட்டுக்கு ஒரு பொண்ணும்*
*வைக்கப் போருக்கு ஒரு கண்ணும்'*

இதில் கற்றவர் கைவண்ணம் இருந்தால் பெண்ணும் – கண்ணும் என்ற ஒலிநயம் இல்லாமற் போகும். இங்குக் காட்டப் பெற்றவை போன்ற, எழுத்தறியாத் தன்மைகள் வெளிப்படும் எடுத்துக் காட்டுகளையே பெரும்பாலும் என் ஆய்வுக்காக எடுத்துக் கொண்டேன்.

**யாப்பிலக்கணக் கூறுகள்**

இத்தகைய வழக்குகளில், யாப்பிலக்கண நூல்கள் பாகுபடுத்திக் கூறும் சீர், தளை, அடி, தொடை முதலிய பாட்டுறுப்புகள், பா, பாவினங்கள் ஆகியவற்றின் இலக்கண அடிப்படைகள் தொட்ட விடமெல்லாம் செவியில் தட்டுப்

படுகின்றன. எழுத்து அசைகளைப் பற்றி இங்கு ஆராய வேண்டியதில்லை; அவை வழக்குக்கும் செய்யுளுக்கும் ஒரு தன்மையானவையே.

**சீர்** :யாப்பிலக்கணம், ஓரசைச்சீர், ஈரசைச்சீர்; மூவசைச் சீர்களையே சிறப்பாக வகுத்துரைக்கிறது. இலக்கிய வழக்கிலும் அருகிக் காணப்படும் நாலசைச்சீர், கல்லார் வழக்கிற் காண்பரிதாக உள்ளது.

**ஓரசைச்சீர்** : சில இடங்களில் மட்டுமே அமைந்துள்ளது.

‘**மருந்தும் விருந்தும் மூன்று நாள்**’ – நாள் – நேரசைச்சீர்.

‘**கிட்ட இருந்தா முட்டப் பகை** –பகை–நிரையசைச்சீர்.

**ஈரசைச்சீர்** : *‘ஆடிக் காத்தில அம்மியும் பறக்கும்’*
*‘கோழி திருடியும் கூடக் கொலாவறா’*

ஆடி, கோழி, கூட – தேமா. பறக்கும் – புளிமா. திருடியும், கொலாவறா – கருவிளம். காத்தில, அம்மியும் – கூவிளம்.

**மூவசைச்சீர்கள் – காய்ச்சீர்கள்** :

*‘அக்காளுந் தங்கச்சியும் அக்கரைக்கிப் போவகுள*
*தக்காளிப் பழங்குடுத்து - குட்டி- கிளியாம்பா*
*தள்ளிகினான் பள்ளத்திலே - போடு தனாக்கு’*

அக்காளும் – தேமாங்காய், கிளியாம்பா – புளிமாங்காய், பழங்குடுத்து–கருவிளங்காய், தள்ளிகினான் – கூவிளங்காய்.

**கனிச்சீர்கள்** :

*மழை பேயுது மழை பேயுது நெல்ல வாருங்கோ*
*முக்காப்படி அரிசி போட்டு முறுக்கு சுத்துங்கோ*
*ஏரு ஓட்ற மாமனுக்கு எண்ணி வையுங்கோ*
*சும்மா இருக்கிற மாமனுக்குச் சூடு போடுங்கோ*
*அரிசிருக்குது பருப்பிருக்குது அடுப்பில்லாத சங்கடம்*
*காத்தடிக்குது தூள்பறக்குது கதவில்லாத சங்கடம்*

முக்காப்படி – தேமாங்கனி, மழைபேயுது – புளிமாங்கனி, அரிசிருக்குது – கருவிளங்கனி, காத்தடிக்குது – கூவிளங்கனி.



**தளை** :

*‘தாயைப் போலப் புள்ள நூலைப் போல சேல’*
–நேர்ஒன்று ஆசிரியத்தளை
*‘குருடனும் செவடனும் (கூத்துப் பாத்தாப் போல)’*
–நிரை ஒன்று ஆசிரியத்தளை
*‘நத்த வவுத்தில முத்து பொறந்தது போல’*

நத்த வவுத்தில – மாமுன் நிரை–வெண்சீர் வெண்டளை
வவுத்தில முத்து – விளமுன்நேர் –வெண்சீர் வெண்டளை

‘**காடுவெட்டிக் கல்பொறுக்கிக் கம்புதெனை தான்வெரச்சி**’
– வெண்சீர் வெண்டளை
*‘பதக்கு வரவரைச்சி பணியாரம் சுட்டு வச்சேன்’*
–வரவரைச்சி பணியாரம் – கலித்தளை

அரிசிருக்குது பருப்பிருக்குது – ஒன்றியவஞ்சித்தளை
காத்தடிக்குது தூள்பறக்குது – ஒன்றாத வஞ்சித்தளை

**அடி** :

| | |
|---|---|
| ‘**கைபட்டா கண்ணாடி**’ | - **குறளடி** |
| ‘**அடியாத மாடு படியாது**’ | - **சிந்தடி** |
| ‘**கொண்ணா பாவம் திண்ணா தீரும்**’ | - **அளவடி** |

‘**அழுற ஆம்பிளையையும் சிரிக்கிற பொம்பிளையையும் நம்பாதே**’
- **நெடிலடி**
‘**ஆட மாட்டாத் தேவடியா கூடம் கோணல் இன்னாளாம்**’
- **கழிநெடிலடி**

**தொடை** : மோனை

தொடைகளில் சிறந்தது மோனை. அதனால் தான் அது முதலில் வைத்து எண்ணப்பட்டது போலும். ‘மோனை முத்தமிழ்’ என்று ஒட்டக்கூத்தர் தமிழுக்கு மோனை என்னும் அடை கொடுத்துப் பாடியுள்ளார். ஓர் அடியில் பல இடங்களில் மோனை வருவது பழமொழிகளின் இயல்பாக உள்ளது. கம்பன் இவ்வியல்பை விருத்தத்தில் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளான். கம்பராமாயணத்தில் அடிதோறும் மூன்றுக்குக் குறையாத அடுக்கிய மோனை அமைந்துள்ள அடிகளே மிகுதி. யாப்பிலக் கணத்தில் மோனை இலக்கணமே சிறிது சிக்கலானது. எத்துணை பயின்றாலும் சிலர்க்கு அதில் தெளிவு ஏற்படுவதில்லை – முதலெழுத்து ஒன்றுவது மோனை என்று

அதன் இலக்கணம் சுருக்கமாகச் சொல்லப்பட்டாலும், ஒன்றும் எழுத்துகள் யாவை என்பதை விரிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

உயிர்களில், அ ஆ ஐ ஔ என்பன ஓர் இனம். இ ஈ எ ஏ எ என்பன ஓர் இனம். உ ஊ ஒ ஓ என்பன ஓர் இனம். ஓர் இன எழுத்துக்கள் தமக்குள் ஒன்றுக்கொன்று மோனையாக வரும். உயிர்மெய்களில், வந்த மெய்யே வந்து, அவற்றின் மேல் ஏறிய உயிர் ஓர் இனமாயிருத்தல் வேண்டும். சகரத்துக்குத் தகரமும், மகரத்துக்கு வகரமும் நகரத்துக்கு ஞகரமும் கூட வரலாம்.

எழுத்தறியார் படைப்புகளில் மேற்கண்ட இலக்கணங்களிற் சிறிதும் பிழையாத சிறந்த மோனைகள் காணப்படுவது வியப்பைத் தருகிறது. சில வருமாறு :

**பூச்சி பொட்டு** – பூ, பொ. **வேலை வெட்டி** – வே, வெ
**ஈயத்தப் பாத்து இளிச்சதாம் பித்தளை** – ஈ, இ
**ஆத்தில போற தண்ணி ஐயா குடி அம்மா குடி** –ஆ, ஐ, அ
**ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டிச்சாம்** – ஒ, ஊ
**தலைக்கு மேல வெள்ளம் போவுது; சாண் போனா என்ன முழம் போனா என்ன?** – த, சா
**செஞ்சி வயித்தியனோ தென்மதுரப் பண்டிதனோ** – செ, தெ
**வவுத்தெரிச்சல் ஆம்படையானுக்கு மாலைக்கண்ணு பொண்டாட்டி** – வ, மா
**கத்திரிக் காய்க்கி கையுங் காலும் மொளச்சாப்போல** – க, கா, கை, கா
**போரோட திண்ற மாட்டுக்குப் புடுங்கிப் போட்டா கட்டுமா?** – போ, பு

அளவடிகளில் வரும் சீர்த் தொடைகளை, இணை, பொழிப்பு, ஒரூஉ, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், கூழை, முற்று என்று இலக்கணம் பாகுபடுத்துகிறது. இவற்றுக்கும் எழுத்தறியார் தமிழில் எடுத்துக் காட்டுகள் தர முடியும். மோனை விகற்பங்களிற் சில வருமாறு:

**பாத்தா பூனை பாய்ஞ்சா புலி** – பொழிப்பு மோனை
**கந்தை யானாலும் கசக்கிக் கட்டு** – மேற்கதுவாய் மோனை
**பழகப்பழகப் பாலும் புளிக்கும்** கூழை மோனை
**படுக்கப் படுக்கப் பாயும் பகை** – முற்று மோனை
**நொண்டிக் குதிரைக்கிச் சறுக்கினது சாக்கு**
– கடையிணை மோனை



பின் வரும் நாட்டுப்பாடல்களில் மேற்கண்ட மோனை வகைகள் எவ்வாறு இன்புறுத்துகின்றன, பாருங்கள்.

1. **சாந்து அரைக்ககுள்ள சன்னலால பாத்திருந்தான்**
**என்னாத்தான் மையிட்டானோ – குட்டி – கிளியாம்பா**
**இழுத்தரைக்க மாளலியே – போடு தனாக்கு**

2. **வீராம்பட்டணம் போவலாம் வெள்ளை இட்டிலி வாங்கலாம்**
**சவுக்குத் தோப்பு போவலாம் சமுத்துப் போட்டுத் துண்ணலாம்.**

3. **மைலம் கொஞ்சம் போறேன் சாமி – ஏலாலம்படி ஏலம்**
**மாட்டேன்னு சொல்லாதிங்க – ஏலாலம்படி ஏலம்**
**தேரு பார்க்கப் போறஞ்சாமி – ஏலாலம்படி ஏலம்**
**தெரிஞ்சவங்க கூப்படறாங்க – ஏலாலம்படி ஏலம்**

4. **தாழம்பூச் சித்தாடை – எனக்குத் – தச்சி வரும் பாவாடை**
**தையல் பிரிஞ்சாலும் – எனக்கு – தாலி பிரியலாமோ**

5. **உப்புப் போட்டு அடிக்கச் சொல்லுது – அதில**
**ஒரு கிளாசு போடச் சொல்லுது**
**சி ஏ டி யைக் கண்ட ஓடனே – போயி**
**செடியின் கீழப் பதுங்கச் சொல்லுது**

**எதுகை**

மோனைக்கு அடுத்த படியாகச் செல்வாக்குப் பெறுவது எதுகை. இரண்டாம் எழுத்து ஒன்றுவது எதுகை என்றே பெரும்பாலான இலக்கண நூல்கள் கூறினாலும், முதலெழுத்தும் குறிலுக்குக் குறில் நெடிலுக்கு நெடில் என்று அளவு ஒத்துவர வேண்டும் என்ற கட்டாயம் உண்டு. இரண்டாமெழுத்து ஒன்று மட்டும் ஒத்து வருவதை விட, முதலெழுத்து ஒழிய அச்சீரில் எத்தனை எழுத்துகள் ஒத்து வந்தாலும் அதற்கேற்றபடி ஒலிநயம் சிறப்பாக இருக்கும். முதலெழுத்தொழிய மற்றவை ஒன்றுவது எதுகை என்று தொல்காப்பியர் இதனைக் குறிப்பிடுகின்றார். பல்காயனார், முதலெழுத்து அளவோ டொத்துப் பிற எழுத்துகள் ஒன்றுவது என்று மிகத் தெளிவாகக் கூறுகின்றார். இந்த நுட்பங்கள் அனைத் தும் எழுத்தறியார் தமிழில் எள்ளளவும் பிழையாமல் வருவதை, எக்கச் சக்கம், கோணல் மாணல், சாக்குப் போக்கு, சீட்டு நாட்டு, தில்லு முல்லு, எதிரும் புதிரும் முதலிய இணைமொழிகளிற் காணலாம்.

சில இணைமொழிகள் எதுகையின்பம் நோக்கிச் சிதைந்து உருவாகியுள்ளன. வம்பு துன்பு என்பதில் துன்பு–தும்பு எனத் திரிந்து வருவது ஒலிச்சிறப்புக் கருதியே. ஆட்டம் பாட்டம் என்பதில் பாட்டு–பாட்டம் ஆனதும் அப்படியே. நல்லது என்பதற்குப் பொல்லாதது என்பதும் எதுகை தான். ஆனால் நல்லது என்பதற்கு ஏற்றபடி பொல்லாதது என்பது எல்லா எழுத்தும் ஒத்து ஒலிக்கவில்லை; அதனால் அது 'பொல்லது' என்று திரிக்கப்பட்டு 'நல்லது பொல்லது' என்று பேசப்படுகிறது.

இப்படி முதலெழுத்து ஒழியச் சீர் முழுவதும் ஒத்து வருவதைத் தலையாகு எதுகை என்பார்கள். அந்தச் சிறப் பும் பொது மக்கள் தமிழில் உணரப்பட்டுள்ளது. சொல் வடிவத்தைச் சிதைத்தாவது ஒலியின்பம் நுகர விழையும் விழைவு இதில் வெளிப்படுகின்றது. அகல நிகளம் என்ப தில் நீளம்–நிகளமானதற்குக் காரணம் இதுவே. நன்மை தின்மையும் இத்தகையதே.

சில இடங்களில் இணையாக வரும் சொற்கள் இரண்டு மே எதுகை நயம் நோக்கி வடிவம் அறிய முடியாத படி சிதை வதும் உண்டு. எதுகை மோனை என்பதை எந்தப் புலவரும் எது கை நயத்துடன் சொல்ல முயன்றதில்லை. அவர்களின் செய்யுள் விகாரங்கள் என்னும் உரிமத்தைக் கூட இங்கே பயன் படுத்த வில்லை. ஆனால் படிக்காதவர் இவற்றை எதுகை நயத்துடன் கூறுகின்றனர். அதற்கேற்றபடி இரண்டு சொல்லையும் சிதைத்து 'எகனை மொகனை' என்கின்றனர். [இயைபு என்னும் தொடை நயமும், இதில் அமைந்து விட்டது] எதனையும் இணைமொழி யாற் குறிப்பது, மோனை எதுகைகளின் இன்பத்தைக் கருதியதே. இவ்வுண்மை யைப் பூச்சி பொட்டு, சொத்த சொள்ள, வேல வெட்டி என்ற மோனைத்தொடர்களில் இரண்டாம் சொற்கள் பொருள் சிறவாதனவாக இருப்பதிலும், மிச்சம் மீதி என் பது கூறியதுகூறலாகஇருப்பதிலும்அறிந்துகொள்ளலாம்.

**எக்கச்சக்கம், சம்பளம் கிம்பளம், வாட்டம் சாட்டம், வெள்ளையும் சள்ளையும், போக்கிரி சாக்கிரி** ஆகிய தொடர்களில் இரண்டாம் சொற்கள் எதுகையின் பம் நோக்கி வந்த பொருள் சிறப்பற்ற சொற்களாய் உள்ளன. இத்தகைய தொடர்களில் முதற் சொல் மட்டு மே கருத்தைக் கூற வந்ததாகவும் இரண்டாம் சொல் ஒலி நயம் குறித்து வந்ததாகவும் இருப்பதை ஊன்றி நோக்குதல்வேண்டும். எதுகையின்பம்



மிகுந்த இணைமொழி களிற் பழகிய தமிழ்க்காதுகள் எல்லாச் சொற்களையும் இப்படிக் கேட்க விரும்புகின்றன. தெருவில் விளையா டும் குழந்தையிடம், "வண்டி வரப்போகிறது; பார்த்து விளையாடு" என்று சொல்ல விரும்பும் தாய் "வண்டி கிண்டி வரப்போகிறது" என்கிறாள்.இப்படி ஒரு சொல் லின் முதலெ ழுத்தை மட்டும் மாற்றிப் போட்டு அதற்கு இணையான ஒலியமைப்புடைய ஒரு சொல்லை – அது பொருளற்ற தாயினும் – உருவாக்குவதைத் தமிழர்களின் தனிப்பண்பு களில் ஒன்று என்று சொல்ல வேண்டும். எந்தச் சொல்லையும் இப்படி நம்மால் மாற்ற முடியும். [கி, கீ என்று தொடங்கும் சொற்கள் இதற்கு விதிவிலக்கு] இதிலும் எதுகை இலக்கணம் ஒன்றினை நாம் நம்மை யறியாமல் பின்பற்று கிறோம். வண்டி என்பதற்குக் கிண்டி என்பது போல, தோண்டி என்பதற்குக் கிண்டி என்பதில்லை, கீண்டி என்கிறோம். இரண்டாவது முதலிய எழுத்துகள் ஒத்திருப்பது மட்டும் எதுகைக்குப் போதாது; முதலெழுத்தும் அளவு ஒத்திருத்தல் வேண்டும் என்ற நுட்பமான விதி இங்கே இயல்பாகவே பின் பற்றப்படுகிறது. சொற்களை இப்படிக் 'கிக்கீப்படுத்தல்' எதுகைத் தட்டுப்பாட்டுக்குச் 'சமய சஞ்சீவி'யாக உதவுகின்றது! ஒரு முறை,

***நிலா நிலா வாவா நில்லாமல் ஓடிவா***
***மலைமேலே ஏறிவா மல்லிகைப்பூக் கொண்டு வா***

என்ற அடிகளை ஒரு குழந்தை திருப்பித் திருப்பிப் பாடிக் கொண்டிருந்தது. அதனோடு விளையாடிக் கொண்டி ருந்த மற்றொரு குழந்தை, ஒரு மாற்றம் செய்து 'தரை மேலே ஏறிவா ரோசாப்பூ கொண்டு வா' என்றது. உடனே முதற்குழந்தை, 'ஊகூம், தரைமேலே ஏறிவா தாமரைப்பூ கொண்டு வா' என்றது. இதை நேரில் கேட்டு வியந்தேன் ஒரு வேளை அக்குழந்தை 'மோட்டு மேலே ஏறிவா' என்று பாடியிருந்தால் 'முல்லைப்பூக் கொண்டு வா' என்பது அடுத்த அடியாகப் பிறந்திருக்கலாம்! எதுகை மோனை களில் உள்ள ஈடுபாடு தமிழ் மக்களுக்குக் கருவிலேயே திருவாக அமைந்து விடுகிறதோ என்று கருதத் தோன்றுகிறது. ஒப்புமையாக்கமாக அக்குழந்தைகள் இவ்வாறு பாடின என்று கொள்வதற்கில்லை. ரோசாப்பூ கொண்டு வா என்பதும் ஒப்புமையாக்கம் தான். அது ஒலி ஒன்ற வில்லை என்பதால் வெறுத்து ஒதுக்கியதையும், உடனே தலை சிறந்த மோனையினை அங்குப் பெய்த திறத்தையும் நோக்க வேண்டும்.

ஏற்றப்பாட்டுக்காரர்களும் உழைக்கும் மகளிரும் அப்போது அங்கே வரும் முறைக்காரர்கள், பண்ணையார் முதலியோரின் பெயர்களையோ பிற செய்திகளையோ எதுகை இடறாமல், மோனை முறியாமல் தாம் பாடிக் கொண்டிருக்கும் பாட்டில் அமைத்துப் பாடும் திறம் பெற்றிருக்கிறார்கள்.

*எழுவதியா லொண்ணு ஏரிக்கர ஓரம்*
*ஏரிக்கர ஓரம் எட்டியம்மா வாரா*
*எட்டியம்மா பொண்ணே கிட்டவாடி கண்ணே!*

என்று ஓர் ஏற்றக்காரர், அப்போது அப்பக்கம் சென்ற முறைப் பெண் ஒருத்தியின் பெயரைத் தன் பாட்டில் உடனே அமைத்துப் பாடியதைக் கேட்டு வியந்ததாக நண்பர் ஒருவர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

பின் வரும் பழமொழிகளில் எதுகையமைப்பினை நோக்குங்கள் :

*'உண்ட ஊட்டுக்கு ரண்டகம் பண்ணாதே'*
*'பாத்த கண்ணும் பூத்துப் போச்சி'*
*'அடாது செய்தவன் படாது படுவான்'*
*'ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு'*

நூத்தில ஒருத்தன் என்று பேச்சு வழக்கிலும் நூறு ஒற்று இரட்டுதல் போற்றப்படுவதே. ஆனால் இங்கே நூறிலும் என இரட்டாமல் வருவது எதுகை நோக்கியே.

*'கரடி கத்தவன் எரடி உழுந்தா அதுவும் ஒரு வித்தை தான்'*

இங்கே இடறி என்பது எதுகைக்காக 'எரடி' எனத் திரிக்கப்பட்டுள்ளது.

*'பேஞ்சுங் கெடுத்தது காஞ்சுங் கெடுத்தது'*

பெய்தும், காய்ந்தும் என்பன எழுத்துத் தமிழில் எதுகை யாகா. பேச்சுத்தமிழில் அவை சிறப்பான எதுகையாகும் வகையில் திரிக்கப்பட்டுள்ளன.

**தலையாகு எதுகை**

*'அழையாத ஊட்டுக்கு நொழையாத சம்பந்தி'*
*'திடுக்கிண்ணு வாக்கப்பட்டு வெடுக்கிண்ணு அறுத்தாளாம்'*
*'அலை யெப்ப ஓயறது தலை யெப்ப முழுவறது'*



**எதுகை விகற்பங்கள்**

*'சேட்டை மூட்டை செவ்வாய்க் கெழமை'* - இணை எதுகை
*'பட்டும் பாழு நட்டுஞ் சாவி'* - பொழிப்பு எதுகை
*'புள்ள பல்லா கள்ள வித்தான்'* - கூழை எதுகை
*'காட்டில செத்தாலும் ஊட்டில தீட்டு'* - மேற்கதுவாய் எதுகை
*'கெஞ்சினா மிஞ்சுவான் மிஞ்சினா கெஞ்சுவான்'* - முற்று எதுகை

**இன எதுகைகள்:**

1. **வல்லின எதுகை**
   *'தோட்டக்காரன் வாழ்வு காத்தடிச்சா போச்சி'* (ட்—த்)
2. **மெல்லின எதுகை**
   *'அண்ணன் தம்பிதான் சென்மப்பகை'* (ண், ம், ன்)
3. **இடையின எதுகை**
   *'தாய்க்கு ஆவாத புள்ள ஊர்க்கு ஆவுமா'* (ய், ர்)

**மூன்றாமெழுத்து ஒன்று எதுகை**

*'நரிக்கு நாட்டாமை குடுத்தா கெடைக்கு ரண்டு ஆடு கேக்கும்'*
(க், க்) **நெடிலெதுகை**

இரண்டாமெழுத்தின் மேல் எறிய உயிர் நெடிலா யிருப்பது.
*'தானா வர சீதேவியைக் காலால் எட்டி ஒதைக்காதே'*
(னா, லா)

**உயிரெதுகை**

இரண்டாமெழுத்தின் மேல் ஏறிய உயிர் மட்டும் ஒன்றியிருப்பது.
*'மடியில கனம் இருந்தா வழியில பயம்'* (இ, இ)

**ஆசெதுகை**

முதலெழுத்துக்கும் இரண்டாமெழுத்துக்கும் இடையில் ய ர ல ழ என்னும் ஒற்று வருவது.
*'கேப்பாரு மில்ல மேய்ப்பாரு மில்ல'* (ய்)
*'வாழ்வைத் தள்ளினாலும் சாவைத் தள்ளாதே'* (ழ்)

**வழியெதுகை**

ஓர் எதுகை பலவிடங்களில் வருவது
***'உண்டு ருசி கண்டவனும் பொண்டு ருசி கண்டவனும் உடமாட்டான்'*** (ண்டு , ண்ட, ண்டு, ண்ட )

**முரண்**

எதிர்மொழியாக வரத் தொடுப்பது

*அல்லும் பகலும், தலைகால், ஏறக்குறைய*
*சிறுதுளி பெரு வெள்ளம்'*
*'நிமிர்ந்தா நெடுமரம் சாஞ்சா பனமரம்'*
*'பாம்பு பசிய நெனைக்கும் தேரை விதியை நெனைக்கும்*
*'அக்கர மாட்டுக்கு இக்கர பச்சை'*

**இயைபு**

இறுதி ஒத்து வரத் தொடுப்பது. சந்தப் பாடல்களில் இது எதுகை மோனைகளை விட மிகுதியாகப் பயன்படுகிறது.

*'காலுக்குத்தக்க செருப்பு கூலிக்குத் தக்க உழைப்பு'*
*'பந்திக்கி முந்து படைக்கிப் பிந்து'*
*'சொன்னா வெக்கம் அழுதா துக்கம்'*
*'மாமியா ஒடச்சா மண்சட்டி மருமவ ஒடச்சா பொன்சட்டி'*
*'ஆரு ஊட்டு எழவோ பாய போட்டு அழவோ'*
*'கருப்புச் சட்டக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன்'*
*'தண்ணிக் கொளத்தில கிண்ணி மெதக்குது'*
*'ஆலிலை பழுப்பதேன்; ராவழி நடப்பதேன்'*

மோனை எதுகை இயைபு முதலியவற்றின் அடிப் படை இயல்பு என்ன? அவற்றில், வந்த ஒலியே மீண்டும் மீண்டும் வருகின்றது; செவிக்கின்பம் தருகின்றது. சரிகமபதநி என்னும் ஏழு சுரங்களே திரும்பத் திரும்ப ஓர் ஒழுங்குடன் வந்து செவிக்கின்பம் தருவது தானே இசை?

**அந்தாதித் தொடை**

ஓரடியின் முடிவில் வரும் எழுத்து, அசை, சீர் இவற்றில் ஒன்று, அடுத்த அடியின் முதலில் வருவது அந்தாதி எனப்படும்.

*மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை*
*முக்குடை நீழல் பொற்புடை ஆசனம்*

என்பதன் அமைப்பை,

*ஏணியிலே கேணி, கேணியிலே குண்டு; குண்டுமேலே*
*பில்லு; பில்லுக்குள்ள பூச்சி'*

என்ற விடுகதையில் காணலாம்.



இனி, மேற்கண்ட மோனை எதுகை முரண் இயைபு ஆகிய தொடைகள் ஒரே தொடரில் பலவாக அமைந்து ஒலி நயம் சிறப்ப வருவன சில காண்க;

*தட்டுக்கெட்டுத் தடுமாறி* — மோனை, எதுகை
*ஓதவாப் பழங்கலமே ஓசையில்லா வெங்கலமே*
மோனை, இயைபு
*'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்'*
மோனை, எதுகை, இயைபு
*'கொழுத்தவனுக்குக் கொள்ளு எளச்சவனுக்கு எள்ளு'*
மோனை, எதுகை, முரண், இயைபு

**பா:**

வெண்பா, ஆசிரியம் கலி, வஞ்சி என்று உருவான பாக்களின் அடிப்படைகள் மக்கள் தமிழிற் காணப்படு கின்றன.

**வெண்பா**

*'தூங்காத தூங்காத தூங்கிமோசம் போவாதே*
*தேங்கா கடலைசுண்டல் வாங்காது போகாதே'*

என்பது போல் வருவன வெண்பா நடைக்கு முன்னோடி.

**கலி**

*கொளுத்தற வெய்யிலிலே கொணமுஞ்செத்த எறங்கலியா?*

என்பன போன்றவற்றில் கலிப்பா நடையினைக் காணலாம்.

**தாழிசை**

கலிப்பாவின் உறுப்பாகத் தாழிசை வரும். அது பெரும்பாலும் ஒரு பொருள்மேல் மூன்றாக அடுக்கிப் பாடப்படும். இந்த அமைப்பு நாட்டுப்புறப் பாடல்களில், சிறப்பாக ஒப்பாரிகளில் பெருவாரியாகக் காணப்படு கின்றது.

1. *குட்ட பனஞ்சோலை குயிலடையும் மண்டபமாம் - அங்க*
*குருத்தை வெட்டி நார் கிழிச்சா குயில்போனா எங்க அண்டும்?*
*மட்டபனஞ்சோலை மயிலடையும் சத்தரங்க - அங்க*
*மட்டவெட்டி நார்கிழிச்சா மயில்போனா எங்க அண்டும்?*

*'ஆக்கன சோறிருக்க அறிவுள்ள மாடிருக்க - எனக்கு*
*அரசன் சரியிருந்தா - நான் - ஆத்தா ஊடுஏன் போறேன்?*

பொங்கன சோறிருக்க புத்தியுள்ள மாடிருக்க - எனக்கு
புருசன் சரியிருந்தா - நான் - பொறந்தவூடு ஏன் போறேன்?

2. சால கட ஓரத்தில -அட - சாந்துகினு கெடந்த பையா
சரக்கு இன்னா வாங்கித்தரேன் - அட
சங்கமாங்கி ஊட்ட வாடா
இட்லிகட ஓரத்தில - அட -இளிச்சிகினு கெடந்தபையா
இட்லி இன்னா வாங்கித்தரேன் - அட
இளிச்சவாயா ஊட்ட வாடா
முறுக்குக்கட ஓரத்தில - அட- முறுக்கிக்கினு கெடந்த பையா
முறுக்கு இன்னா வாங்கித்தரேன் - அட
முட்டுக்கட்டெ ஊட்ட வாடா

**முடுகியல்**

சிலவகைக் கலிப்பாக்களில் முடுகியல் [அராகம்] என்ற உறுப்பு உண்டு. ய ர ல ழ ஒழியப் பிற ஒற்றெழுத்துப்பெறாது, பெரும்பாலும் குறிலே பெற்றுக் 'கடகட' என்னும் ஓசை யுடையதாய் வருவது முடுகியல்.

'தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை
தழலென விரிவன பொழில்'

என்ற முடுகியலில்,

'ஓடற நரியில ஒருநரி கிழநரி
கிழநரி முதுவில ஒருபுடி நரமயிர்'

என்ற சடுகுடுப் பாடலின் சாயலைக் காணலாம்.

**வெண்கலிப்பா**

'தாலி அரும்பெடுத்த தட்டானும் கண்குருடோ
சேலைக்கு நூலெடுத்த சேணியும் கண்குருடோ
பஞ்சாங்கம் பாக்கவந்த பாப்பானும் கண்குருடோ
எழுதினவன் தான்குருடோ எழுத்தாணி கூர் இல்லையோ
கட்டின சேலை இன்னும் கசங்கி மடியலையே
வச்சபூ இன்னும் வாசம் கொலையலியே
மஞ்சா கலையலியே மடிப்புக் கொலயலியே
பந்த பிரிக்கலியே வந்தசனம் போவலியே
கலியாணப் பானைகளும் கழுவிக் கவுக்கலியே
பணியாரம் சட்டசட்டிப் பாதிமணம் போவலியே'



என்ற ஒப்பாரியில் வெண்கலிப்பாவின் நடையைப் பார்க்கலாம்.

**வஞ்சி**

'வெட்டினதால் தப்பி விட்டேன்
வெட்டாவிட்டா செத்திருப்பேன்.
செத்ததனால் தப்பிவிட்டேன்
சாவாவிட்டால் செத்திருப்பேன்
வந்ததனால் வரவில்லை
வராவிட்டால் வந்திருப்பேன்.

என்ற விடுகதையில் குறளடி வஞ்சிப்பாவின் குரல் கேட்கிறது.

**பாவினம்**

பாக்களை ஒருபுடை ஒத்துவருவன பாவினங்கள் எனப்படும். அவை, தாழிசை, துறை, விருத்தம் என மூவகைப் படும்.

**தாழிசை**

'ஆந்த அலறுமரம் ஆம்பளைங்க தூங்கு மரம்
ஆம்பளைங்க மூஞ்ச பாத்தா அழவான மல்லியப்பூ'

இதில் குறட்டாழிசையின் அமைப்பு உள்ளது.

**துறை**

'முப்பதியா லேழு
முத்துமுத்தா தண்ணி
முத்துமுத்தா தண்ணி
மொத மடைக்கிப் பாயும்'

என்ற ஏற்றப்பாட்டில் வஞ்சித் துறையின் மணம் வீசுகிறது'

**விருத்தம்**

ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவு
உள்ளே இருக்குதாம் ஈரும் பேனும்
என்ற பழமொழி,

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்

என்ற எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தின் அமைப்புக்கு முன்னோடி போல் அமைந்துள்ளது.

**சந்தப் பாக்கள்**

குறட்டாழிசைகள் பிற்காலத்தில் பல நடைகளிற் பெருகிச் சந்தப் பாக்களாக மாறியமைந்தன. பல்வகை நடைகளுக்கு அடிப்படையாக விளங்கும் சந்தப் பாக் களை நாட்டுப் பாடல்களிற் காணலாம்.

*வெய்யில் ஓரைக்குதே மாமாவே - அட*
*வேர்வை தட்டுதே மாமாவே*
*கானல் ஓரைக்குதே மாமாவே - அட*
*காசு குடுத்துடேன் நாம் போறேன்*

சுண்ணம் இடிப்பார்தம் சுவை மிகுந்த இந்தப் பாடலின் சந்தத்தில் உலக்கை விழும் ஒலியைக் கேட்கலாம்.

**தனிச் சொல்**

ஓர் அடியின் முதலில் தனியே வருவதுதனிச்சொல்; அது இறுதியிலும் இடையிலும் கூட வருவதுண்டு என்பது இலக்கணம். இந்தப் பண்பைக்கூட மக்கள் தமிழில் காண முடிகிறது.

***உன்னை - எலைய எடுக்கச் சொன்னாங்களா***
***தலைய எண்ணச் சொன்னாங்களா?***

இதில் அடி முதலில் தனிச்சொல் வருகிறது.

பின் வரும் நாட்டுப் பாடல்களில் மேற்கண்ட சீர், தளை, அடி, தொடையழகுகளும், சந்த நயமும் கொஞ்சிக் குலவுவதைப் பாடி உணரலாம்.

1. *பூமுடியேன் பொண்ணே - நாம் புச்சேரிக்கிப் போவோம்*
*மாவிடியேன் பொண்ணே - நாம் மயிலத்துக்குப் போவோம்*

2. *'அஞ்சி ஊட்டுக் கஞ்சித்தண்ணி தெகோலு - இப்ப*
*அறுத்துக்கிச்சான் கவுறுபாடி தெகோலு*

3. *ஆசைக்கி ஆப்பம் வாங்கி அடிமடில கட்டி வச்சேன்*
*புண்டந்துண்ணி பையனால - எனக்கு*
*புட்டுத்துண்ண நேரமில்ல.*
*நேத்து சமஞ்சவளே நெய்யுஞ் சோறுந் துண்ணவளே*
*கண்ணாடிதான் பாக்காதடி - பொண்ணே*



*கண்ணக்காட்டி கூப்புடுவான்*
*காலுசட்ட போட்டவனே காப்பித் தண்ணி வித்தவனே*
*இங்கிலீசு படிச்சவனே - நான்*
*இருக்கட்டுமா போவட்டுமா?*

4. *'தேர உட்டு கீழே குதிச்சான் - அர்ச்சுனராசன்*
*மோரஉட்டு கூழ கரைச்சான்'*

5. *'பொரிஞ்ச மணல்மேலே பொணம்போற வீதியிலே*
*பொணத்தை நிறுத்துங்களேன்*
*பொண்ணு கொறை சொல்லி வரேன்*
*சரிஞ்ச மணல்மேலே சவம்போற வீதியிலே*
*சவத்த நிறுத்துங்களேன் சஞ்சலத்தைச் சொல்லிவரேன்'*

**ஒரு தடை**

இந்தத் தொடையழகுகள் படிக்காத மக்களிடையே இயற்கையாக எழுபவை என்று எப்படிச் சொல்ல முடியும்? படித்தவர் பாடல்களைக் கேட்டதன் தாக்கமாக ஏன் இருக்கக் கூடாது? என்று கேட்கலாம். இப்படியும் அமைவதுண்டு என்பதை ஒப்புக்கொள்ளலாம். இப்படித்தான் அமைந்தன என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. மொழி வரலாற்றைக் கூர்ந்து நோக்கினால், ஓர் உண்மை புலப்படும். மக்கள் முதலில் தம்கருத்தை உணர்த்தப் பேச்சு மொழியையே உருவாக்கி னார்கள். அதிலே துணி மணி, நகைநட்டு முதலிய ஒலி ஒத்த இணைமொழிகள் முன்னதாக உருவாயின. இணைமொழி களிற் சில, 'நோயும் நொடியும் பாயும் படுக்கையும்' என்பது போல் நீண்டு தொடர் மொழிகளாக வளர்ச்சி பெற்றமை அடுத்தபடி நிலையாகும். பின்னர் நீண்ட பழமொழிகள் உருவாயின. பழமொழிகள் மேலும் நீண்ட சந்த அமைப்புடன் கூடிய பாட்டாகக் கூர்தல் (evolution) பெற்றன. இதனைப் பாட்டானது (poetised) என்று மேனாட்டு இலக்கிய ஆய்வாளர் கூறுகின்றனர்.

**1.** **நடைன்னு நடப்பனா வடைன்னு சுடுவனா**
**வந்த விருந்தாடிக்கி இந்தான்னு குடுப்பனா**

**2.** **ஒரு காசுக்கு எண்ணெ வாங்கி**
**ஒம்பது நாள் வெளக்கெரிச்சு**
**மீந்துபோன எண்ணெயில**
**மினுக்குகொண்ட போட்டாளாம்**

3. மானத்தை வில்லா வளைச்சவன் வேணுமா
மணலைக் கவுறா திரிச்சவன் வேணுமா?

என்பனவற்றை இதற்குக் காட்டலாம். இவற்றில் பாட்டமைப் புத் தலை காட்டுவதைப் பார்க்கலாம். படித்தறியா மக்கள் பாடி வந்த நாட்டுப் புறக்கதைப் பாடல்களே காப்பியங்களாக வளர்ந்தன என்பது எல்லா மொழியிலும் காணப்படும் உண்மை. யாப்பிலக்கண வளர்ச்சிக்கும் இது பொருந்தும்.

*மாயக் காரனம்மா - கிருஷ்ணன் மகுடிக் காரனம்மா*

என்ற நாட்டுப் பாடலின் அமைப்பைப் பின்பற்றியே,

*மாயச் சூதினுக்கே -ஐயன் மனமிணங்கி விட்டான்*

என்ற பாஞ்சாலி சபதப் பகுதியைப் பாரதியாரே கூறுகின்றார். 'தமிழ்க்கு இலக்கணம் செய்யுமுன் தொல்காப்பியர், பேச்சு, இலக்கியம் ஆகிய இரு வழக்கு களையும் ஆராய்ந்தார்' என்கிறார் பனம்பாரனார்.

இதில் பேச்சு வழக்கை முதலிற் குறிப்பது அதன் முன்மையைக் குறிப்பால் உணர்த்துகிறது. தொல்காப் பியரும் உலக வழக்குக் கே உரிய குறிப்பு மொழி, பிசி, முதுசொல் முதலியவற்றின் இலக்கண அமைப்புகளைத் தம் நூலில் பாகுபாடு செய்கின்றார். பேச்சு மொழியில் உருவான அழகு அமைப்புகளே மக்களின் பாடல்களில் இடம் பெற்று, அவையே புலவர்களால் தெரிந் தெடுக்கப் பட்டு யாப்பிலக்கணமாகப் போற்றிக் கொள்ளப் பெற்றன என்பது எனது கருத்து.

சுருங்கக்கூறின், பேச்சுத் தமிழில் முந்தியது உரை, பிந்தியது பாட்டு. எழுத்துத் தமிழில் முந்தியது பாட்டு, பிந்தியது உரை. எனவே பேச்சுத்தமிழின் பாடல் வடிவத் திலிருந்து எழுத்துத் தமிழின் பாட்டு வடிவம் முகிழ்ந்து மலர்ந்திருக்கிறது.

முடிபு

அழகுணர்வு மிக்க எழுத்தறியா மக்களும் உள் நின்று எழும் உணர்வோடு தமிழைக் கையாளும் போது தாமாக அமையும் ஒலிவடிவ அமைப்பே நாளடைவில் யாப்பிலக்கண மாகச் செப்பனிடப்பட்டன. எனவே , தமிழ் யாப்பிலக்கணம், எழுத்தறியார் தம் இயல்பான வெளிப்பாட்டில் உள்ளது என்பது அறியப் படுவதால், அது பாட்டுக்குச் செயற்கையானது என்ப தும் புறம்பானது என்பதும் தமிழ் மொழிக்குப் பொருந்த வில்லை.



**உதவிய நூல்கள்**


1. 'Rhyme and metre are artificial and external addition to poetry'-R.S.Flins மேற்கோள் – புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் – வல்லிக்கண்ணன்.

2. தொகுத்தவர் : திருமதி மதனகல்யாணி ,
சண்முகானந்தம் எம்.ஏ., அவர்கள், புதுச்சேரி.

3. 'மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
ஆனை முன்வந் தெதிர்த்தவன் ஆரடா?
– தனிப்பாடல் திரட்டு

4. அடிதோறுந் தலையெழுத் தொப்பது மோனை
தொல். செய்யுளியல் – 92.

5. அஃதொழித் தொன்றின் எதுகை யாகும்
தொல். செய்யுளில் – 93.

6. யாப்பருங்கலம் – மேற்கோள் – திருப்பாமாலை

7. அப்பர் திருத்தாண்டகம் – திருவாரூர்

8. பாஞ்சாலி சபதம் – பிற்குறிப்பு

9. 'வழக்கும் செய்யுளும் ஆய் இரு முதலின்'
--பாயிரம்– தொல்காப்பியம்

10. பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோடு அவ்ஏழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்
தொல். செய்வுளியல் நூற்பா – 78

முதல் எழுத்து ஒன்றுவ மோனை; எதுகை
முதல் எழுத்து அளவோடு ஒத்தது முதலா
அதுஒழித்து ஒன்றின் ஆகும் என்ப
பல்காயனார் (யாப்பருங்கலம்–36. மேற்கோள்)

# தனித் தமிழ்

சில ஆஸ்திவந்திகள் தாங்களும் அனுபவியாமல், பிறருக் கும் உபகாரம் செய்யாமல் பொருளைப் பூட்டி வைத்துக் கொண்டு லோபஞ் செய்கிறார்கள். அவர்க ளுக்கு இகத்திலும் பரத்திலும் என்ன பாக்கியம் உண்டு? இன்னும் சிலர் எவ்வளவு தனம் இருந்தாலும் திருப்தி அடையாமல் மேலும் மேலும் ஆசைப்பட்டு நித்த தரித்திரர்கள் போல் துக்கத்தை அனுபவிக் கிறார்கள்.–*பிரதாப முதலியார் சரித்திரம், வேதநாயகம் பிள்ளை 1870*

“கணவன் மனைவியாய் இல்லாத ஆணும் பெண்ணும் அவர்களுக்கிடையே ஏற்படுத்திக் கொள்கிற உறவில் அது எத்தகைய உறவாக இருந்த போதிலும் குறையே காணாமல் எதையும் எதிர்பார்க்காமல் இருப்ப தில் கிடைப்பதில், கிடைக்க முடிவதில், பெற்றதில், பெற இயன்றதில், தருவதில், தரமுடிந் ததில் பூரணமான நிறைவுகாண முடியும்” என்று அவன் சொன்னான். – ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், செயகாந்தன் 13.9.1970.

வேதநாயகம்பிள்ளை காலத்தில் தனித்தமிழ் இயக்கமே தோன்றவில்லை. செயகாந்தன் தனித்தமிழின்பக்கம் தலை வைத்தும் படுப்பதில்லை. இவ்விருவர் தமிழிலும் எத்தனை வேறுபாடு! முன்னதைவிடப் பின்னதில் பிறமொழிக் கலப்புக் குறைந்துள்ளதே! காரணம் என்ன? தனித்தமிழ் இயக்கத்தின் விளைவு தான்! மறைமலையடிகளார்க்கு நன்றி!

ஒரே ஆசிரியர் நாற்பதாண்டுகளுக்கு முன்னர் எழுதி யதையும் இன்று எழுதுவதையும் ஒப்பிட்டுப் பார்த்தாலும் இந்த உண்மை புலப்படும்.



இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் பெருவழக் கிலிருந்த நமஸ்காரத்தை இன்று காணோம்! வணக்கம் வந்துவிட்டது! சர்வகலா சாலைகள் பல்கலைக் கழகங்க ளாயின! போஸ்டாபீஸ் அஞ்சலகமாய் விட்டது! விலா சம் முகவரியானது! பத்திரிகை,ஏடும் இதழுமாயிற்று! சினேகிதர் மறைந்து நண்பர் தோன்றினர்! புருஷனும் ஸ்திரீயும் ஆணும் பெண்ணுமாக மாறினர்! பந்துக்கள் உறவினராயினர். சௌக்கி யம் நலமாயிற்று! சப்தம் ஒலியாயிற்று! சனங்கள் மக்களாக மாறினர்! ராஜ்யங்கள் மாநிலங்களாயின! அபிப்பிரா யம் கருத் தாயிற்று! துரிதம் விரைவாக மாறியது. தனித்தமிழை எதிர்ப்போர் கூட மேற்காட்டிய நல்ல தமிழ்ச்சொற் களைத் தம்மையறி யாமலே பயன்படுத்து கின்றனர்!

திரு, நிறைவு, சிறப்பு, விருப்பம், தூய்மை, சோறு, நீர் ஆகிய நல்ல தமிழ்ச் சொற்கள் நன்கு பழகிவிட்ட இந்தக் காலத்திலும் ஸ்ரீ,திருப்தி, விசேஷம், இஷ்டம், சுத்தம், சாதம், ஜலம் ஆகிய பிறமொழிச் சொற்களை வேண்டுமென்றே வழங்கி வருவாரும் இருக்கத்தான் செய்கின்றனர்! காலவெள்ளத்தில் எத்தனை நாள் இவர்களால் எதிர்நீந்த முடியும்?

தனித்தமிழ்க் கொள்கையால் மொழி வளர்ச்சி, குன்றும்’ என்னும் குரல் இன்னும் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறது. வேண்டாத குப்பைகளையெல்லாம் மண்டையில் திணித்துக் கொள்வது அறிவு வளர்ச்சியா குமா? முன்னோர் தேடி வைத்த பொருட்கள் இல்லத்தில் அடுக்கடுக்காக இருக்க, அண்டை வீட்டுப் பொருள் களை இரவல் பெற்று ஆளுதல் குடிப்பெருமை யாகுமா? வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந் தாலும் அலையலாம்; விலங்கின் கொழுப்புக்கா அலைவார்கள்? இல்லாதவர் அன்றோ இரவல் கேட்பர்? இல்லாதவர் இரப்பதே இழிவு என்றால் இருப்பவர் இரப்பதை என்னென்பது?

தமிழ் உயர் தனிச் செம்மொழி. தனித்து இயங்க வல்லது. எப்படியோ அதில் பிறமொழிக் கலப்பு நேர்ந்து விட்டது. நேர்ந்தது இன்று நேற்று அன்று: மிகப் பழங் காலத்திலேயே பல நூறு ஆண்டுகளாகவே இந்தக் கலப்புத் தமிழில் நாம் பழகிவிட்டோம். இன்று தூய தமிழை விரும்பு கிறோம். இந்நிலையில் நாம் செய்யத் தக்கன யாவை?

பிறமொழிச் சொல் ஒன்றைத் தமிழில் ஆக்கும் போது அதற்குரிய தமிழ்ச்சொல் ஏற்கனவே இலக்கிய வழக்கிலும் உலக வழக்கிலும் உண்டா? என்று முதலில் ஆய்தல் வேண்டும். இல்லையென்றால்தான் புதிய சொல்லாக்கத்தில் இறங்க வேண்டும். File என்பதற்குக் 'கோப்பு' என்று சொல்கிறார்கள். அடங்கல் என்பது அதற்கு நேரான பழந்தமிழ்ச் சொல். பழகிய,அருமை யான, 'அடங்கல்' இருக்கும் போது புதிய கோப்பு என்னும் ஆக்கம் எதற்கு?சிற்றூர் வாழ்மக்கள் இன்றும் நகரத்தாரைவிட நல்ல தமிழ் பேசுகின்றனர். எனவே தமிழ்ச் சொல்லாக்கத்தில் முனைபவர்நகரத்தார் பிறமொழிச் சொல்லால் குறிப்ப தைச் சிற்றூர் மக்கள் எச்சொல்லால் குறிக்கின்றனர் என்று அறிதல் நல்லது. 'பரவாயில்லை' என்பதை இன்றும் அவர்கள் 'தகாதில்லை' என்றே தனித்தமிழில் கூறுகின்றனர்!

பிறமொழிச் சொற்களை மட்டும் விலக்குதல் போதாது; பிறமொழித் தன்மை வாய்ந்த சொன்முறை களையும் விலக்குதல் வேண்டும். தேர்வில் முதலாக வந்தான், வேலையை எடுத்துக் கொண்டான், கொண் டாட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டான், படிப்பிலும் விளையாட்டிலும் ஒரே போல் கெட்டிக்காரி! இவை ஆங்கிலத் தமிழ்க்கு எடுத்துக்காட்டுகள்!

தோற்றோரியல் [Tutorial] காலந்தேர் [Calendar] முதலிய எழுத்துப் பெயர்ப்புகள் பிள்ளைத்தனமானவை! எற்கெனவே இருக்கும் பாராளுமன்றம் Parlement, பாதிரி [Father] வங்கி [Bank] ஆகியனவே பல தலைமுறைக்கும் போதும்!

தனித்தமிழை விளங்கிக் கொள்ளும் தகுதியில் லாதவரிடம் அதனைக் கையாளல் கொடுமையாகும். இதனால் வெறுப்பும் குழப்பமுமே விளையும். இங்கெல் லாம் ஓரளவு தளர்த்திக் கொடுப்பது நல்லது. மொழியின் பயன் தெளிவான கருத்து மாற்றமே; பிறரை மருட்டுவ தன்று!

சொற்கள் வழக்கு வன்மையாலேயே குறித்த பொருளை உணர்த்தும் ஆற்றலைப் பெறுகின்றன. நீரை நெருப்பு என்று வழங்கிப் பழகிவிட்டால், அதுவே அதற்குப் பொருத்தமான சொல்லாய் விடும்! இந்த ஆற்றல் நன்கு வளரும் வண்ணம் நாடெங்கும் ஒரு பொருளைக் குறிக்க ஒரு சொல்லே பயன்படுத்தப்படல் வேண்டும்.



இன்சுபெக்டர் என்பதற்கு ஆய்வர் கண்காணியர், உண்ணோட்டகர், ஆணையர் எனப் பல சொற்கள் ஆங்காங்கே வழங்கப்படுகின்றன. எதுவும் நிலைத்த ஆட்சியைப் பெறவில்லை! தமிழறிவில் ஏழையானோர் சிலர், தவறான முடிபுள்ள சொற்களைப் படைத்துப் புழக்கத்தில் விடுகின்றனர். இது ஒருவகைக் 'கள்ளத் தாள்' அச்சடிப்பு! இவற்றை விலக்க அரசின் உதவியுடன், பன்மொழியறிஞர் குழுவொன்று தனித்தமிழ் அகரமுதலி யொன்றினைத் தொகுத் தல் வேண்டும். அதில் உள்ள சொற்களையே அனைவ ரும் பயன் படுத்துமாறு செய்தல் வேண்டும்.

மோனைத்தமிழில் நெஞ்சைப் பறிகொடுத்த சிலர் அறிந் தோ, அறியாமலோ பிறமொழிக் கலப்பைச் செய்துவருகின் றனர்! இந்நிலை மாற வேண்டும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்பவற்றைக் காண்க. மொழித்துறையில் செல்வாக்கு மிக்கவை நாளேடுகள். அவை மெல்ல மெல்ல நல்ல தமிழைக் கையாளல் வேண்டும். பதிப்பகங் கள் : அச்சகங்கள், வானொலி நிலையங்கள், தொலைக் காட்சி நிலையங்கள்முதலிய இடங்களில் மொழித் தூய்மை காத்தற் கெனத் தனிப் புலவர்கள் அமர்த்தப் பெறல் வேண்டும்.

எல்லாத் துறையிலும் எங்கும் தனித்தமிழ் பரவிவிட்ட பின்னர், இளமையிலிருந்தே அதில் பழகிய மக்களுக்குத் தான் தனித்தமிழிற் பேசுவதும் எழுதுவதும் எளிதாயிருக்கும்; இயல்பா யிருக்கும். இன்றைய நிலையில் எல்லோரும் கலப்புத் தமிழில் எண்ணித்தான் தனித்தமிழில் மொழி பெயர்க்கின்றோம்! இது செயற்கை தான்! எண்ணியபடி சொல்லில் வடிக்கப் பெற வில்லை.துன்பப் பேறு தான்! [கஷ்டப் பிரசவம்] இதனால் நம் சொல்லாற்றல் குறைகிறது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்! இது ஒரு வகையில் நம்மை நாமே அழித்துக் கொள்வது தான்? என்ன செய்வது? தாயின் சிறப்பினைப் பேணுவதற்கு இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. தனித்தமி ழில் காதல் கொண்டு அதனால் எழுத்துலகில் செல்வாக்கிழந்து போன நண்பர்கள் சிலர் எனக்குண்டு! 'பாவேந்தர் கூடத் தனித்தமிழை மேற்கொண்ட பிறகு ஒளிவீசவில்லை' என்று யாரோ கூறினார்களாம்! இது உண்மை என்று நான் சொல்ல முன்வரவில்லை – அவ்வகையில் நான் ஆராயாததால். ஆனால் அதில் உண்மை இருக்கக் கூடும் என்று எண்ணுகிறேன்.

இயல்பாகத் தனித் தமிழ் பேசவும் எழுதவுமான ஆற்றலை வளர்த்தல் தொடக்கப்பள்ளியிலிருந்து தொடங்கப் பெறல் வேண்டும். மன்பதையில் எந்த மாறுதலையும் எளிதாகச் செய்ய வேண்டுமானால் அதனைத் தொடங்க ஏற்ற இடம் தொடக்கப் பள்ளிகளே. பாடநூல்கள், கற்பித்தல் ஆகிய எல்லாவற்றிலும் தனித்தமிழ்நெறி விழிப்பாகக் கடைப் பிடிக்கப் பெறல் வேண்டும்.

பேச்சிலும் எழுத்திலும் தனித்தமிழைக் கடைப்பிடித்தல் அவ்வளவு எளிதன்று. எல்லார்க்கும் இயலுவதுமன்று. தமிழ்ச் சொல் எது? பிறமொழிச் சொல் எது? எனப் பிரித்தறியும் புலமை வாய்ந்தவர் மிகச்சிலரே. அவர்களும் திடுமெனத் தனித்தமிழ் கையாண்டால் — அது அவர்களுக்கு இயலுவ தாயினும் — அதனைக் கேட் போர்க்கும் கற்போர்க்கும் அந்தத் தகுதியிருக்க முடியுமா? அடிக்கடி பயன்படுகின்ற சஸ்பென்ஸ்,பிரச்சினை, இலவசம் போன்ற பல சொற்களுக்கு இன்று வரையில் தமிழ்ச் சொற்கள் ஆட்சிக்கு வரவில்லை. சபாஷ்! ஐயோ பாவம்! பரிதாபம்! அமோக வசூல்! மகத்தான சாதனை! இவை வெளிப்படுத்தும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தமிழ்ச் சொற்கள், தொடர்கள் இன்னும் புழக்கத்திற்கு வரவில்லை. இன்றை நிலையில் இவற்றைத் தமிழில் குறித்தாலும் கேட்பவர் கற்பவர் யாவர்க்கும் [பழக்கமின் மையால்] அவ்வுணர்வு உண்டாகமாட்டாது! அதனால்.

**கலப்பிலிருந்து தனி நிலைக்கு மாறுதல் சிறிது சிறிதாக நிகழ்தல் வேண்டும்.**

கலப்புத்தமிழ் கையாளுவோரைக் கடுமையாகத் தாக்குதலை விடுத்துத் தனித்தமிழ் ஆர்வமுடையோரைப் பாராட்டி ஊக்குவித்தல் வேண்டும். தனித்தமிழ் வளர்த்தல் தலைக்கடனே! ஆனால் அதனை ஒல்லும் வகையான், மெல்ல மெல்ல, செல்லும் வாயெல்லாம் செய்தலே நல்லது.



# இனிய சொல் விளையாட்டுகள்

## (வினாக்கள்)

*(பின் வரும் சொல் விளையாட்டுகளுக்கான விடைகளை நூலின் 148ஆம் பக்கம் முதல் காணலாம்)*

### ஒன்று

விலங்கு என்ற சொல்லுக்கு மிருகம் என்றும் மலை என்றும் பொருள் உண்டு. பொதுவாக விலங்கு என்றால் இவ்விரண்டில் எதைக் குறிக்கிறது என்று சொல்ல முடியாது. **அசையும் விலங்கு** என்றால் மிருகம் என்று சொல்லலாம். **அசையா விலங்கு** என்றால் மலை என்று கூறிவிடலாம். அசையும், அசையா என்ற அடைமொழிகளைக்கொண்டு அத்தொடர் குறிக் கும் பொருளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளுகிறோம். அதுபோல் பின்வரும் சொற்களின் அடைமொழிகளைக் கொண்டு அவை எவ்வெப் பொருள்களைக் குறிக்கின்றன என்று கூற முடியுமா?

**அ) பாயா வேங்கை, ஆ) பூவா மரை, இ) உடாத் தானை, ஈ) தொடாப் படை, உ) அமராப் பலகை, ஊ) இமையா நாட்டம், எ) பறவாக் கொக்கு, ஏ) நூலாக் கலிங்கம், ஐ) உண்ணாச் சுண்ணம், ஒ) தின்னா வேழம்.**

### இரண்டு

அடியில் முதல் வரிசையில் 1 முதல் 15 வரை வருவன தமிழ் நூல்களின் பெயர்கள். அவற்றை வேறு முறையிலும் குறிப்பிடுவதுண்டு. அப்பெயர்கள் இரண்டாம் வரிசையில் உள்ளன. இரண்டு வரிசையிலுள்ள நூற்பெயர்களிலும் சரியானவற்றைப் பொருத்துக.(இரண்டாம் வரிசையில் ஒருபெயர் கூடுதலாக இருக்கும். அதை விட்டுவிடுக)

| | |
|---|---|
| 1. மலைபடுகடாம் | வாக்குண்டாம் |
| 2, பட்டினப் பாலை | கொங்குவேள் மாக்கதை |
| 3. பதிற்றுப்பத்து | திருத்தொண்டர் புராணம் |
| 4. சிலப்பதிகாரம் | குட்டித் தொல்காப்பியம் |
| 5. மணிமேகலை | முதல்ஏழு சைவத்திருமுறைகள் |
| 6. அடங்கன்முறை | நரிவிருத்தம் |
| 7. திருமந்திரம் | குடிமக்கள் காப்பியம் |
| 8. பெருங்கதை | கூத்தராற்றுப்படை |
| 9. சீவகசிந்தாமணி | தமிழ் மூவாயிரம் |
| 10. திருக்கயிலாய ஞான | சேரமன்னரைப்பாடும் |
| உலா | சங்கநூல் |
| 11. நேமிநாதம் | வஞ்சிநெடும்பாட்டு |
| 12. பெரியபுராணம் | தமிழில் முதல் சமயக்காப்பியம் |
| 13. மூதுரை | மணநூல் |
| 14. இலக்கணவளக்கம் | குட்டித்திருவாசகம் |
| 15. திருக்கருவைப் | |
| பதிற்றுப்பத்தந்தாதி | ஆதியுலா |
| | சின்னூல் |

## மூன்று

**கானடை** என்பதை, கான்+அடை (காட்டைச் சேர்) என்றும், கான்+நடை (காட்டுக்கு நடத்தல்) என்றும், கால்+நடை (காலால்+நடத்தல்) என்றும் மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் கூறலாம். இதுபோல் பின்வரும் புணர்மொழிகளில் ஒவ்வொன்றையும் மும்மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் தருக.

1. வருந்தாமரை 2. புண்ணாக்கு 3. எட்டுவரையா

## நான்கு

'செய்வனத் திருந்த செய் என்பது ஆத்திச்சூடி' என்ற சொற்றொடரைப் புணர்ச்சி விதிப்படித் திருத்தினால், **'செய்வன திருந்தச் செய் என்பது ஆத்திசூடி'** என்று ஆகும். இதுபோல் பின்வரும் சொற்றொடர்களில் உள்ள புணர்ச்சிப் பிழைகளைத் திருத்திச் செம்மை செய்க.



1. என் வீடுஅருகே ஓடும் ஆறில் படகுதுறை உள்ளது.
2. துணியைத் துவைத்து துவைத்து தூயதாக வுடுத்துத் தம்பி.
3. வாழ்க வளமோடு யென்றுப் பெரியவர் வாழ்த்து கூறினார்.
4. அடையாறை ஆழபடுத்தப் போகிறார்கள் என்று கேள்வி பட்டேன்.
6. மாணாக்கர்கு இசை கற்பிக்க புலவர்த் தன் இசைவைத் தெரிவித்தார்.
7. தமிழ்நாடு அரசுக்கட்டளையின்படி சேத்துப் பட்டுவுக்கு பேருந்தில் சென்றேன்.

## ஐந்து

**உரையிடை வினாவை ஆனை**
**உணர்த்துமோர் எழுத்தும், அன்பை**
**உரிமையை இசையின் பாட்டை**
**உரைக்குமோர் சொல்லும், மேலாம்**
**மரைமலர்ச் சிறப்புப் பேரும்**
**வரிசையாய் நின்றால், உண்டால்**
**மருந்தென உயிரைக் காக்கும்**
**மலரின்பேர் வரும்அஃ தென்ன?**

இஃது ஒரு நொடி (விடுகதை). இதற்கு விடையாக அமையும் ஒரு சொல் பின் வரும் நான்கனுள் ஒன்றே. அவை **தும்பைப்பூ, தாமரைப்பூ, ஆவாரம்பூ, முருங்கைப்பூ** என்பன. அச்சொல்லைக் கண்டுபிடித்து எழுதுக.

## ஆறு

நேர், ஒலி, ஆங்கு, கதிர், இடை, மின், ஆழி, தன், இருள், உயர்ந்தோர், இலாத, ஒன்று, வந்து, நீர், ஏனையது, நேர், ஓங்கல், அகற்றும், விளங்கி, தமிழ், ஞாலத்து, ஏங்கு, தனி, தொழ, வெம்மை, அவற்றுள்.

ஒரு பழம்பாடலில் உள்ள சொற்கள் இங்கே தனித்தனியாகப் பிரிந்து தாறுமாறாகக் கிடக்கின்றன. அப் பாடலை எழுதுக.

சொற்கள் அனைத்தும் முறைப்படிப் புணர்த்தெழுதப்பட்டே இருத்தல் வெண்டும்.

(உதவிக்குச் சில ஒளிக்கீற்றுகள்: பாடல் உள்ள நூல்— தண்டியலங்காரம். பாவகை— நேரிசை வெண்பா. பாடுபொருள்— தமிழ்.)

## ஏழு

தலை, நுதல், கண், செவி, மார்பு, விரல், தோள், நெஞ்சு, இடை, கால், உயிர், ஊன், உடம்பு

ஆகிய சொற்களால் முடியும் திருக்குறட்பாக்களில் ஒவ்வொன்றை எடுத்தெழுதுக.

## எட்டு

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பத்து

என்னும் எண்ணுப்பெயர்கள் வரும் திருக்குறட் பாக்களில் ஒவ்வொன்றைமட்டும் எடுத்தெழுதுக.

## ஒன்பது

**மலர்மகளார்? மெய்வழுங்க வைப்பதெது? தீமை**
**அலதாகும் பண்பே[து]? அருந்தேன் - முலகோர்**
**உரைப்ப தெது?விடைகள் ஒன்றிணைந்தால் வேலன்**
**இருப்பிடமாம் என்னென் றியம்பு.**

மேற்கண்ட வினாவிடை என்னும் மிறைப்பாவிற்கு (சித்திர கவிக்கு) விடையாகும் ஓர் ஊர்ப் பெயரை இன்னதென்று எழுதுக.

## பத்து

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று ( 323 )

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும் ( 168 )



நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல் ( 1148 )

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு ( 397 )

வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு ( 844 )

மேற்கண்ட குறட்பாக்களில் ஓர் ஊர்ப்பெயரின் பல பகுதிகளும் சிதறிக்கிடக்கின்றன. அக்குறட்பாக்கள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு சொல்லை எடுத்து, அவற்றை முறையாகச் சேர்த்தமைத்தால், தமிழ் நாட்டில் உள்ள ஓர் ஊரின் பெயர் வரும். அந்தப் பெயரைக் கண்டுபிடித்து எழுதுக.

## பதினொன்று

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் *பாடு* (409)

இந்தக் குறள்வெண்பாவின் இறுதிச்சீராக வரும் *பாடு* என்ற சொல்லுக்குக் **காசு** என்று வாய்பாடு கூறுகிறோம். அதே சொல்

*பாடு* பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்து (1237)

என்ற குறளின் முதற் சீராக வரும்போது அதற்குத் **தேமா** என்று வாய்பாடு கூறுகிறோம். சொல் ஒன்றாயினும் அது இருக்கும் இடத்தைப் பொறுத்துச் சீர் வாய்பாடு மாறுகிறது.

இதுபோல் ஒரே சொல் தனித்து ஒரு சீராக நின்று குறட்பா முதலில் **புளிமா** என்றும், இறுதியில் **பிறப்பு** என்றும் வாய்பாடு பெறும் இடங்கள் திருக்குறளில் உள்ளன. அவை அனைத்தையும் எடுத்துக் காட்ட முடியுமா?

## பன்னிரண்டு

பின்வரும் சுவையான பாடற்பகுதிகளை அடியிற் காணப்படும் நூற்பெயர்களில் சரியானவற்றோடு பொருத்துக.

க) "செக்கச் சிவந்த கழுநீரும் செகத்தில் இளைஞர் ஆருயிரும் ஒக்கச் செருகும் குழல்மடவீர்

உ) "பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும் பாதக் கமலங்கள் காணீரே!

ங) "அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்ற வல்லார்?

ச) "பாவையர் கை தீண்டப் பணியாதார் யாவரே?

ரு) "ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே!

சு) "பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!

எ) "தானையால் கண்புதைத்தான் தார் வழுதி

அ) "நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே!

கூ) "நாளும் நாம் சாகின்றோமால் நமக்கு நாம் அழாத தென்னே!

க0) "வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

நந்தி கலம்பகம், சீவக சிந்தாமணி, குண்டலகேசி, திருவாசகம், கம்பராமாயணம், பெரியபுராணம், பெரியாழ்வார் திருமொழி, நளவெண்பா, திருமந்திரம், புறநானூறு, கலிங்கத்துப்பரணி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ். முத்தொள்ளாயிரம்

## பதின்மூன்று

பின் வருமாறு வினவியவர் யார்? இடம் சுட்டுக.

1. "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே?
2. "காடு விளைந்தென்ன மச்சான் நமக்குக் கையுங் காலுந்தானே மிச்சம்?



3. "இரந்துண்ணும் அளவை ஈன்மரோ இவ்வுலகத்தானே?
4. "பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே?
5. "திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?
6. "தாய்மொழிக்குப் பழி வந்தால் சகிப்ப துண்டோ?
7. "கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ?
8. "யாரே அழகுக்கு அழகு செய்வார்?
9. "உண்டோ குரங்கு ஏற்றுக்கொள்ளாத கொம்பு?
10. "எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?

## பதினான்கு

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் ஆகிய நான்கு இயற்சீர்களும் ஒருங்கே அமைந்தனவாகத் திருக்குறளில் எத்தனைக் குறட்பாக்கள் உள்ளன? அவை யாவை? அவற்றின் எண்களை மட்டும் எழுதுக.

## பதினைந்து

**அகமாசு நீங்கான் அருள்நெறி நோக்கான்**
**நகுமாறு பெற்றான் சிறை**

திருக்குறளிலிருந்து எடுக்கப்பட்ட சொற்களிலிருந்து மேற்கண்ட குறள் உருவாக்கப்பட்டிருக்கிறது. அச்சொற்களையுடைய திருக்குறட்பாக்களில் ஒவ்வொன்றை எடுத்தெழுக.

## பதினாறு

தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் ஆகிய நால்வகைக் காய்ச் சீர்களும் ஒருங்கே (ஒரே குறளில்) அமைந்தனவாகத் திருக்குறளில் எத்தனைக் குறட்பாக்கள் உள்ளன? அவை யாவை?

## பதினேழு

**இடி,வாளி, வேல்,வாள், வெள்ளம்,**
**இலை,கயச் சொற்கள் ஈறும்**
**வடு,யாறு, மையல், திங்கள்**
**வருசொற்கள் முதலும் சேர்ந்து**
**முடிவுறும் பெயராள் மூண்ட**
**விடுதலை உணர்வைக் காந்தி**
**அடிகட்கே அளித்தாள். அந்த**
**அருந்தமிழ் அன்னை யார்சொல்?**

இந்த வினாவுக்குரிய விடையைத் தருக.

## பதினெட்டு

**எதிர்ப்பைக்கண் டஞ்சி இடைக்கண் வினைவிடின்**
**எங்ஙனம் எய்தும் விறல்?**

இக்குறட்பா, திருக்குறளில் வரும் சொற்களைக் கொண்டே ஆக்கப் பட்டிருக்கிறது. இதில் உள்ள சொற்கள் வரும் திருக்குறட் பாக்களின் எண்களை எழுதுக. (ஒருசொல்லுக்கு ஒரு குறளின் எண் போதும்)

## பத்தொன்பது

கரந்துறை செய்யுள்

**நெஞ்சம் துணிவால் நிறைந்தோர்தாம் துன்பத்திற்**
**கஞ்சா வழித்துணையாய் ஆவார்கள் - எஞ்சாத்**
**துணையாக அல்லாதார் தோன்றுவரோ? யாரே**
**புணையுடையப் போவார் கடல்?**

இந்த நேரிசை வெண்பாவிற்குள் ஒரு திருக்குறட்பா மறைந்திருக்கிறது. இப்படி இருப்பதைக் *கரந்துறை செய்யுள்* என்பார்கள் (தண்டியலங்காரம் 98). அந்தக் குறட்பாவைக் கண்டுபிடித்து எழுதுக.



## இருபது

அனைத்துச் சொற்களையும் புணர்த்தெழுதுக:

ஒரு நெல்லிக்கனி அரியது ஆதலை எனக்கு அறிவியாமல் நின் உள்ளத்துள் தாங்கி யான் சாதல் நீங்கி வாழ அதனை எனக்கே அளித்தனை அதனால் தன்னை அணுகினாரை உடன் கொல்லும் நஞ்சைத் தான் உள்கொண்டும் ஊறுபடாத சிவபிரான் போல் நீ நெடுநாள் நிலைபெற்று இருப்பாயாக என்று ஔவை அருளிய வாழ்த்து உரைப் பொருளை உள் நுழைந்து நோக்குங்கால்பிறர் வாழ்தல் நயந்து நன்று ஆற்றுவோர் அவ் விழுமிய நினைவு ஆகிய அருமருந் தால் நீடு வாழ்வர் என்னும் உளவியல் நுட்பம் தெளிவாகும்.

## இருபத்தொன்று

வல்லொற்றுகள் (க் ச் ட் த் ப் ற் ) இல்லாத பாடல்கள் இசைக்கு மிகவும் ஏற்றவை. இந்த இயல்பை ***இழைபு*** என்னும் வனப்பு என்பர் தொல்காப்பியர். இதுபோல் இழைபு அமைந்த குறட்பாக்கள் அறத்துப்பாலில் மட்டும் எத்தனை உள்ளன? அவை யாவை?

## இருபத்திரண்டு

தமிழ்நாட்டின் ஊர்ப்பெயர்களில் பல இங்கு வந்த அயற் பண்பாட்டினரால் திரிக்கப்பட்டன. மொழிபெயர்க்கப்பட்டன. தேவாரம் முதலிய பழந்தமிழ் நூல்களில் தமிழாகக் காணப்படும் பின்வரும் ஊர்ப்பெயர்கள் இன்று எவ்வாறு வழங்கப்படுகின்றன?

**திருத்தவத்துறை, புள்ளிருக்குவேளூர், முதுகுன்றம், மல்லை, தகடூர், திருவேரகம், மறைக்காடு, திருநெல்வாயில், திருச்சோற்றுத்துறை, குடமூக்கு.**

## இருபத்து மூன்று

திருக்குறளில், சொற்கள் புணர்ந்த நிலையில் இடையிடையே பின்வரும் சொற்கள் தோற்றமளிக்கும். அக்குறட் பாக்களைக் கூற முடியுமா?

**பானை, பாரை, முடையார், குடையார், வந்தவன், வறியான், கரும்பொருள், வெவ்வினை, சாவாமை, கண்டனை.**

## இருபத்து நான்கு

பின்வருவன தமிழிலக்கண உரைகளில் காணப்படும் எடுத்துக் காட்டுத் தொடர்கள். அவற்றைப் பிரித்தெழுதுக. காட்டு: அழக்குடம் = அழன் + குடம்

**அட்டூண்டுழனி, ஈமுக்கடுமை, உரியவுப்பு, கருப்புவேலி, குண்டுகட்டு, குளாம்பல், குறுந்தாட்டு, தேத்திறால், மராடி, வேணீர்.**

## இருபத்தைந்து

சேர்த்தெழுதுக.

1. அரசு+பேருந்து,
2. பாய்+யாது?
3. கண்+இல்+தந்தை,
4. கை+நீட்டாதே,
5. இரும்பு+உலக்கை,
6. நம்+நூல்,
7. தாள்+தொழுதான்,
8. தூண்+நெடியது,
9. கள்+தீயது,
10. வேட்கை+அவா.



## இருபத்தாறு

*கரந்துறை செய்யுள்*

ஒரு செய்யுளின் எழுத்துகளும் சொற்களும் பிறிதொரு செய்யுளில் ஆங்காங்கே மறைந்திருப்பது கரந்துறை செய்யுள் என்னும் மிறைக்கவியாகும். பின்வரும் வெண்பாவில் மறைந்திருக்கும் திருக்குறட்பாவினைக் கண்டுபிடித்து எழுதுக.

**நோக்குயர்ந்த நெஞ்சத்தார் நூலறிந்து காதல்**<br>
**பாக்கடைபோ லுண்டல் பயனாக - தீக்கு**<br>
**ளறிந்தும் விரலிடவே யஞ்சுமவர் தீய**<br>
**செறிந்தவுணர் வெய்துவரோ? செப்பு**

## இருபத்தேழு

திருக்குறட்பாக்களில் இறுதிச்சீராக உள்ள சில, அடியில் தரப்படுகின்றன. அவற்றில் ஒவ்வொன்றுக்கும் (நேர் எதிரான பொருள் தரும்) எதிர்ச்சொற்களை இறுதிச் சீராக உடைய குறட்பா ஒவ்வொன்று எழுதுக.

எளிது, ஒளி, கடை, தாழ்வு, தீது, நட்பு, பெரிது, மேல்.

காட்டு: *அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை*<br>
*படைத்தகையால் பாடு **பெறும்*** (768)

என்ற குறளின் இறுதிச்சீர் **பெறும்**. இதற்கு எதிர்ச்சொல்லான **தரும்** என்பதை இறுதிச்சிராக உடைய குறள்களில் ஒன்று,

*பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை*<br>
*எல்லா அறமும் **தரும்*** (296)

## இருபத்தெட்டு

**பாலான், உடுக்கை, பலர்பால் இறுதி,செங்**
**கோலான், கொடும்படைப்பேர் கூடினால் - மேலோர்நாள்**
**சீரார் மணிமொழியார் தெய்வ அருள்பெற்ற**
**ஊராம்.அஃ தென்னென் றுரை.**

மேலே உள்ளது ஒரு நொடி (விடுகதை), அதற்கு விடை கண்டு எழுதுக.

## இருபத்தொன்பது

அரம்–அறம், இரை–இறை, உரை–உறை, கல்–கள், கோல்–கோள், தோல்–தோள், பணி–பனி, மரம்–மறம், வால்–வாள், விரல்–விறல்

ஆகியவை ஓரெழுத்து வேறுபாட்டால், வேறுபட்ட பொருள்களை உணர்த்தும் பெயர்ச்சொற்களாகத் திருக்குறளில் வருகின்றன. அவை வரும் குறட்பாக்களின் எண்களில் ஒவ்வொன்றை மட்டும் எழுதுக.

## முப்பது

குறித்த பொருளுக்கேற்றபடி சொற்களைப் புணர்த்தெழுதுக

1. கத்தி + பிடி (கத்தியைப் பிடி) =
   கத்தி + பிடி (கத்தியினது பிடி) =

2. நீர் + குடி (நீரைக் குடி) =
   நீர் + குடம் (நீரை உடைய குடம்) =

3. கால் + தூக்கு (காலைத் தூக்கு) =
   கால் + தூக்கு (ஒரு தூக்கில் கால் பகுதி) =

4. ஆடு + கால் (ஆட்டினது கால்) =
   ஆடு + கால் (ஆடுகின்ற கால்) =



5. நாள் + காட்டி (நாளைக் காட்டுவது) =
   நாள் + குறிப்பு (நாளினது குறிப்பு) =

6. பணம் + கொடை ( பணம் தரும் கொடை) =
   பணம் + கொடு ( பணத்தைக் கொடு) =

7. கனி + சுவை (கனியினது சுவை) =
   கனி + சுவை (கனியைச் சுவை) =

8. தலை + கால் (தலையும் காலும்) =
   தலை + காட்டு (தலையைக் காட்டு) =

9. செம்பு + கம்பி (செம்பால் ஆகிய கம்பி) =
   செம்பு + கலந்தான் (செம்பைக் கலந்தான்) =

10. மணல் + பரப்பு (மணலைப் பரப்பு) =
    மணல் + பரப்பு (மணல் நிறைந்த நிலப்பகுதி) =

# இனிய சொல் விளையாட்டுகள்

(விடைகள்)

*ஒன்று*

அ) பாயா வேங்கை – வேங்கைமரம், ஆ) பூவா மரை – மான், இ) உடாத் தானை – போர்ப்படை, ஈ) தொடாப் படை – தோல்நோய் அல்லது கலப்பை, உ) அமராப் பலகை – கேடகம், ஊ) இமையா நாட்டம் – விருப்பம், எ) பறவாக் கொக்கு – மாமரம் அல்லது குதிரை, ஏ) நூலாக் கலிங்கம் – பட்டாடை அல்லது கலிங்கநாடு, ஐ) உண்ணாச் சுண்ணம் – மணப்பொடி, ஒ) தின்னா வேழம் – யானை

*இரண்டு*

| | | |
|---|---|---|
| 1. | மலைபடுகடாம் | கூத்தராற்றுப்படை |
| 2. | பட்டினப்பாலை | வஞ்சிநெடும்பாட்டு |
| 3. | பதிற்றுப்பத்து | சேரமன்னரைப் பாடும் சங்நூல் |
| 4. | சிலப்பதிகாரம் | குடிமக்கள் காப்பியம் |
| 5. | மணிமேகலை | தமிழில் முதல் சமயக் காப்பியம் |
| 6. | அடங்கன்முறை | முதல் ஏழு சைவத்திருமுறைகள் |
| 7. | திருமந்திரம் | தமிழ் மூவாயிரம் |
| 8. | பெருங்கதை | கொங்குவேள் மாக்கதை |
| 9. | சீவக சிந்தாமணி | மணநூல் |
| 10. | திருக்கயிலாயஞானஉலா | ஆதியுலா |
| 11. | நேமிநாதம் | சின்னூல் |
| 12. | பெரியபுராணம் | திருத்தொண்டர் புராணம் |
| 13. | மூதுரை | வாக்குண்டாம் |
| 14. | இலக்கணவிளக்கம் | குட்டித்தொல்காப்பியம் |
| 15. | திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி | குட்டித்திருவாசகம் |

(இரண்டாம் வரிசையில் கூடுதலாக உள்ள சொல்: நரிவிருத்தம்)

*மூன்று*

வருந்தாமரை=1. வரும் + தாமரை – வரும் தாமரை (மலர்)
2. வருந்தா + மரை – துன்புறாத மான்
3. வரும் + தாம் + மரை – வரும் தாவும் மான்
4. வருந்து + ஆ + மரை – துன்புறும் பசுவும் மானும்
5. வரும் + தாமர் + ஐ – வருகின்ற மாலை யணிந்தவரை

புண்ணாக்கு= 1. புண் + நாக்கு – புண்ணுடைய நாக்கு
2. புண் + ஆக்கு – புண்படுத்து
3. புள் + நாக்கு – பறவையின் நாக்கு

எட்டுவரையா= 1. எட்டு + வரையா? – எட்டு மலைகளா?, எட்டுகின்றமலையா?,எட்டுக்கோடுகளா?, எட்டு வரையிலுமா?
2. எள் + துவரை + ஆ = எள்ளும் துவரையும் பசுவும்,
3. எட்டுவர் + ஐயா – அடைவர் ஐயா
4. எட்டு + வரை + ஆ – எட்டு மலைப் பசுக்கள்
5. எள் + துவரையா? – எள்ளும் துவரையுமா?, இகழப்படும் துவரையா?
6. எள் + துவரை + யா – எள்ளும் துவரையும் யாமரமும்
7. எள் + துவர் + ஐயா – எள்ளானது துவர்ப்பாய் உள்ளது ஐயா

இவற்றில் ஒவ்வொன்றிலும் எவையேனும் மூன்று விடையாக அமையும்.

### *நான்கு*

1. என் வீட்டருகே யோடு மாற்றிற் படகுதுறை யுள்ளது.
2. துணியைத் துவைத்துத் துவைத்துத் தூயதாக வுடுத்து தம்பி.
3. வாழ்க வளமோ டென்று பெரியவர் வாழ்த்துக் கூறினார்.
4. அடையாற்றை யாழப்படுத்தப்போகிறார்களென்று கேள்விப்பட்டேன்.
5. மரங்களடர்ந்த காட்டி லாட்டுக்குட்டி துள்ளிக் குதித்தது.
6. மாணாக்கற் கிசை கற்பிக்கப் புலவர் தம் மிசைவைத் தெரிவித்தார்.
7. தமிழ்நாட்டரசு கட்டளையின்படிச் சேத்துப்பட்டிற் கரசு பேருந்திற் சென்றேன்.

### *ஐந்து*

விடை: **ஆவாரம்பூ.** வினா வெழுத்தாகவும், பசுவை உணர்த்து வதாகவும் உள்ள எழுத்து **ஆ.** அன்பு, உரிமை, இசைப்பாட்டு வகை, என்ற பொருள்களை உடைய சொல் **வாரம்.** தாமரை மலரைச் சிறப்பித்துச் சொல்லப்படும் பெயர் **பூ.** இவை மூன்றும் வரிசையாய் நின்றால் ஆவாரம்பூ என்ற மருத்துவப் பண்புடைய மலரின் பெயர் வரும்.

### *ஆறு*

பிரிந்து கிடக்கும் சொற்களைக்கொண்ட பாடல்:

**ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது**
**தன்னே ரிலாத தமிழ்**

### *ஏழு*

தலை: (குறள் எண்) 9, 43, 47, 57, 151, 295, 317, 322, 325, 411, 444, 488, 579, 657, 687, 736, 761, 814, 852, 891, 1031.

நுதல்: 1231.

கண்: 146, 573, 574, 581, 705, 1084, 1086, 1136, 1170, 1175, 1175, 1177, 1178, 1179, 1231, 1232, 1239, 1283.



செவி: 418.
மார்பு: 1288, 1311.
விரல்: 1261,
தோள்: 916, 917, 1105, 1106, 1233, 1234, 1235,
நெஞ்சு: 281, 1081, 1200, 1242, 1246, 1248, 1249, 1264, 1284, 1292, 1295, 1296, 1298.
இடை: 37.
கால்: 14, 1270.
ஊன்: 258.
உடம்பு: 80, 1029.
உயிர்: 940, 1070, 1213, 1230.

இவற்றில் ஒவ்வொன்று விடையாக அமையும்.

### *எட்டு*

பின்வரும் எண்ணுப் பெயர்கள் வரும் குறட்பாக்கள்:

ஒன்று: 87, 109, 111, 118, 119, 128, 155, 156, 168 ,209, 221, 232, 233, 248, 281, 291 ,300, 323, 324, 334, 337, 344 , 357, 380, 438, 462, 634, 758, 773, 800, 825, 831, 833,838,839,875,932,934,1006,1007 ,1035,1042,1049, 1080,1091, 1095, 1146, 1195, 1196, 1202, 1216, 1241, 1247, 1252 ,1255, 1257, 1266, 1269, 1271, 1273,1 274,1 275, 1325.

இரண்டு:5,19,374,392,393,402,455,581,662,674, 737,760, 875, 920,992,1022,1091,1196,1247.

மூன்று:360, 383, 682, 684, 688, 941, 952, 1085.

நான்கு: 35, 146, 382, 390, 501, 513, 605, 743, 766, 950, 953

ஐந்து: 6, 24, 25, 27, 43, 126, 271, 343, 632, 675, 738, 939, 983, 1101.

ஆறு: 381, 560.

ஏழு: 62,1 07, 1190, 1269, 1278.

எட்டு: 9, 392, 910.

பத்து: 450, 817.

இவற்றில் ஒவ்வொன்று விடையாக அமையும்.

## ஒன்பது

மலர்மகள் – **திரு.** மெய் ( உடம்பு ) வழங்க வைப்பது – **ஆவி.** தீமை அலது ஆகும் பண்பு – **நன்(மை).** அருந்து என்று உலகோர் உரைப்பது – **குடி.** எனவே அவ்வூர்ப் பெயர் **திருஆவிநன்குடி** அல்லது **திருவாவிநன்குடி** (பழனி) ('பழநி' என்று தந்நகரமிட்டு எழுதுவது பிழை)

## பத்து

அழுக்கா றெனவொரு பாவி **திருச்**செற்றுத்
தீயுழி யுய்த்து விடும் (168)

**வெண்**மை யெனப்படுவ தியாதெனி னொண்மை
யுடையம்மா மென்னுஞ் செருக்கு (844)

**நெய்**யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல் (1148)

ஒன்றாக **நல்**லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று (323)

யாதானு நாடாமல் **ஊர்**ஆமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு (397)

மேற்கண்ட குறட்பாக்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களைச் சேர்த்தால் **திருவெண்ணெய்நல்லூர்** என்ற ஊரின் பெயர் வரும்.

## பதினொன்று

திருக்குறளில் தனித்து ஒருசீராக நின்று புளிமா என்ற வாய் பாட்டையும், அதுவே குறட்பா இறுதியில் நின்று பிறப்பு என்ற வாய் பாட்டையும் பெறும் சொற்கள் **விருந்து, விரைந்து** என்னும் இரண்டே.

**1. விருந்து** முதலில் வரும் குறட்பா:

*__விருந்து__ புறத்ததாத் தானுண்டல் சாவா*
*மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.* (82)



**விருந்து** இறுதியில் வரும் குறட்பாக்கள்:

*மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் __விருந்து.__* (90)

*காதலர் தூதொடு வந்த கனவினுக்*
*கியாதுசெய் வேன்கொல் __விருந்து__* (1211)

*வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து*
*மாலை யயர்கம் __விருந்து.__* (1268)

2. **விரைந்து** முதலில் வரும் குறட்பா:

*__விரைந்து__ தொழில்கேட்கு ஞால நிரந்தினிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்* (648)

**விரைந்து** இறுதியில் வரும் குறட்பாக்கள்:

*எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்*
*விற்றற் குரியர் __விரைந்து.__* (1080)

*துஞ்சுங்காற் றோண்மேலராகி விழிக்குங்கா*
*னெஞ்சத்த ராவர் __விரைந்து.__* (1218)

## பன்னிரண்டு

க) "செக்கச் சிவந்த கழுநீரும் செகத்தில் இளைஞர்
ஆருயிரும் ஒக்கச் செருகும் குழல்மடவீர்"
– *கலிங்கத்துப்பரணி.*

உ) "பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும் பாதக்
கமலங்கள் காணீரே!" – *பெரியாழ்வார் திருமொழி.*

ங)"அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்றவல்லார்?"
– *கம்பராமாயணம்.*

ச) "பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே?"
–*நளவெண்பா.*

ரு) "ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப்பார்த்
திருக்கும் உயிரோவியமே!"
–*மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.*

சா ) "பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல்
அதனினும் இலமே!" – *புறநானூறு.*

எ) "தானையால் கண்புதைத்தான் தார் வழுதி"
– *முத்தொள்ளாயிரம்.*

அ) "நீரினில்மூழ்கிநினைப்பொழிந்தார்களே" –*திருமந்திரம்.*

கூ) "நாளும்நாம் சாகின்றோமால் நமக்குநாம் அழாத தென்னே!" – *குண்டலகேசி*

க0) "வீடும் வேண்டா விறலின் விளங்கினார்."
– *பெரியபுராணம்.*

## *பதின்மூன்று*

1. "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே?"
– திருநாவுக்கரசர், (தேவாரம்.)
2. "காடு விளைந்தென்ன மச்சான் நமக்குக் கையுங் காலுந்தானே மிச்சம்?"
– பட்டுக்கோட்டைக் கலியாண சுந்தரம்.
3. "இரந்துண்ணும் அளவை ஈன்மரோ இவ் வுலகத்தானே?"
– சேரமான் கணைக்காலிரும்பொறை, (புறநானூறு 74)
4. "பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே?"
– கவுந்தியடிகள், (சிலம்பு. 14–59)
5. "திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?"
–ஆண்டாள், (நாச்சியார் திருமொழி, 7–1)
6. "தாய்மொழிக்குப் பழி வந்தால் சகிப்ப துண்டோ?"
– உதாரன், (புரட்சிக்கவி, பாவேந்தர் பாடல்கள்–1)
7. "கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ?"
– தலைவி, (திருக்குறள்–1293)
8. "யாரே அழகுக்கு அழகு செய்வார்?"
–குமரகுருபரர், (நீதி நெறி விளக்கம்12)
9. "உண்டோ குரங்கு ஏற்றுக் கொள்ளாத கொம்பு?"
– கம்பர், தனிப்பாடல்
10. "எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?"
–தலைவன், குறுந்தொகை–40.



## *பதினான்கு*

விடை: தேமா, புளிமா, கருவிளம் கூவிளம் ஆகிய நான்கு இயற்சீர்களும் ஒருங்கே அமைந்தனவாகத் திருக்குறளில் 116 குறட்பாக்கள் உள்ளன. அவற்றின் எண்கள் வருமாறு:

4, 10, 23, 32, 39, 63, 80, 87, 107, 121, 153, 168, 177, 191, 193, 208, 224, 239, 269, 273, 280, 337, 338, 342, 347, 366, 381, 391, 418, 420, 425, 427, 444, 451, 457, 463, 467, 469, 512, 535, 545, 572, 585, 591, 599, 603, 618, 634, 642, 644, 651, 657, 664, 678, 696, 707, 709, 718, 755, 760, 793, 796, 801, 803, 812, 842, 846, 856, 863, 864, 882, 914, 920, 937, 941, 952, 954, 961, 975, 980, 982, 994, 1004, 1010, 1051, 1054, 1063, 1085, 1086, 1103, 1105, 1106, 1118, 1120, 1122, 1141, 1142, 1168, 1181, 1193, 1208, 1213, 1231, 1232, 1240, 1259, 1266, 1271, 1277, 1290, 1292, 1301, 1304, 1309, 1315, 1324.

## *பதினைந்து*

**அகமாசு நீங்கான் அருள்நெறி நோக்கான்**
**நகுமாறு பெற்றான் சிறை**

என்ற குறட்பாவில் வரும் சொற்களைக் கொண்டுள்ள திருக்குறட் பாக்கள் வருமாறு:

**அகம்**: 78, 79, 93, 277, 298, 708, 786, 830, 1305, 1323.
**மாசு**: 34, 106, 199, 278, 311, 312, 352, 601, 646, 649, 700.
**நீங்கான்**: 864.
**அருள்**: 176, 241–248, 251, 252, 254, 285, 757,914, 938.
**நெறி**: 6, 324, 356, 477.
**நோக்கான்**: 528, 865.
**நகும்**: 271, 774, 1040, 1094, 1095, 1098.
**ஆறு**: 43, 161, 219, 222, 242, 324, 397, 465, 478, 662, 797, 849, 932, 943, 1321.
**பெற்றான்**: 58, 226, 268, 943.
**சிறை**: 57, 499, 569.

## *பதினாறு*

தேமாங்காய், புளிமாங்காய் கருவிளங்காய் , கூவிளங்காய் ஆகிய நான்கு காய்ச்சீர்களும் ஒருங்கே வரும் திருக்குறட்பாக்கள்:

மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை

பீடழிய வந்த விடத்து (968)

உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ் (1079)

பருவரலும் பைதலுங் காணான்கொல் காமன்
ஒருவர்க ணின்றொழுகு வான் (1197)

## பதினேழு

இடி, வாளி, வேல், வாள், வெள்ளம், இலை, கய ஆகிய சொற்களின் ஈற்றெழுத்துகள் முறையே **டி, ளி, ல், ள், ம், லை, ய** ஆகியன.

வடு, யாறு, மையல், திங்கள் ஆகிய சொற்களின் முதலெழுத்துகள் முறையே **வ, யா, மை, தி** ஆகியன.

இவ்வெழுத்துகளை முறைப்படிச் சேர்த்தால் வரும்பெயர்: **தில்லையாடி வள்ளியம்மை**

## பதினெட்டு

**எதிர்ப்பைக்கண் டஞ்சி இடைக்கண் வினைவிடின்
எங்ஙனம் எய்தும் விறல்?**

என்னும் குறட்பாவில் உள்ள சொற்களும் அவை வரும் திருக்குறட் பாக்களின் எண்களும் வருமாறு:
**எதிர்ப்பை** – குறள் எண்: 221, **கண்டு**–399, 580, 667, 1101, 1240, 1259, 1291. **அஞ்சி**–44, 325, 680, 730, 741, 883. **இடைக்கண்**–473. **வினை**–5, 33, 201, 207, 209, 210, 244... இன்னும் பல உள. **விடின்**–17, 238, 280, 1159. **எங்ஙனம்**–251. **எய்தும்**–75, 145, 309, 610, 676, 1024. விறல்–180.

## பத்தொன்பது

கரந்துறை செய்யுள்

**நெஞ்சம் துணிவால் நிறைந்தோர்தாம் துன்பத்திற்
கஞ்சா வழித்துணையாய் ஆவார்கள் - எஞ்சாத்
துணையாக அல்லாதார் தோன்றுவரோ? யாரே
புணையுடையப் போவார் கடல்?**

இவ்வெண்பாவில்,

*துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி* –குறள்1299



என்ற திருக்குறட்பாவின் சொற்கள் ஆங்காங்கே அமைந்துள் ளமையைக் காணலாம்.

## இருபது

அனைத்துச் சொற்களையும் புணர்த்தெழுதுதல் :

**ஒரு நெல்லிக்கனி யரியதாதலை யெனக்கறிவியாம னின்னுள்ளத்துட் டாங்கி யான் சாதனீங்கி வாழ வதனை யெனக்கே யளித்தனை யதனாற் றன்னை யணுகினாரை யுடன் கொல்லு நஞ்சைத் தானுட்கொண்டு மூறுபடாத சிவபிரான் போனீ நெடுநா ணிலைபெற் றிருப்பாயாக வென் றௌவை யருளிய வாழ்த்துரைப் பொருளை யுண்ணுழைந்து நோக்குங்காற் பிறர் வாழ்த னயந்து நன்றாற்றுவோ ரவ் விழுமிய நினைவாகிய வருமருந்தா னீடுவாழ்வ ரென்னு முளவிய னுட்பந் தெளிவாகும்.**

## இருபத்தொன்று

அறத்துப் பாலில் உள்ள **இழைபு** என்னம் வனப்பு அமைந்த (வல்லொற்றுப் பயிலாத ) குறட்பாக்கள் 25. அவற்றின் எண்கள்: 3, 17, 19, 33, 84, 89, 96, 98, 99, 116, 147, 150, 181, 197, 198, 219, 222, 223, 237, 240, 296, 308, 320, 337, 341.

## இருபத்திரண்டு

| | | |
|---|---|---|
| திருத்தவத்துறை | – | லால்குடி |
| புள்ளிருக்குவேளூர் | – | வைத்தீசுவரன் கோயில் |
| முதுகுன்றம் | – | விருத்தாசலம் |
| மல்லை | – | மகாபலிபுரம் |
| தகடூர் | – | தருமபுரி |
| திருவேரகம் | – | சுவாமிமலை |
| மறைக்காடு | – | வேதாரண்யம் |
| திருநெல்வாயில் | – | சிவபுரி |
| திருச்சோற்றுத்துறை | – | திருச்சாத்துறை |
| குடமூக்கு | – | கும்பகோணம் |

## இருபத்து மூன்று

சொற்கள் புணர்ந்த நிலையில் பின்வரும் சொற்கள் தோற்றமளிக்கும் திருக்குறட்பாக்களின் எண்கள்:

பானை–519. பாரை–448, 1040, 1058, 1067. முடையார்–262, 415, 430, 534, 970. குடையார்–562. வந்தவன்–764. வறியான்–437, 474. கரும்பொருள்–462. வெவ்வினை–491, சாவாமை–611. கண்டனை–277, 387.

## இருபத்து நான்கு

| | | |
|---|---|---|
| அட்டூண்டுழனி | – | அட்டு + ஊண் + துழனி |
| ஈமுக்கடுமை | – | ஈம் + கடுமை |
| உரியவுப்பு | – | உரி + உப்பு |
| கருப்புவேலி | – | கரும்பு + வேலி |
| குண்டுகட்டு | – | குண்டு + கண் + டு |
| குளாம்பல் | – | குளம் + ஆம்பல் |
| குறுந்தாட்டு | – | குறுமை + தாள் + டு |
| தேத்திறால் | – | தேன் + இறால் |
| மராடி | – | மரம் + அடி |
| வேணீர் | – | வேட்கை + நீர் |

## இருபத்தைந்து

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசு + பேருந்து | = | அரசுபேருந்து |
| 2. | பாய் + யாது? | = | பாயாது |
| 3. | கண் + இல் + தந்தை | = | கண்ணி றந்தை |
| 4. | கை + நீட்டாதே | = | கைந்நீட்டாதே |
| 5. | இரும்பு + உலக்கை | = | இருப்புலக்கை |
| 6. | நம் + நூல் | = | நந்நூல் |
| 7. | தாள் + தொழுதான் | = | தாடொழுதான் |
| 8. | தூண் + நெடியது | = | தூணெடியது |
| 9. | கள் + தீயது | = | கட்டீயது, கஃடீயது |
| 10. | வேட்கை + அவா | = | வேணவா. |

## இருபத்தாறு

மறைந்துள்ள குறள்:

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து (1128)



## இருபத்தேழு

சில குறட்பாக்களின் இறுதிச் சீர்களும், அவற்றின் எதிர்ச் சொற்களை இறுதிச்சீராகக் கொண்ட குறட்பாக்களின் எண்களும் வருமாறு:

எளிது x அரிது: 7, 8, 16, 29, 101, 227, 235, 248, 377, 419, 499, 606, 647, 693, 762, 823, 843, 886, 1049.

ஒளி x இருள்: 999.

கடை x தலை: 9, 43, 47, 57, 151, 295, 317, 322, 325, 411, 444, 488, 579, 657, 687, 736, 761, 814, 852, 891, 1031.

தாழ்வு x உயர்வு: 135, 595, 963.

தீது x நன்று: 49, 108, 150, 152, 157, 197, 222, 236, 259, 297, 308, 323, 655, 815, 967.

நட்பு x பகை: 434, 861, 867, 872, 1225.

பெரிது x சிறிது: 1075, 1301.

மேல் x கீழ்: 1074, 1078, 1079.

## இருபத்தெட்டு

பாலான்–(பால் தரும்) பசு–*ஆ.* உடுக்கை–*உடை.* பலர்பால் இறுதி–பலர்பாலை உணர்த்தும் விகுதி *ஆர்.* செங்கோலான்–*கோ.* கொடும்படை–(வளைந்த படைக்கருவி) *வில்.*

*ஆ + உடை + ஆர் + கோ + இல் = ஆவுடையார்கோவில்.*

## இருபத்தொன்பது

| | |
|---|---|
| 1. அரம்–(வரும் குறள் எண்) 567. | அறம்–23. |
| 2. இரை–946. | இறை–388. |
| 3. உரை–193. | உறை–559. |
| 4. கல்–38. | கள்–921. |
| 5. கோல்–118. | கோள்–9. |
| 6. தோல்–80. | தோள்–149. |
| 7. பனி–1223. | பணி–1121. |
| 8. மரம்–78. | மறம்–766. |
| 9. வால்–2. | வாள்–334. |
| 10. விரல்–1261. | விறல்–180. |

*முப்பது*

1. கத்தி + பிடி (கத்தியைப் பிடி) = கத்தி பிடி
கத்தி + பிடி (கத்தியினது பிடி) = கத்திப்பிடி

2. நீர் + குடி (நீரைக் குடி) = நீர் குடி
நீர் + குடம் (நீரை உடைய குடம்) = நீர்க்குடம்

3. கால் + தூக்கு (காலைத் தூக்கு) = காறூக்கு
கால் + தூக்கு(ஒரு தூக்கில் கால்பகுதி) = காற்றூக்கு

4. ஆடு + கால் (ஆட்டினது கால்) = ஆட்டுக்கால்
ஆடு + கால் (ஆடுகின்ற கால்) = ஆடு கால்

5. நாள் + காட்டி (நாளைக் காட்டுவது) = நாள் காட்டி
நாள் + குறிப்பு (நாளினது குறிப்பு) = நாட்குறிப்பு

6. பணம் + கொடை(பணம் தரும் கொடை)=பணக்கொடை
பணம் + கொடு ( பணத்தைக் கொடு) = பணங்கொடு

7. கனி + சுவை (கனியினது சுவை) = கனிச்சுவை
கனி + சுவை (கனியைச் சுவை) = கனி சுவை

8. தலை + கால் (தலையும் காலும்) = தலை கால்
தலை + காட்டு (தலையைக் காட்டு) = தலை காட்டு

9. செம்பு + கம்பி (செம்பால் ஆகிய கம்பி) = செப்புக்கம்பி
செம்பு+கலந்தான்(செம்பைக் கலந்தான்)=செம்பு கலந்தான்

10. மணல் + பரப்பு (மணலைப் பரப்பு) = மணல் பரப்பு
மணல் + பரப்பு(மணல் நிறைந்த நிலப்பகுதி)= மணற்பரப்பு





முனைவர் : இரா. திருமுருகன்

முகவரி : "ஏழிசைச் சூழல்"
62, மறைமலை அடிகள் சாலை
புதுச்சேரி – 605 001.

பேசி : 0413–2201191

மின்னஞ்சல் முகவரி : irathirumurugan @ yahoo.co.in

தாயார் : அரங்கநாயகி

தந்தையார் : அ. இராசு

பிறப்பு : 16. 03. 1929, கூனிச்சம்பட்டு, புதுச்சேரி.

கல்வித்தகுதி : முனைவர் (Ph.D) பொருள்: சிந்துப் பாடல்களின் யாப்பிலக்கணம், கருநாடக இசை மொழியியல் சான்றிதழ்கள், பிரஞ்சுமொழிப் பட்டயம் (D.L.F.Paris). கல்வி முதுவர் (M.Ed.)

சிறப்புப் பட்டங்கள் : நல்லாசிரியர் (நடுவணரசு), இலக்கணச்சுடர், இயலிசைச் செம்மல், மொழிப்போர் மறவர், முத்தமிழ்ச் சான்றோர் முதலியன.

நிறுவுநர் : புதுவைத் தமிழன்பர்கள் தமிழ்ப்பணி அறக்கட்டளை

பொறுப்புகள் : சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறைப் பாடத்திட்டக் குழு உறுப்பினர், புதுவைத் தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக் குழுவின் சிறப்புத் தலைவர், தெளிதமிழ்த் திங்களிதழின் ஆசிரியர்.

வெளியிட்ட நூல்கள் : 52

விருப்பமான புலங்கள் : தமிழிலக்கணம், இசைத்தமிழ்.